திருப்பூவணக் காசி



திருப்பூவணம் திருத்தல மகிமை
திருப்பூவணம் தலபுராணம்
திருப்பூவணம் 36ஆவது திருவிளையாடல்
திருப்பூவணம் திருமுறைகள்

உ

சிவமயம்



விநாயகக்கடவுள் வாழ்த்து

"இகபரம் தந்திடும் இந் நூற்கு இலக்கணச்
சொல் வழுவாமல் இடையூறு இன்றிப்
பகர அருள் புரிந்து அருளப், பனிவரை
மின்னனை எனும் பார்ப்பதியைப் பாங்கால்
திகழ் கலச முலை முகட்டில் தென் திருப்பூவணத்து
அரன் தாள் சேர்ந்து நல்கும்
புகர் முகத்துக் கருணை மதம் பொழி
கவுட்டுப் போதகத்தைப் போற்றுவாமே"



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
பரம்பரை அறங்காவலர் மாட்சிமை பொருந்திய
ராணி சாகிபா கௌரி வல்லப

து. ச. கா. மதுராந்தகி நாச்சியார் அவர்கள்

நூல் விவரம்

நூலின் பெயர்	:	***திருப்பூவணக் காசி***
நூற் பொருள்	:	திருப்பூவணத்தில் நடைபெற்ற 36ஆவது திருவிளையாடல். திருப்பூவணம் திருத்தல மகிமை, திருப்பூவணம் தலபுராணம், திருப்பூவணம் திருமுறைகள்.
ஆசிரியர்	:	காசிஸ்ரீ, முனைவர், நா. ரா. ***கி. காளைராசன்,*** M.A., M.Phil., Ph.D. (முன்னாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.) 28 அ, குருநாதர் கோயில் தெரு, கோட்டையூர் - 630 106 அலைபேசி - 824 826 6418 வாட்ஸ்ஆப் - 94435 01912 மின்னஞ்சல் : kalairajan26@gmail.com
உரிமை	:	நூலாசிரியர்
மொழி	:	தமிழ்
அச்செழுத்து	:	தமிழ் ஒருங்குறி
மின்னூல் வெளியீடு	:	பராபவ வருடம், வைகாசி 12 (26.05.2026)
நூல் அளவு	:	A5 (1/8 டெம்மி)
பக்கங்கள்	:	165

உ
சிவமயம்

இந் நூலில்
திருப்பூவணப் புராணமும்,
திருவிளையாடற் புராணமும்
திருப்பூவணம் திருமுறை பாடல்களும்
இடம் பெற்றுள்ளன.

நூற் பொருளடக்கம்

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்,

திரு. இளங்கோ, B.Com., B.L., மேலாளர்



இந்தியத் திருநாட்டில் குறிப்பாகத் தமிழ்த் திருநாட்டில் ஆன்மிக வளர்ச்சி வரலாற்றுப் பெருமையுடன் பயன் நிலைப் பெருமையையும் உடைய நிலையை அனைவரும் நன்கு அறிவோம். வேதங்களும், புராணங்களும், சமய நூல்களும், பன்னிரு திருமுறைகளும் நாலாயிரத் திவ்யபிரபந்தமும் இன்னபிறவும், நமக்கு ஆன்மிக வளர்ச்சியை மையமாகக் கொண்ட சமயத்தின் வழிக் கிடைத்த பெரும் சொத்துக்களாகும். பண்பாட்டுக் கருவூலங்களாகவும் அவைகள் திகழ்கின்றன.

மக்களின் சேவையையும், மகேசன் சேவையையும் தங்களது இரு கண்களாகப் போற்றி நல்லாட்சி செய்தனர் சிவகங்கை மன்னர்கள். சிவகங்கைச் சீமையிலுள்ள ஆலயங்களைச் சிறப்புடன் நிர்வகித்தும் நித்திய பூசைகள் நடைபெறத் தேவையான கட்டளைகளை ஏற்படுத்தியும் சிவகங்கை மன்னர்கள் அறங்கள் பல செய்து தர்மம் காத்து வந்துள்ளனர்.

சிவகங்கை சமஸ்தானத்தின் ஏழு சரகங்களில் மொத்தம் 108 திருக்கோயில்களும் அதன் உபகோயில்களும் உள்ளன. இவற்றுள் பாண்டியநாட்டின் பழம்பதிகளாய் விளங்கும் தேவாரப் பாடல் பெற்ற திருப்பூவணம், காளையார்கோயில் ஆகியனவும் அடங்கும். இவ்விரண்டு திருத்தலங்களும் பாண்டிய மன்னர்களாலும் சிவகங்கைச் சீமையை ஆண்ட மன்னர்களாலும் பெரிதும் போற்றி வணங்கப் பெற்ற திருத்தலங்களாகும். முடியுடைய மூவேந்தரும் ஒன்றாக வந்து திறை செலுத்தி வணங்கிய திருத்தலம் திருப்பூவணம் ஆகும். இச்சிறப்பு வேறு திருத்தலங்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தொன்மையும் சிறப்பும் மிகுந்த திருப்பூவணத்தையும் காளையார்கோயிலையும் நினைக்கும் போதெல்லாம் நண்பர் காளைராசனை நினைவு கொள்ள வேண்டியுள்ளது. காளையார்கோயிலில் பிறந்து, திருப்பூவணத்தில் வளர்ந்த நண்பர் காளைராசன் அவர்கள் திருப்பூவணம் மற்றும் காளையார்கோயில் தொடர்பான புராணம் மற்றும் வரலாற்றுச் செய்திகளை நூல்களாக எழுதி வெளியிடுவது இறைவன் இவருக்கு அளித்த பெரும் பேறு ஆகும்.

திருப்பூவணம் தொடர்பாக இவர் வெளியிடும் நான்காவது நூலாக இந்நூலை வெளியிடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. நூலாசிரியர் கி.காளைராசன் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துகள்.

(பா. இளங்கோ)

உ
சிவமயம்
யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்
யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராய

பேராசிரியர் இராம. திண்ணப்பன்,
ஆங்கிலத்துறை
மேனாள் பேராசிரியர்,
சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி,
தேவகோட்டை.

No. 5, P.L.S. சாலை,
தேவகோட்டை.

அணிந்துரை



நகரத்தார்கள் கோயில் திருப்பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், அதிலும் தேவகோட்டை நகரத்தார்கள் தமிழ்நாட்டில் மட்டு மல்லாமல் மற்ற மாநிலங்களிலும் கோயில் திருப்பணி செய்தவர்கள். திருப்பூவணத்தில் நேமங் கோவிலைச் சேர்ந்த தேவகோட்டை உ.மு. வகையறாவினர் தலைமுறை தலைமுறையாகத் திருப்பணிகள் செய்து வருகின்றனர்.

திருப்பூவணம் ஒரு குரு உபதேசத் தலமாகும். மாத்தியாந்தினி மற்றும் தியான காட்டர் ஆகிய இரு முனிவர்களும் 100 தேவவருடம் தவம் செய்து, சிவபெருமானிடம் தீட்சை பெற்ற திருத்தலமாகும். சுமார் 37 லட்சம் வருடத்திற்கு முன்பு, அம்பாள் தவம் செய்து அதன் பயனாகப் பாரிஜாதப் பூவால் சிவலிங்கம் தோன்றியது. அதனால் "பூவணநாதர்" என்ற பெயர் பெற்றது.

அம்பாள் ஆடிமாதம் மட்டும் வைகை ஆற்றுக்கு வடகரையில் தவம் செய்துள்ளாள். அந்த இடம்தான் "ஆடித்தபசு மண்டபம்". அம்பாள் தவம் செய்த இடம் என்பதால் திருஞானசம்பந்தர் அந்த இடத்திற்குச் சென்று வழிபட்டு வைகை ஆற்றைக் கடக்க முயன்றபோது ஆற்று மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன. எனவே அவர் ஆற்றைக் கடந்து திருக்கோயிலுக்குச் செல்லாமல் அங்கிருந்தபடியே ஆற்றின் தென்கரையில் உள்ள சிவலிங்கத்தை வணங்கிப் பதிகம் பாடியுள்ளார். "தென்திருப்பூவணமே" என்று முடியும் இப்பாடல்கள் முதல் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. பாடல் கேட்ட திருப்பூவணநாதர் நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞானசம்பந்தருக்குக் காட்சி அளித்துள்ளார். வைகையாற்றின் வடகரையில் இருந்தே திருப்பூவணநாதரின் திருவருளைப் பெற்ற திருஞானசம்பந்தர் மதுரை சென்று, சமணர்களை வென்று சைவத்தைத் தழைக்கச் செய்தார். பின்னர் மீண்டும் திருப்பூவணத்திற்கு வந்து திருக்கோயிலில் வழிபாடு செய்து 'அடிதொழ நன்மையாகுமே' என முடியும் ஒரு பதிகம் பாடி இறைவனை வணங்கியுள்ளார். இப்பாடல்கள் மூன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

திருப்பூவணத்தில், பொன்னனையாள் நடத்திய அன்னதானத்தில் மதுரை சொக்கநாதர், சித்தர் வடிவத்தில் தோன்றி இரசவாதம் செய்து, திருப்பூவண உற்சவரான

'அழகிய நாயகரைப்' பொன்னால் செய்வதற்கு வேண்டிய பொன்னை உருக்கிக் கொடுத்துள்ளார். இதனால் திருப்பூவணம் அருள்மிகு சொக்கநாதரால் திருப்பணி செய்யப்பட்ட திருத்தலம் என்ற பெருமை பெற்றுள்ளது. இது வேறுபிற திருத்தலங்களுக்கு இல்லாத பெருமையாகும்.

இக்காரணங்களால் மதுரை சொக்கநாதரை வணங்குவதற்கு முன் திருப்பூவணநாதரை வணங்கினால் மிகுந்த பலன் உண்டு.

ஆடித்தபசு மண்டபம் சிதிலமடைந்த நிலையில் இருந்தபோது, திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய இடம் புதுப்பொலிவுடன் விளங்கவேண்டும் என எந்நேரமும் நினைந்து தன்னை முழுமையாகத் திருப்பூவணநாதருடன் இணைத்து கொண்டவரும், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைப்பதிவாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான முனைவர் கி. காளைராசன் மற்றும் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி இயற்பியல் பேராசிரியர் டாக்டர் சந்திரமோகன், திருப்பூவணம் வழக்கறிஞர் திரு.சண்முகம் மற்றும் அடியார் பலரும் அடியேன் தலைமையில் இணைந்து ஆடித்தபசு மண்டப புனர்நிர்மாணத் திருப்பணியை மேற்கொண்டு திருப்பூவணநாதரின் திருவருளால் குடமுழுக்கை நன்முறையில் நடத்தி முடித்தோம். திருப்பூவணத்தில் ஸ்ரீ பொன்னனையால் செய்து வந்த அன்னதானத்தைத் தொடர்ந்து நடத்திடும் முகமாக ஸ்ரீலஸ்ரீ ஞானசேகரசுவாமி அவர்கள் அடியேன் தலைமையில் "ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையை" நிறுவியுள்ளார்கள்.

திரு. காளைராசன் அவர்கள் திருப்பூவணம் தொடர்பான புராணம் மற்றும் வரலாற்றைத் தொகுத்து நூலாக்கம் செய்து வெளியிடுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு அருள்மிகு திருப்பூவணன் மின்னாளின் திருவருள் கிடைத்திடப் பிராத்தித்துக் கொள்கிறன்.

தேவகோட்டை இப்படிக்கு
14-9-2008 பேராசிரியர் ராம. திண்ணப்பன்

வாழ்த்துரை



காஞ்சிப் பரமாச்சாரியாரால் "திருப்பணியில் மன்னர் பின்னோர்", "கோட்டைக் காப்பு வீரர்கள்" என்று அழைக்கப்பட்ட நகரத்தார் பெருமக்கள் கோயில் திருப்பணிக்கு என்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். தமிழ்நாட்டில் குறிப்பாகத் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற பாண்டி பதினான்கு தலங்களில் திருப்பூவணம் தனிச் சிறப்புடையது. அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் மூவர் பாடிய தேவாரமும் கிடைக்கப் பெற்றது. மணிவாசகப் பெருமான், கருவூரடிகள், அருணகிரிநாதரும் பாடியுள்ளார்கள்.

பொன்னனையாள் என்ற தேவரடியாருக்காக மதுரைச் சொக்கர் சித்தராக வந்து இரசவாதம் செய்து, 36ஆவது திருவிளையாடலை நிகழ்த்தித் தமக்குத் தாமே திருப்பணி செய்து கொண்ட திருத்தலம். அம்பாள், பிரம்மா, மகாவிஷ்ணு, திருமகள், சூரியன் காளிதேவி, நளச்சக்கரவர்த்தி இவர்கள் வழிபட்டதிருத்தலம். இத்தலத்தில் ஈசன் அம்பாளின் தவத்தினால் பாரிஜாதம் சிவலிங்கமாகத் தோன்றியதால் பூவணநாதர் என்று அழைக்கப்படுகிறார். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இத்தலம் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தின் நிருவாகத்திற்கு உட்பட்டது. இத்தலத்தில் எங்களது உ.மு. குடும்பத்தினர் பல திருப்பணிகளையும் செய்துள்ளார்கள். அதுபற்றி இந்நூலாசிரியர் திரு.காளைராசன் விளக்கி எழுதியுள்ளார்.

மேலும் ஏட்டுச் சுவடியாக இருந்த புராணத்தை மதுரை ஆதீனத்தின் விருப்பத்திற்கு இணங்க எனது முன்னோரால் அச்சுப் பிரதியாக 1896ஆம் ஆண்டு வெளிக் கொணரப்பட்டது. நண்பர் திரு.காளைராசன் அவர்கள் பூவணநாதரின் அருளினால் பாடல்களாக இருந்ததை உரையாக மாற்றி கணினிமூலம் தட்டச்சு செய்து நூலாக வெளியிட்டு உள்ளார்கள். மிக விரிவாகவும், நாம் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாகவும் முந்தைய நடைமுறைகளையும், தற்பொழுதைய நிலையையும், திருப்பணிகள் பற்றிய விபரங்களையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அவரது முயற்சி மிகவும் பாராட்டுக்கு உரியது. எனக்கு இப்படி ஒரு வாய்ப்பு அளித்த திரு காளைராசன் அவர்களுக்கு எனது நன்றி. அவரது அறிமுகத்தாலேயே எங்களது ஆன்மிக குரு மானாமதுரை ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகளையும், மாதாவையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேன்.

மதுரை
4-1-2017

இப்படிக்கு
உ.மு.பழ.ராம.பழ. சோமசுந்தரம் செட்டியார்,
தேவகோட்டை, (இருப்பு- மதுரை)

உ
சிவமயம்



முனைவர் நா. வள்ளி,
M.A., B.Ed., Ph.D.,
P.G.Dip.in Epigraphy & Archaeology
முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி – 3

7,லெட்சுமணன் செட்டியார் தெரு,
காரைக்குடி -- 1

ஆய்வுரை

பாண்டிநாட்டுப் பாடல்பெற்ற தலங்கள் பதினான்கு. அவற்றுள் தேவாரம் பாடிய மூவராலும் பாடப் பெற்ற சிறப்புடைய திருத்தலம் திருப்பூவணமாகும். இத்தலத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற புட்பவனநாதர் மேல் பாடப்பெற்ற தலபுராணம் 'திருப்பூவணப் புராணம்' ஆகும். இந்நூலைத் தன் 'இளநிலை ஆய்வு' மற்றும் 'முனைவர் பட்ட ஆய்வுக்காக' (M.Phil., Ph.D.,) எடுத்துக் கொண்ட காசிஸ்ரீ கி. காளைராசன் அவர்கள் திருப்பூவணம் தொடர்பாக, 'திருப்பூவணக்காசி' மற்றும் 'திருப்பூவணப் புராணம்' என்ற இருநூல்களை எழுதியுள்ளார். கூடுதலான தகவல்களுடன் திருப்பூவணக்காசி என்ற நூலை இப்போது வெளியிடுகிறார்.

எந்தவொரு நூலும் படிப்பவர்க்குப் பயன்தருவதாக அமைதல் வேண்டும் என்று நன்னூல் முதலிய இலக்கண நூல்கள் கூறுகின்றன. திருப்பூவணத் தலபுராணமும், திருப்பூவணத்துப் புனிதனை வணங்கியவர்கள் பெற்ற பேறுகளையெல்லாம் விளக்குகிறது. அச்செய்திகளை எல்லாம் விரிவாக எடுத்துரைத்து, இன்றைய சூழலில் அத்தலத்து இறைவனை வணங்கினால் என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதை நூலாசிரியர் காளைராசன் விளக்குவது சிறப்பாகும்.

தலத்தின் பெயர்க்காரணமும், திருப்பூவணக் கோயிலின்கண் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தெய்வங்கள் பற்றிய விவரங்களும் முறையே அடுத்தடுத்த தலைப்புக்களில் கூறப்பட்டுள்ளன. 'திருப்பூவணம்' என்பதே சரியான பெயர் என்று அறுதியிட்டுச் சொல்லும் ஆசிரியர் அத்தலத்திற்கு

விளங்கும் வேறு பெயர்களையும் குறிப்பிட்டு அதற்கான காரணங்களையும் விளக்குகிறார்.

பூங்கதலி, படிமமாகிச் சிவலிங்கமாக விளங்குவதை பூவணப் புராணப்பாடல் மூலம் எடுத்துக் காட்டுகிறார். 'வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்' என்று அப்பரடிகள் பாடிய வண்ணம் நெற்றியில் திரிசூலத்துடன் காட்சிதரும் சிவலிங்கத்தின் பாதங்கள் ஈசானிய திசையில் உள்ளது என்றும் (அதாவது பாரிசாத மரத்தின் வேரானது ஈசானிய திசையில் உள்ளது என்றும்), அதன் காரணமாகத்தான் கருவறை மற்றும் கோபுரம் ஆகியவை ஈசானிய திசையில் அமைந்துள்ளன என்றும் எடுத்துரைப்பது ஆன்மிக அன்பர்களுக்குப் புதிய செய்தியாகும். மேலும் இதுபோன்று ஈசானிய திசையில் அமைந்துள்ள கோயில் வேறு எங்கும் இல்லை என்றும் இக்கோயில் சிதம்பரத்தை நோக்கியிருக்கிறது என்றும் கூறுவது இத்தலத்தைப் பற்றிய சிறப்பான செய்திகளாகும்.

இந்தியாவிலுள்ள பன்னிரு சோதிர்லிங்கத் தலங்கள் என்று குறிப்பிடப்பட்டவற்றுள் தமிழகத்தில் இராமேசுவரம் தவிர மற்ற அனைத்தும் வடநாட்டிலுள்ளவை. ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதியாக விளங்கும் அண்ணாமலையார் அருள்பாலிக்கும் அருணைத்தலம் பன்னிரு சோதிர்லிங்கத் தலங்களுள் குறிப்பிடப்படாவிட்டாலும் அது சோதித்தலமே. அண்ணாமலையாரைப் போல திருப்பூவணநாதரும் சோதி வடிவானவர் என்கிறார் நூலாசிரியர். "சோதிவடிவம் ஆகியே முன்னை நாளில் முளைத்து எழுந்தருள் மூர்த்தி" என்ற திருப்பூவணப் பாடலடியை எடுத்துக்காட்டி திருப்பூவணத்திலுள்ளது சோதிலிங்கம் என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மதுரையைப் போன்றே வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது திருப்பூவணம். இங்குள்ள கோயிலின் வடகரையில் உள்ளது ஆடித்தபசு மண்டபம். இந்த மண்டபத்திலிருந்து திருப்பூவணநாதரின் தீபாராதனையைத் தரிசிக்க முடியும் என்றும் கூறுகிறார். மேலும் திருக்கோயிலுக்கும் ஆடித்தபசு மண்டபத்திற்கும் இடையே வைகை ஆற்றின் நடுவில் ஒரு சிவாலயம் இருந்தது என்பதை அதன் எச்சங்களாகக் காணப்படும் சிதைந்த கற்கட்டிட அமைப்பின் மூலம் எடுத்துக்காட்டி, திருப்பூவணப் புராணப் பாடலையும் (1263) சான்று காட்டி, அந்த ஆலயத்தினை மீண்டும் புதுப்பித்தல் வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைக்கிறார்.

திருப்பூவணத்தில் வசித்த பொன்னனையாள் என்ற தேவரடியாரின் பொருட்டு மதுரை சுந்தரேசர் இரசவாதம் செய்த நிகழ்வு முன்னரே இரு நூல்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டவைதான். எனினும், அன்பு, தொண்டு, பக்திக்கு இறைவன் ஆட்படுவான் என்பதையும் அன்னதானத்தின் சிறப்பினையும் எடுத்துக்காட்டி திருவிளையாடல் புராணத்தில் இடம் பெற்றுள்ள இரசவாதம் செய்த திருவிளையாடல் தொடர்பான 'இரசவாதம் செய்த திருவிழா' மீண்டும் திருப்பூவணத்தில் நடைபெற வேண்டும் என்றும்

அதற்கான முயற்சிகளை 'ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை' மேற்கொண்டு வருகிறது என்பதையும் இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது.

மேலும், திருப்பூவணநாதர் கோயிலைச் சுற்றியுள்ள பிற கோயில்கள், அத்தலத்தில் நகரத்தார்கள் செய்த திருப்பணிகள், பொன்னனையாள் அறக்கட்டளை மற்றும் தெய்வீகப் பேரவை மேற்கொண்டுள்ள பணிகள் அக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள், வைகை ஆற்றில் கிடைத்த பழமையான நாணயங்கள், திருப்பூவணத்தின் புவியியல் அமைப்பு போன்ற பல செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

திருப்பூவணம் தொடர்பான அனைத்து இலக்கியச் செய்திகளும் மூலபாடத்தோடு ஒருங்கே இந்நூலில் இடம் பெற்றிருப்பது சிறப்பு. ஒவ்வொரு கட்டுரையிலும் ஆங்காங்கே திருப்பூவணம் தொடர்பான நிழற்படங்கள் இடம் பெற்றிருப்பது, அத்தலத்தைக் கண்முன்னே காட்டுவதாக உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் திருப்பூவணத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் முழுமையானதொரு நூல் இது எனலாம். மிகுந்த முயற்சியுடன் நூலை எழுதியுள்ள காசிஸ்ரீ கி. காளைராசன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காரைக்குடி
28.01.2017

அன்புடன்
(நா. வள்ளி)

திருப்பூவணம் - அறிமுகம்

1. திருப்பூவணத்துப் பெருமைகள்

அன்னை பாரதபூமி ஆன்மிகத்தால் பெருமை பெற்றது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறுவர். திருப்பூவணத்தில் ஊரெங்கும் கோயில்கள் நிறைந்து உள்ளன. திசைகளெங்கும் தீர்த்தங்கள் உள்ளன. தரையெங்கும் விருட்சங்கள் முளைத்துள்ளன. இவ்வகையில், திருப்பூவணத்தில் தலம் மூர்த்தி தீர்த்தம் விருட்சம் என்று அனைத்தும் சிறப்புற்றுத் திகழ்கின்றன.

தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் சமணமும் புத்தமும் தலையெடுத்து வளரத் துவங்கி இருந்தன. மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனை மீண்டும் சைவத்திற்கு மாற்றும் பொருட்டு, அரசி மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தரை அழைத்து வரச் செய்தார். திருஞானசம்பந்தர் திருப்புத்தூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் மதுரையின் கிழக்கு எல்லையாக விளங்கும் திருப்பூவணத்திற்குச் செல்கிறார். அங்கே வைகை ஆற்றின் வடகரையில் அம்பாள் ஆடிமாதம் தவம் செய்த இடம் உள்ளது. அந்த இடத்திலிருந்து வைகை ஆற்றைக் கடந்து தென்கரையில் உள்ள திருப்பூவணம் கோயிலுக்குச் செல்ல வேண்டும். திருஞானசம்பந்தர் அந்த இடத்தில் வைகை ஆற்றைக் கடக்க முயற்சிக்கும் போது வைகை ஆற்றின் மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சி அளித்துள்ளன. எனவே ஆற்றுமணல்களை மிதிக்க அஞ்சிய திருஞானசம்பந்தர் அந்த இடத்திலிருந்தபடியே "தென்திருப்பூவணமே" என்று முடியும் பதிகம் பாடி இறைவனை வழிபடுகிறார். பாடல் கேட்ட சிவபெருமான், நந்தியைச் சற்றே சாய்ந்திருக்கச் சொல்லி ஆற்றின் மறுகரையில் நின்று பதிகம் பாடி வணங்கும் திருஞான சம்பந்தருக்குக் காட்சியருளியுள்ளார். இதனால் திருப்பூவணத்தில் இன்றும் நந்தியின் முதுகு சாய்ந்திருக்கும், நந்தி மறைக்காது. வைகை ஆற்றின் வடகரையில் உள்ள ஆடித்தபசு மண்டபத்தில் இருந்தபடியே தென்கரையில் உள்ள சிவலிங்கத்தை வழிபடலாம்.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாண்டிய நாட்டில் இறைவனைப் பாடிப் பணிந்த இடங்கள் பலவாகும். அவற்றுள் அவர்களின் பாடல்கள் கிடைக்கப் பெற்ற திருத்தலங்கள் பதினான்கு ஆகும். 1) மதுரை, 2) திருப்பரங்குன்றம், 3) திருவிராமேச்சுரம், 4) திருவாடானை, 5) திருப்புத்தூர், 6) திரு ஏடகம், 7) திருநெல்வேலி,

8) குற்றாலம், 9) ஆப்பனூர் (மதுரையின் வடகரையில் உள்ள ஊர்), 10) திருச்சுழியல், 11) திருப்புனல்வாயில், 12) கொடுங்குன்றம் (பிரான்மலை), 13) காளையார் கோயில், 14) திருப்பூவணம்.

இந்தப் பதினான்கு திருத்தலங்களையும் "பாண்டி பதினான்கு" என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். இவற்றுள் மிகவும் பழமையானது பாண்டியநாட்டின் தலைநகராக விளங்கும் மதுரை ஆகும். ஆனால் மதுரை மாநகரம் இந்திரனுடனான போரினாலும், கண்ணகி இட்ட தீயினாலும், வையை ஆற்றுப் பெருக்கினாலும் அழிந்தழிந்து மீண்டும்மீண்டும் உயிர் பெற்றது. ஆனால், திருப்பூவணத் திருத்தலம் அழிவிற்கு உட்படாமல் தொன்மைக்காலத்திலிருந்து அப்படியே பழைமையுடன் உள்ளது.

பார்வதி தேவியார் தான் அறிந்து செய்த பாவம் போக்க இத்திருத்தலம் வந்து பாரிசாத மரத்தின் அடியிலிருந்து தவம் செய்தார். அப்போது சிவபெருமான் அம்மரத்தின் அடியில் சிவலிங்கமாய் முளைத்து, உமையம்மையின் பாவத்தை நீக்கியருளினார்.

திருப்பூவணநாதரை (சிவலிங்கத்தை) முதலில் வணங்கிய பின்னரே மின்னம்மையை (சௌந்தரநாயகியை) வணங்க வேண்டும்.

திருத்தலத்தின் புராதணச் சிறப்புகள்

1) இச்சிவலிங்கத்தைக் கதிரவன் (சூரியன்) வழிபட்டு, நவக்கிரகங்களுக்கும் தலைவனாகத் தொடர்ந்து நீடித்து இருக்கும் வரம் பெற்றுள்ளான்.

2) பிரம்ம தேவன் அறிந்து செய்த பாவத்தை நீக்கிய திருத்தலம்

3) மகாவிஷ்ணு சலந்திரனைக் கொல்லச் சக்கராயுதம் பெற்ற திருத்தலம்.

4) காளிதேவி, சிவலிங்கம் வைத்துப் பூசித்த திருத்தலம்

5) திரணாசனன் என்பவன் வீடு பேறு அடைந்துள்ளான். துன்மஞ்ஞன் என்ற மாபாவி நற்கதி அடைந்துள்ளான்.

6) தருமஞ்ஞன் என்ற அந்தணன் கொண்டு வந்த அஸ்திக் கலசத்தில் இருந்த எலும்புகள் பூவாய் மாறிய திருத்தலம்.

7) உற்பலாங்கி என்ற பெண்ணின் திருமணத்தடைகள் நீங்கி, நல்ல கணவனை அடையப்பெற்று தீர்க்க சுமங்கலியாய் வாழும் வரம் பெற்றுள்ளாள்.

8) அறிந்து செய்த பாவங்களை அகற்றும் திருத்தலம்

9) செங்கமலன் என்பவனின் பாவங்கள் அனைத்தையும் நீக்கிய திருத்தலம்

10) திருமகள் (இலக்குமிதேவி) சாபவிமோசனம் பெற்ற இடம்

11) பார்வதி தேவியார் இறைவனின் திருவருளை வேண்டித் தவம் செய்த திருத்தலம்

12) சுச்சோதி என்ற அரசனுடைய பிதுர்கள் (இறந்துவிட்ட முன்னோர்கள்) நேரில் வந்து பிண்டம் (இறந்தவர்களுக்குப் படைக்கப்படுவது) பெற்றுக்கொண்டு, அவனை ஆசிர்வதித்த திருத்தலம்

13) தீர்த்தங்கள் பல உள்ள திருத்தலம்

14) சலந்திரன் என்ற தவளைக்குச் சக்கரவர்த்தியாய் இருக்கும் வரம் அருளப்பட்ட திருத்தலம்

15) நள மகாராசாவின் கலியின் கொடுமையை அகற்றி அவனுக்கு மனச்சாந்தி அளித்த திருத்தலம்

16) மாந்தியந்தின முனிவருக்கும் தியானகாட்ட முனிவருக்கும் சிவபெருமான் சிதம்பர நல் உபதேசம் வழங்கிய இடம்

17) தாழம்பூ பொய்சொன்ன பாவம் நீங்க வேண்டி, சிவபெருமானை வணங்கி வழிபட்ட திருத்தலம்

18) மூவேந்தர்களும் (சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்) ஒன்றாக வந்து வழிபட்டுத் திறை செலுத்திய திருத்தலம்

19) திருப்பூவணன் நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞானசம்பந்தருக்குக் காட்சி அருளிய திருத்தலம்

20) திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் ஆகியோர் வணங்கி வழிபட்டுத் தேவாரம் பாடிய திருத்தலம்

21) மாணிக்கவாசகர் வைப்புத் தலமாகப் பாடியுள்ள திருத்தலம்

22) கருவூர்த் தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்ற திருத்தலம்

23) அருணகிரிநாதர் திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம்

24) மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சித்தர் வடிவில் வந்து இரசவாதம் செய்து திருவிளையாடல் நடத்திய திருத்தலம். இது ஒரு தலைசிறந்த சித்தர் பூமி.

25) பொன்னனையாள் என்ற நடனமாதுவுக்கு அருள் வழங்கிய திருத்தலம்.

26) கோரக்கசித்தர் மற்றும் கத்தரிக்காய்சித்தர் முதலான பல சித்தர்கள் சீவசமாதியில் வாழும் சிவபூமி.

சமயங்கள் தோன்றியதற்குக் காரணமாக இரண்டு கொள்கைகள் கூறப்படுகின்றன. "காலம் சென்ற முன்னோர்களை வணங்குவதிலிருந்து

சமயம் உருவானது". என்றும், "இயற்கை சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வணங்குவதிலிருந்து உருவானது" என்றும் கூறுகின்றனர். இவ்விரண்டு வழிபாடுகளும் திருப்பூவணத்தில் சிறப்பாக உள்ளன.

இவ்வாறு மிகவும் தொன்மைமிக்கதாகவும், அதிகச் சிறப்புகளுடையதாகவும் திருப்பூவணத் திருத்தலம் விளங்குகிறது. இங்கு சுயம்புலிங்கமாகத் தோன்றிய அருள்மிகு திருப்பூவணனின் அருமை பெருமைகளும், சௌந்தரநாயகி என்று அழைக்கப்படும் அருள்மிகு மின்னாளின் அன்பும், அருளும் எடுத்துக் கூறப் பெற்றுள்ளன.

1. பரிகாரத் திருத்தலம்

ஆன்மிகம் மற்றும் சோதிட அடிப்படையில் திருப்பூவணம் ஒரு சிறந்த பரிகாரத் திருத்தலம் ஆகும். 1) முன்னோர்களுக்கு முத்தி அளிக்கும். 2)பிதுர்சாபம், பிதுர்தோசம் நீக்கும், 3)சூரியதோசம் போக்கும், 4)பெண்களின் திருமணத்தடைகளை நீக்கும், 5) பிரிந்து வாழும் கணவன் மனைவி சேர்ந்து வாழ வழி வகுக்கும். 6)கல்வித்தடை நீக்கும் குருஸ்தலம். 7) புத்திசுவாதீனம் இல்லாமல் இருப்பதை நீக்கும்.8) சனிதோசம் நீக்கும். 9) அறிந்து செய்த பாவம் நீக்கும். 10) குழந்தைப்பேறு கிடைக்கும்.

1.1 திருப்பூவணக்காசி

திருத்தலங்களைக் காசிக்கு ஒப்பாகச் சொல்லும் வழக்கம் உள்ளது. "திருவெண்காடு, திருவையாறு, மாயூரம், திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம் போன்ற தலங்கள் காசிக்கு ஒப்பாகச் சொல்லப்படும் திருத்தலங்களாகும்".

"மருவிய காசி வாசம் அக்கண் மிக்கு உடல் வருந்தும்
பொருவிர் தென் பூவணந்தான் பொருந்திடா மெய்வருத்தம்
அரியன பொருள் ஒன்றில்லை யாதலால் ஐந்தவித்தீர்
கருதில் அப் பூவணந்தான் காசியில் அதிகமாகும் "

(திருப்பூவணப் புராணம் பாடல் 441)

என்ற திருப்பூவணப் புராணப் பாடலில், திருப்பூவணம் காசியினும் சிறப்புடையதாகச் சொல்லப் பெற்றுள்ளது. இறுதிக்காலத்தில் இத்தலத்தில் இறந்தோருக்கு முக்தி உண்டு.

பிற திருத்தலங்களிலிருந்து வயோதிக காலத்தில் திருப்பூவணம் வந்து சேர்ந்து இறந்தவர்களுக்குச் சிவபிரான் தாரகமந்திரமாகிய பிரணவ மந்திரத்தை

உபதேசம் செய்தருளுவார். ஆதலால் அந்திமக்காலத்தில் (வாழ்க்கையின் இறுதிக் காலத்தில்) திருப்பூவணத் தலத்தில் யாவரும் வசித்தல் வேண்டும். காசியின் தட்பவெப்பத்தினால் பெரிதும் உடல் வருந்தும். ஆனால் திருப்பூவணத்தில் சமநிலையிலான தட்பவெப்பம் நிலவுவதால் உடல் வருத்தமுறாது. ஆதலாற் காசிப்பதியினும் புட்பவனம் ஏற்றதாகும்[1].

இதனால் பலரும் தங்களது முக்தியின் பொருட்டு, இறுதிக் காலத்தில் இத்தலத்திற்கு வந்து தங்கி இருக்கின்றனர்.

1.1.1 காசிக்கு வீசம் கூட

காசித்திருத்தலத்தில் இறந்தால் முக்தி என்று புகழ்ந்து பேசப்படுகிறது. ஆனால் திருப்பூவணத் திருத்தலத்தில் இறந்தோரின் அங்கங்களில் ஏதேனும் ஒரு சிறுதுண்டு விழுந்துபட்டால் கூட முக்தி கிடைக்கும் என்று புராணத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது[2].

காசியில் கிடைத்திடும் பலன்கள் எல்லாம் திருப்பூவணத்திலும் கிடைத்திடும். இதில் ஐயம் ஏதும் இல்லை என்று திருப்பூவணப் புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது[3].

பாவங்களைப் போக்கிட காசி சென்று இறைவனை வணங்கி வருகின்றனர். ஆனால், சிலர் காசியிலேயே பாவங்களைச் செய்கின்றனர். இவ்வாறு காசியில் செய்யும் பாவங்கள் அங்குள்ள கங்கையில் தீர்த்தமாடி காசி விசுவநாதரை வணங்கினாலும் நீங்கமாட்டா. ஆனால் இப் பாவங்கள் திருப்பூவணத் திருத்தலத்திற்கு வந்து இறைவனை வணங்கினால் நீங்கிவிடும். மேலும் இத் திருப்பூவணத்தில் செய்த பாவம் இத் திருப்பூவணத்திலேயே ஒழியும் என்று நாரதமுனிவர் கூறியதாகத் திரணாசனன் முக்தி பெற்ற சருக்கத்திலே கூறப்பெற்றுள்ளது.

---

[1] " மருவிய காசி வாசம் அக்கண் மிக்கு உடல் வருந்தும்
பொருவில் தென் பூவணந்தான் பொருந்திடா மெய்வருத்தம்
அரியன பொருள் ஒன் றில்லை யாதலால் ஐந்தவித்தீர்
கருதில் அப் பூவணந்தான் காசியில் மிகுதியாகும்.

திருப்பூவணப் புராணம்- மணிகன்னிகைச் சருக்கம் – பாடல் எண் 35

[2] திருப்பூவணப் புராணம் – மணிகன்னிகைச் சருக்கம் – பாடல் எண்கள் 37 முதல் 41 முடிய.

[3] "காசிகையை யீசன் அடி காமர் புனல் மூழ்கி
நேசமொடு இறைஞ்சினர் நேர்ந்த பலன் எல்லாம்
பூசுரர்கள் ஆசை தரு பூவணம் எனும் பேர்
ஆசில் பதி வந்தடையும் ஐயம் இல்லை அம்மா"

திருப்பூவணப் புராணம் – திரணாசனன் முத்தி பெற்ற சருக்கம் – பாடல் எண் 81

1.2 எலும்பு பூவாக மாறிய திருத்தலம்

தருமஞ்ஞன் கொண்டுவந்த அஸ்திக்குடம் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே விழுந்துவிட்டது. உடனே தருமஞ்ஞன் தீர்த்தத்தில் இறங்கி குடத்தை எடுத்துப் பார்த்தான். அதனுள்ளே இருந்த எலும்பு முழுவதும் தாமரை மலரும், உற்பல மலருமாக இருந்தன. இதனால் சிவபெருமான் தருமஞ்ஞனின் முன்னோர்களுக்கு முக்தி அருளினார். தருமஞ்ஞனும் அவனது ஆயுள் முடிந்தவுடன் முக்தி பெற்றான். இத்தலம் "காசியைவிடச் சிறப்புடையது".

1.3 பிதுர்முக்தி[4] திருத்தலம்

அறம், பொருள், இன்பத்திற்கு அப்பால் "வீடுபேறு அடைதல்" சிறப்பித்துக் கூறப்படுகிறது. திருவள்ளுவர் "தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல்(சுற்றத்தார்), தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்புதல் தலை" என்று பிதுர்களைத் தெய்வத்திற்கும் முன் வைத்துப் பாடியுள்ளார்.

மனிதவாழ்வின் முடிவில் ஆன்மாவானது இறைவனது திருவடியைச் சேர்வதை வீடுபேறு அடைதல் என்று குறிப்பிடுகின்றனர். நினைத்தால் முக்தி, பார்த்தால் முக்தி, வணங்கினால் முக்தி, வாழ்ந்தால் முக்தி, இறந்தால் முக்தி என்று ஒவ்வொரு தலமும் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. இவையாவையும் ஒருவன் வாழ்கின்ற காலத்தில் வழிபடும் தலங்களாக உள்ளன. உயிர்நீத்த ஒருவனை வீடுபேறு அடையச் செய்ய வேண்டும் என்றால் அவனது சந்ததியினர் திருப்பூவணத்திலே எள் (தில) தர்பணம் செய்ய வேண்டும் என்று சுச்சோதி அரசனிடம் நாரத முனிவர் கூறுகிறார்.

"திருப்பூவணத் தலம்தான் தனக்கும், அரும் தவர்க்கும், அரும் பிதிர்கள் ஆயினோர்க்கும், சித்தம் மகிழ் தலம். அதனில் சென்று அடைந்து, அன்பிதிர்களுக்குத் திலோதகத்தைப், புத்த அமுதத் தடம் பொருந்து புனலாடி அளிக்கின், எதிர் பொருந்தி வாங்கி, முத்தி அடைகுவர். அதனான் முயன்றிடுதி, இது மூது உண்மை முழவுத் தோளாய்" (திருப்பூவணம் புராணம் பாடல் 1225)

---

[4] திருப்பூவணப் புராணத்தில் "பிதிர் முத்தி" என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனாலும் இன்றைய நாட்களில் "பிதுர் முக்தி" என்று அனைவரும் சொல்லி வருகின்றனர். எனவே இந்தப் புத்தகத்தில் பிதுர், முக்தி என்ற சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இறந்தோர் பொருட்டுத் திருப்பூவணத்திலே, திதி தர்ப்பணம் போன்ற கர்மகாரியங்களைச் செய்தால் நீத்தார் நேரில் வந்து பிண்டத்தைப் பெற்றுக்கொண்டு முக்தியடைவர் என்று புராணத்திலே கூறப்பட்டுள்ளது. திருப்பூவணம் இறந்துவிட்ட முன்னோர்களுக்கு முக்தி அளிக்கக்கூடிய திருத்தலமாகத் திகழ்கின்றது. இக்காரணத்தினால், திருப்பூவணம், "பிதுர் மோட்ச புரி, பிதுர் முக்திபுரம் என அழைக்கப்படுகிறது.

"திக்கு உலகெலாம் புகழ் சிதம்பரம் அது என்றும்
பக்கம் உறு தக்கிண காசிப்பதி அது என்றும்
தக்க சதுர்வேதபுரம் என்றும் அதுசார் பேர்
மிக்க பிதிர்முத்திபுரம் என்று நனிமேவும்" (**பாடல்** 303)

திருப்பூவணத்தில் தர்ப்பணம் செய்தால் அவற்றை முன்னோர்கள் நேரில் வந்து பெற்றுக் கொண்டு ஆசிர்வதிக்கின்றனர் என்பது ஐதீகம். இங்கே சுச்சோதி என்ற வடநாட்டு மன்னனின் முன்னோர் நேரில் வந்து பிண்டம் பெற்றுக் கொண்டு முக்தி அடைந்துள்ளனர்.



சந்நிதி முன், வைகை ஆற்றின் தென்கரையில் தங்களது முன்னோர்களுக்கு முக்தி வேண்டிச் சிரார்த்தம், திதி, தர்ப்பணம் செய்கின்றனர்.

1.3.1 மோட்ச தீபம்

மரணமடைந்த முன்னோர்கள் முத்தியடைய வேண்டித் திருப்பூவணத்தில் மோட்சதீபம் ஏற்றி வழிபாடு செய்கின்றனர். இவ்வாறு திருப்பூவணத்தில் மோட்சதீபம் ஏற்றுவதால் இறந்தோர் நரகவேதனை நீங்கி மோட்சம் அடைகின்றனர் என்பது ஐதீகம்.

1.4 சூரியதோசப் பரிகாரத் தலம்

நவக்கிரகங்களுக்கும் தலைவனாகத் தொடர்ந்து இருந்திட வேண்டிச் சூரியன் வழிபட்ட திருத்தலம் திருப்பூவணம் ஆகும். முடியுடைய மூவேந்தரும் தங்களது ஆட்சி நிலைத்திருக்க வேண்டி, ஒன்றாக வந்து திறைசெலுத்தி வணங்கிய திருத்தலம். எனவே அரசியல் தலைவர்கள் தொடர்ந்து ஆட்சியில் நிலைத்திடவும், அரசு அதிகாரிகள் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்திடவும் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று முறைப்படி இங்கே வழிபட்டால் அவர்களது ஆட்சி நிலைபெறும்.

1.5 பிரிந்து வாழும் கணவன் மனைவி சேர்ந்துவாழப் பரிகாரத்தலம்

பரமேசுவரனைப் பிரிந்த பார்வதிதேவி திருப்பூவணத்திலே தவம் செய்து சிவலிங்க பூசை செய்தாள். இதனால் பரமேசுவரன் நேரில் தோன்றி பார்வதிதேவியைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். வாலகில்லி முனிவரது சாபம் பெற்ற மகாலெட்சுமி மகாவிஷ்ணுவை விட்டுப் பிரிந்து திருப்பூவணத்திலே தவம் செய்து சிவலிங்க பூசை செய்தாள். இதனால் மகாவிஷ்ணு நேரில் வந்து மகாலெட்சுமியைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள் திருப்பூவணத்திலே தங்கி சிவலிங்க பூசை செய்து வழிபட்டால், தோசம் நீங்கி, கணவனுடன் சேர்ந்து நல்வாழ்க்கை வாழும் பேறு கிடைக்கப் பெறுவர்.

1.6 பெண்களின் திருமணத்தடைகளை நீக்கும் பரிகாரத்தலம்

உற்பலாங்கி என்ற பெண்ணிற்கு இருபது வரன்கள் நிச்சயமாகித் திருமணத்திற்கு முன் இறந்துபோயினர். அந்தப் பெண்ணின் திருமணத் தடையை நீக்கிய திருத்தலம் திருப்பூவணம் ஆகும். திருமணத் தடையுள்ள பெண்கள் அருள்மிகு மின்னாளுக்கு (சௌந்தரநாயகிக்கு) உற்பலம், தாமரை மலர்களைக் கொண்டு வழிபட்டால் திருமணத்தடைகள் நீங்கி, நல்ல வரன் அமைந்து நல்லகுடும்ப வாழ்க்கை வாழ்வர்.

1.7 கல்வித்தடை நீக்கும் பரிகாரத்தலம்

சிவபெருமான் திருப்பூவணத்தில் குருவாகத் தோன்றி மாந்தியாந்தினி தியானகாட்டர் என்ற இரண்டு முனிவர்களுக்கும் குருஉபதேசம் செய்து அருளினார். இக்காரணத்தினால் இது ஒரு குருஉபதேசத் திருத்தலமாக விளங்குகிறது. இங்கே, குருவிடம் உபதேசம் கேட்பது சிறப்புடையது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர், அவர்களுடைய ஆசிரியருடன் இங்கு வந்து வணங்குவது சிறப்புடையது.

1.8 சனீசுவரர் (தனிச் சந்நிதி) மனச்சஞ்சலங்கள் நீங்கும் பரிகாரத்தலம்

திருநள்ளாறு போன்ற திருத்தலங்களில் சனீசுவரருக்குத் தனிச்சந்நிதி இருப்பது சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. இதே போன்று இங்கும் நளமகாராசனால் பூசிக்கப் பெற்ற சனீசுவரருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. தனக்கு நேர்ந்த துன்பங்களை நினைந்து நளமகாராசன் பெரிதும் மனம் வருந்தி இருந்தான். அவன் திருப்பூவணத்தில் உள்ள இந்தச் சனீசுவரரை வணங்கியதால் அவனது மனவருத்தம் நீங்கியது. எனவே இத்தலம் சனீசுவரர் பரிகாரத்தலமாக விளங்குகிறது. ஏழரைச்சனி, அர்த்த அட்டமச்சனி, அட்டமச்சனி, முதலான காலங்களில் உரிய பூசைகள் செய்து வேண்டிய வரங்களைப் பெறலாம். மனநிம்மதி அடையலாம்.

1.9 அறிந்து செய்த பாவம் போக்கும் -

திருப்பூவணத்திருத்தலம் அறிந்து செய்த பாவங்களைப் போக்கும் திருத்தலமாகும். பார்வதிதேவி,

மகாலெட்சுமி, பிரம்மன் முதலானோர் அறிந்தே செய்த பாவங்களைப் போக்கிக் கொள்ளத் திருப்பூவணம் வந்து முறைப்படி வழிபாடு செய்துள்ளனர். தாழம்பூ அறிந்தே பொய் சொன்ன பாவம் நீங்கப் பெற்ற திருத்தலம் திருப்பூவணம் ஆகும்.

1.10 குழந்தை வரம் - மணிகன்னிகைத் தீர்த்தமாடுவோரின் பாவங்கள் நீங்கப்பெறும், சுமங்கலிகள் நீராடினால் மக்கட்பேறு பெறுவர்.

1.11 பாண்டிய நாட்டின் நவக்கிரகத் திருத்தலங்கள்

ஞாயிறு - பாண்டியநாட்டில் உள்ள நவக்கிரகத் திருத்தலங்களில் திருப்பூவணம் சூரியத்தலம் ஆகும். இதன் காரணமாகத்தான் திருப்பூவணத்தில் பங்குனிமாதம் வளர்பிறையில் அக்னி நட்சத்திரமாகிய கார்த்திகையில் கொடியேற்றம் நடைபெற்று, உத்திரத்தில் திருவிழா முடிவடையும்.

திங்கள் - மதுரை சந்திரனுக்குரிய திருத்தலம் ஆகும்.

செவ்வாய் - திருப்பரங்குன்றம்

புதன் - திருமோகூர்

வியாழன் - மானாமதுரை

வெள்ளி – திருப்பாச்சேத்தி அருள்மிகு 'மருநோக்கும் பூங்குழலி அம்மன்' உடனாய 'திருநோக்கிய அழகியநாத சுவாமி' கோயில் சுக்கிரத்தலம் ஆகும். இங்கு சிவலிங்கத்திற்கு துளசியால் அர்ச்சனை நடைபெறும்.

சனி – திருவாதவூர் சனீசுவரர் பரிகாரத் திருத்தலம் ஆகும். சனி வக்கிரத்தில் உள்ள காலத்தில் இங்கு வழிபடுவது சிறந்த பரிகாரம் ஆகும்.

ராகு – பரமக்குடி அருகே நயினார்கோயில்

கேது – மதுரையில் உள்ள " இன்மையில் நன்மைதருவார் " கோயில் கேதுஸ்தலம் ஆகும். இங்கு மாசிமாதத்தில் வளர்பிறை அசுபதியில் கொடியேற்றம் நடைபெற்று, மகத்தில் தீர்த்தவாரி நடைபெறும்.

2. தலத்தின் பெயர்

தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இத்திருத்தலம் "திருப்பூவணம்" என்று பெயர் விளங்கியுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இப்பெயரை"Thiruppuvanam" என்று எழுதித் "திருப்புவனம்" என்று வாசித்துள்ளனர். திருப்பூவணம் என்ற பெயரைத் திருப்புவனம் என்று அழைப்பது தவறாகும். "Thiruppoovanam" திருப்பூவணம் என்று அழைப்பதே சரியாகும்.



பாரிசாதப் பூவின் காம்புப் பகுதி படிமம் ஆகிச் சிவலிங்கமாக மாறியுள்ளதைக் காட்டும் சிற்பம் ஒன்று கல் தூணில் வடிக்கப் பெற்றுள்ளது.

2.1 திருப்பூவணன் பெயர்க்காரணம்

அம்பலவாணன், அருணன், அருச்சுணன், ஆரணன், இராவணன், உதயணன், உமணன், உவணன்(கருடன்), கண்ணன், கருப்பணன், கர்ணன், குணன், குமணன், கும்பகர்ணன், சரணவன், தீவணன், தேவணன், பாவணன், பாணன், வருணன், விபீசணன் அல்லது விபீடணன் என்ற பெயர்களை அனைவரும் அறிந்துள்ளோம்.

திருப்பூவணத்தில் உள்ள மூலலிங்கத்திற்குப் "பூவணன்" என்று பெயர்.

திரு + அருள் = திருவருள்,

திரு + அண்ணாமலை = திருவண்ணாமலை

திரு + ஆப்புடையார் = திருவாப்புடையார் என்று வரும். இவை போல்,

பூ + அணன் = பூவணன்

பூ + அணம் = பூவணம் என்றாகி வருகிறது.

பூவணன் = பூ + அணன். அணன் என்ற சொல் ஆண் தெய்வத்தைக் குறிக்கும். "கருப்பு" ஆன தெய்வம் "கருப்பணன்", "தேவன்" ஆன தெய்வம் "தேவணன்". அருகில் உள்ள தெய்வம் அல்லது அண்மையில் உள்ள அணன் என்பது "அண்ணன்" என்றாகும். இதே போன்று "பூ" ஆன தெய்வம்

என்பது "பூவணன்" என்றானது. திருப்பூவணத்தில் "பாரிசாதப் பூவின் காம்பு" படிமம் ஆகிச் சிவலிங்கமாக மாறியுள்ளது. பூவால் ஆன சிவலிங்கம் என்பதால் "பூவணன்" என்ற காரணப்பெயர் உண்டாகியுள்ளது.

திருப்பூவணத்தில் வைகை ஆற்றின் தென்கரை நெடுகிலும் ஆறு பல கால்வாய்களாய்ப் பிரிந்து ஓடுகிறது. மருது, அரசு, இருங்கு, கோங்கு, அகில் முதலிய மரங்களும் இருந்துள்ளன. அவற்றின் மத்தியிலே, பூமரங்கள் சூழ்ந்த நந்தவனத்தில் கோயில் இருந்திருக்கிறது. பூவனத்தின் இடையே இறைவன் எழுந்தருளி இருந்த காரணத்தினால், 'புட்பவனநாதர்' என்றும் பெயர் பெற்றார். இதனால் ஊர்ப் பெயர் 'புட்பவனம்' (புஸ்பவனம்) என்றானது.

பிதுர்களுக்கு (முன்னோர்களுக்கு) முக்தி அளிப்பதனால் 'பிதுர்மோட்ச புரி' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. பிரம்மன் வந்து வழிபட்ட இடமானதால் 'பிரமபுரி' என்றானது. தன்னை நோக்கித் தவம் புரிந்த முனிவர்களுக்கு "திரு ஐந்தெழுத்து" மந்திரத்தை உபதேசித்து அவர்களது இதயங்களிலேயே ரகசியமாக நடனமாடி அருளியதால் 'இரகசிய சிதம்பரம்' என்ற பெயர் உண்டானது. காசியிலும் சிறப்புப் பெற்றதால் 'திருப்பூவணக்காசி' என்ற பெயர் ஏற்பட்டது. சூரியன் (பாஸ்கரன்) வந்து வழிபட்டதால் 'பாஸ்கர சேத்திரம்' என்ற பெயர் ஏற்பட்டது.

திருப்பூவணம் அருகே பூவந்தி(5 கி.மீ.), பூஞ்சுத்தி(6கி.மீ.), பூம்பிடாகை(15கி.மீ.) என்ற ஊர்கள் உள்ளன. இந்த ஊரின் பெயர்களும் பூவுடன் தொடர்புடையனவாக இருக்கின்றன.

2.2 திருப்பூவணம் பெயர்க்காரணம்

திருப்பூவணத்தில் உள்ள சிவலிங்கமானது, பாரிசாதப் பூவின் படிமம் ஆகும் (The Siva Lingam is a fossil of Parijatha Flower). பரமேசுவரன் பாரிசாதப் பூவாகத் தோன்றிய காரணத்தினால் பூவணன், பூவணநாதர் என்ற காரணப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன. பூவணன் மேவிய காரணத்தினால் இத் திருத்தலம் "அம்" என்ற பெயர்விகுதி பெற்றுப் "பூவணம்" என்ற காரணப் பெயர் பெற்றுள்ளது. "திரு" என்ற அடைமொழி சேர்ந்து, திருப்பூவணம் என்ற பெயர் உண்டானது.

2.3 ***தலத்தின் பிற பெயர்கள்*** *கிரேதாயுகத்திலே "தேவிபுரம்", "புட்பவனம்" என்றும், திரேதாயுகத்திலே "இலக்குமிபுரம்" என்றும், துவாபரயுகத்திலே "பிரம்மபுரம்" என்றும், கலியுகத்திலே "பாஸ்கரபுரம்" "ஆனந்தவனம்" "முக்தியாச்சிரமம்" "இரகசியசிதம்பரம்" "தட்சினகாசி" "சதுர்வேதபுரம்" "பிதுர்முக்திபுரம்" "திருப்பூவணக்காசி" என்றும் பல்வேறு பெயர்களால் இத்திருத்தலம் அழைக்கப் பெற்றிருக்கிறது.*

3. ***திருப்பூவணத்துத் தெய்வங்கள்***

திருப்பூவணம் ஒரு தெய்வீகத் திருத்தலம். சிவபெருமான் சித்தராய் வந்தருளிய திருத்தலம். இத்தலத்தில் கோயிலின் உள்ளே திருப்பூவணன் (மூல லிங்கம்) மின்னாளுடன் பிற தெய்வங்களும் உள்ளன. கோயிலுக்கு வெளியேயும் திருப்பூவணத்தில் பல தெய்வங்கள் இருந்து அருளுகின்றன. திருப்பூவணத்தில் உள்ள எல்லாத் தெய்வங்களைப் பற்றியும் இங்கே காணலாம்.

3.1 ***மூல லிங்கம்***



(திருப்பூவணன், திருப்பூவணநாதர், புஷ்பவனேசுவரர்)

திருப்பூவணத்தில் உள்ள அருள்மிகு திருப்பூவணன் ஒரு சுயம்புலிங்கமாகும். இது ஒரு சோதிர்லிங்கம் என்று புராணம் சிறப்பித்துக் கூறுகிறது.

3.1.2 ***இறைவனின் திருப்பெயர்கள்***

பூவணன், திருப்பூவணன், திருப்பூவணநாதர், திருப்பூவணமுடையார், பூவணத்தரன், திருப்பூவணேசர், பூவணத்துப் புனிதன், பூவணநாயகன்,

புஷ்பவனேசுவரர், புஷ்பவன நாதர், பாஸ்கரபுரி ஈசர், பிதுர் மோட்சபுரீசர், பிரம்மபுரீசர், பொன்னனையாள், இரகசிய சிதம்பரேசர், அடைவார் வினை தீர்ப்பவர், சௌந்தரநாயகர், அழகிய நாயகர், பாதாளஈசன், பாதலப்பரன் என்ற பெயர்கள் உண்டு. இப்பெயர்களுள் திருப்பூவணன், புஷ்பவனேசுவரர், பூவணநாதர் என்ற பெயர்களே பொதுமக்களால் பயன்படுத்தப்படுகின்றன.

3.1.3 சிவலிங்கம் தோன்றிய காலம்

திருப்பூவணம், பாண்டியநாட்டின் தலைநகராகிய மதுரையைவிடப் பழமையானது. இங்குள்ள சிவலிங்கத்தின் பழைமையைக் குறிக்கும் வகையில்,

"பூமிக்கும் முந்தியவர் பூவணநாதர்
ஆற்றுக்கும் முந்தியவ அழகுமீனா"

என்று மக்கள் வழக்குச் சொல் ஒன்றுள்ளது. இதன் பொருள் - பூமியில் வைகை ஆறு தோன்றுவதற்கு முன்பாகவே மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சியம்மை தோன்றிவிட்டாள். அதற்கும் முன்னதாகவே, பூமியில் நிலப்பகுதி உருவாகி உயிரினங்கள் தோன்றுவதற்கு முன்பே திருப்பூவணத்தில் சிவலிங்கம் தோன்றிவிட்டது என்பதாகும். இதனால் திருப்பூவணத்தில் உள்ள சிவலிங்கத்தின் வயதும் தற்போதைய நிலப்பரப்பின் வயதும் ஒன்றாகும் என்பது இதன் பொருள்.

3.1.4 சோதிர்லிங்கம்

திருப்பூவணத்தில் தானே தோன்றிய மூலலிங்கமான சுயம்பு லிங்கத்தைப் பூர்வலிங்கம் என்றும், சோதிர்லிங்கம் என்றும், தெய்வீகலிங்கம்என்றும், தொல்லிலிங்கம் என்றும் புராணம் குறிப்பிடுகிறது.

பாரிசாத மரத்தின் அடியிலே லிங்கம் தோன்றியதால், திருப்பூவணத்தில் இறைவனுக்குப் "பாரிசாத வனேசுவரர்" என்ற பெயரும் உண்டு. திருப்பூவணத்தில் பாரிசாதமரமானது பாதாளத்திலிருந்து முளைத்துள்ளது, எனவே பாதாளஈசன், பாதலப்பரன் என்ற பெயர்களும் உண்டு. வடமொழியில் உள்ள புஸ்பவனேசுவரர், புட்பவனேசுரர் என்ற பெயர்களும் வழக்கத்தில் உள்ளன. திருப்பூவணத்தில் உள்ள சிவலிங்கம் மிகவும் "புராதனமானது". திருப்பூவணம் சிவலிங்கமானது நாற்பது ஆயிரம் சதுர்யுகங்கள் பூமிக்குள்ளே புதைந்து இருந்துள்ளது. (திருப்பூவணப் புராணம் பாடல் எண் 1398)

இந்தியத் திருநாட்டில் சோதிலிங்கங்கள் நிறைய உள்ளன. அவற்றுள் 12 சோதிலிங்கங்களைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிட்டுக் கூறுகின்றனர் . (1) சோமநாதர், பிரபாசேத்திரம், கடற்கரையில் துவாரகை அருகில் (குஜராத் மாநிலம்), (2) ஸ்ரீ மல்லிகார்சுனர், ஸ்ரீசைலம், கர்னூல் மாவட்டம் (ஆந்திரப் பிரதேசம்), (3) மாகாளேஸ்வரர், சிப்ராநதிக்கரையில் உஜ்ஜையினி அருகில் (மத்தியப்பிரதேசம்), (4) ஓங்காரேஸ்வரர், மோர்டக் இரயில் நிலையம் உஜ்ஜயினி -காண்டவா பாதை (நர்மதாநதிக்கரை), (5) வைத்தியநாதர், பரவி, ஜஸதி-சன்தால் பர்காணா (பீகார் மாநிலம்), (6) பீமஷங்கரர், பீம நதிக்கரையில் நாசிக்கிலிருந்து 120 கி.மீ. (மகாராஷ்டிரா மாநிலம்), (7) இராமேஷ்வரம், இராமேஷ்வரம் தீவு, கடற்கரை (தமிழ்நாடு), (8) நாகேஸ்வரர், தாருகாவனம் - கோமதி துவாரகையிலிருந்து 15-கி.மீ. (குஜராத் மாநிலம்), (9) விஸ்வநாதர், காசி(உத்திரபிரதேசம்),(10) த்ரயம்பகேஷ்வரர், பிரம்மகிரி அருகில் கோதாவரி உற்பத்தி பஞ்சவடியிலிருந்து 8-கி.மீ., (11) கேதாரேஸ்வரர், கேதார்நாத் ரிஷிகேஷிலிருந்து 132-மைல், (12) கிருஷ்ணேஸ்வரர், பேருல்கிராமம் தௌலதாபாத் இரயில் நிலையம் (ஆந்திரப் பிரதேசம்).

3.1.5 ***திருப்பூவணநாதர் வாழ்த்து***

பூமாது மகிழ்துளபப் புயல்வண்ண
நெடுமாலும் புகழ் வெண்கஞ்ச
நாமாது நடனமிடு நான்மறைதேர்
நான்முகனு நயப்ப நன்னீர்த்
தேமாது செழும்பவளச் சடையிருப்பத்
திங்கள் இருள் துரப்பச் சைல
மாமாது வடிவு இலங்க மன்னிய
பூவணத்தரன் தாள் சென்னி சேர்ப்பாம்

ஒரு பொருளாய் உயிர்க்கு உயிராய்
உருவ நான்கருவ நான்கு பயமொன்றாய்
அருள் வடிவாய கண்டிதமாய சஞ்சல
மாயாதி நடு அந்தம் இன்றாய்க்
கருத்து அரிதாய்ச் செல்கதியாய்க்
காண்பது அரிதாய்க் காரணகாரியம் கடந்த

பொருவில் பரிபூரணமாம் பூவணத்து
எம் புனிதனை யாம் போற்றுவாமே

மேவிய பல் உயிர்கட்கும் விண்ணவர்க்கு
மிக்க களைகண்ணாய் எண்ணில்,
பாவிய அண்டங்கள் எல்லாம் படைத்து அளித்துத்
துடைத்து அருளும் பதியாய் மேலாய்த்,
தாவில் அருட் சச்சிதாநந்த வடிவாய்
திகழ் சங்கரனை நாளும்,
பூவுலகும் பணிந்து ஏத்தும் பூவணநாயகனை
நித்தம் போற்றல் செய்வாம்.

புகல அரிய புவனம் எல்லாம் பொருந்து
உயிர்களுக்கு இரங்கி அருள் பொழிந்து நாளும்,
பகர்தரும் இப்படர் புவியில் பலர்
அறியா வகை ஒளித்த பரிசு தோன்ற,
மகிழ் உயர்வான் எழு பரிதி வானவன்
வந்து அருச்சித்து வணங்கி ஏத்தும்,
திகழ் தரு பூம் பொழில் புடைசூழ்
தென் திருப்பூவணத்து அரன் தாள் சிந்தை செய்வாம்.

3.2 ***மின்னாள் (மின்னம்மை, சௌந்தரநாயகி)***

"செங்கண் மால் விடை யூர் சிவபிரான்
தனக்குத் தெக்கிண திக்கதில் திகழ்ந்து
மங்கல விளைவான் மறை முறை
வழாது மன்னிய அத்தலம் தன்னில்
அங்கண் மாஞாலம் எங்கணும்
புகழும் அழகிய மின்னனை ஆகி
எங்கள் நாயகி தானிருந்து தவம் புரிந்தே
இயைந்திடும் இயல்பின் எஞ்ஞான்றும் "

(திருப்பூவணப் புராணம் பாடல் 239)

அறிந்து செய்த பாவம் போக்க உமையம்மை திருப்பூவணம் வந்து பாரிசாதமரம் வளர்த்துத் தவம் செய்தார். அந்தப் பாரிசாதமரத்தின் அடியிலே பூவண்ணமாகிய சிவலிங்கம் ஒன்று தோன்றியது. அதனை உமையம்மை

வணங்க, அதில் சிவபெருமான் தோன்றி பார்வதிதேவியாரின் பாவத்தை நீக்கி வரம் அருளினார்.

3.2.1 இறைவியின் திருப்பெயர்கள்

திருப்பூவணத்தில் அம்மைக்கு மின்னாள், மின்னனையாள், மின்னன்னை, மின்னம்மை, அழகியமின், அழகிய நாயகி, பச்சைவளர் நாயகி, திருநயனவல்லி, சௌந்தர நாயகி, தடிதம்பை, சுவர்ணவல்லி, அன்னபூரணி, பொற்கொடி, நாதவதி, சுந்தரி என்ற திருநாமங்கள் உள்ளன.



மின்னம்மை பச்சை வடிவினள். மின்னல்போன்ற வடிவும் சக்தியும் உடையவளாய் திருப்பூவணத்திற்கு எழுந்தருளி இருப்பதால் "அழகிய மின்னம்மை" என்னும் பெயர் பெற்றாள். திருப்பூவணத்தில் பூமிக்குள் புதைந்து இருந்த சிவலிங்கத்தைக் கண்டுபிடித்து, அதை வெளிப்படச் செய்து மின்னம்மை முதன்முதலாகப் பூசை செய்தார். அதன்பின்னரே சூரியனும் மற்றும் தேவாதி தேவர்களும், முனிவர்களும், அரசர்களும், மானிடர்களும் பூசை செய்து வழிபட்டு வருகின்றனர்.

3.2.2 மின்னனையாள் பெயர்க் காரணம்

பூவாய்த் தோன்றிய காரணத்தினால் பூவணன் என்ற பெயர் உண்டானது. பூவணன் இருக்கும் தலம் பூவணம் என்றானது. திருப்பூவணத்தில் உறைந்து அருள் வழங்கி வரும் உமையம்மைக்கு மின்னனையாள் என்ற பெயர் ஏற்பட்டதற்கான காரணம் என்ன?

"பொன்னுலகம் திகழ் பொன்னனையான் பான்
மன்னு செவ் வானிடை வந்து ஒளிர் கின்ற

மின் என நின்று விளங்கு தலாலே
மின்னனை என்று விளம்பினர் மேலோர்"
(*திருப்பூவணப் புராணம் பாடல்* 746)

பூமி மண்ணால் ஆனது. சிவபெருமான் வீற்றிருக்கின்ற கைலாயம் பொன்நிறமலை ஆகும். பொன்நிற மேனியனாகத் திகழ்கின்ற சிவபெருமானுக்குப் பொன்னனையான் என்று பெயர். பொன்னனையான் திருப்பூவணத்திலே எழுந்தருளுகிறார்.

கார்காலத்தில் மேகங்கள் கருத்து மழை பெய்யும். கோடைகாலத்திலே செவ்வானத்திடையே மின்னல் ஒளி விட இடியோசையுடன் மழை பெய்யும். அவ்வாறு செவ்வானிடை வந்து ஒளிர்கின்ற மின்னல் போன்று, விளங்குகின்ற காரணத்தினால் "மின்னனையாள்" என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. மின்னல் போன்ற இடையைப் பெற்றவள் என்றும் கூறுவர்.

3.2.3 *மின்னன்னை வாழ்த்து*

மன்னு மழை தவழ் குழலும், மதி தரு
    நன் முக ஓதயமும், மலர்ப் பூங்கையும்,
பன்னு தமிழ்ப்பால் சுரக்கும் பயோதரமும்,
    மறைகொழிக்கும் பவளவாயும்,
துன்னு மணிதிகழ் உடையும், துடி இடையும்,
    துலங்குறும் ஐந் தொழிற்கும் வித்தாய்ப்,
பொன்னனையான் இடத்து அமர்ந்த,
    மின்னனையாள் பொற்பாதம் போற்றல் செய்வாம்.

3.3 ***மூலலிங்கத்திற்கே முதல் வணக்கம்*** *மதுரையில் மீனாட்சியம்மைக்கே முதலிடம். மதுரையில் அன்னை மீனாட்சியை வணங்கிய பின்னர் அருள்மிகு சுந்தரேசுவரரை வணங்குவது சிறப்புடையது. கோயில்களில் தெற்குவாயில் வழியே சென்றால் அது நேராக அம்மையின் கருவறைக்குச் செல்லுமாறு கோயிலமைப்பு இருக்கும். இதனால் முதல் வழிபாடு அருள்மிகு மீனாட்சியம்மனை வணங்குவதாக இருக்கும். ஆனால் திருப்பூவணத்தில் முதலில் சிவலிங்கத்தை வணங்கிய பின்னரே அம்மையை வணங்க வேண்டும்.*

"பொழில் திகழ் புராதனத்து எம் பூவணம் கோயில்கொண்ட
குழகனைத் தொழும் முன் செம் பொற்கொடி தன்னைக்

கும்பிட்டோர்கள், தொழுதிடும் அக் கணத்தில் தொடர்புறும்
தோசம் தன்னால் விழுவர்கள் அகோரம் என்னும் வெம் கொடு
நிரயம் தன்னுள்" (திருப்பூவணப் புராணம் பாடல் 332)

"ஆதலின் அன்பு கூர்ந்தே அரும் பெருங்கலை தெரிந்த
மூதறிவு உடையோர் முக்கண் மூர்த்தியைத் தொழுக முன்னம்,
ஆதலின் நீதியாலே மங்கையை அங்கை கூப்பிப்
பாததாமரையில் பின்னர்ப் பணிந்திடக் கடவர் அன்றே"
(திருப்பூவணப் புராணம் பாடல் 333)

திருப்பூவணத்தில் வேறு எங்கும் இல்லாத புதுமையாய் முதலில் சிவலிங்கத்தை (திருப்பூவணனை) வணங்கி வழிபட்ட பின்னரே மின்னம்மையை (சௌந்தரநாயகியை) வணங்க வேண்டும். அம்மனை முதலில் வணங்கினால் அக்கணமே "பைசாசம், அகோரம்" எனும் சித்தபிரமை புத்திசுவாதினம் ஏற்பட்டு நரகம் புகுவர் என நாரதர் திரணாசனனிடம் கூறி நல்வழிப்படுத்தினார் என்கிறது தலபுராணம்.



3.4 உற்சவர் (அழகிய பிரான்) *திருப்பூவண உற்சவ மூர்த்திக்கு, அழகியபிரான், அழகியநாயகன், அழகியநாயகர், பொன்னனையான் ஆகிய பெயர்கள் உண்டு. இங்குள்ள உற்சவர் திருமேனி தனிச்சிறப்பு மிக்கது. இதனைச் செய்திடத் தேவையான தங்கத்தைத் தயாரித்துக் கொடுத்தவர் மதுரை*

அருள்மிகு சுந்தரேசுவரர் ஆவார். இத் தலத்திற்குத் தேவையான திருப்பணியை மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சித்தராய் இங்கு வந்து 36ஆவது திருவிளையாடலை நடத்தித் தங்கம் செய்திருப்பது, எந்தத் திருத்தலங்களுக்கும் இல்லாத சிறப்பாகும்.

திருப்பூவணத்தில் உள்ள உற்சவர் திருவிளையாடற் காலத்திற் செய்யப்பட்டதாகும். அதற்கு முன்னர் இருந்த உற்சவர் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. பொன்னனையாள் என்பவள் திருப்பூவணம் கோயிலில் நடனமாது. இவளுக்குத் தங்கத்தினால் உற்சவர் செய்ய வேண்டும் என்று விருப்பம் இருந்தது. உற்சவரை உலோகத்தில் வார்த்து எடுக்கும் பொருட்டு மெழுகினால் உருவம் செய்து அதைப் பயன்படுத்தி அச்சு தயார் செய்து வைத்திருந்தாள். உற்சவரைச் செய்திடத் தேவையான தங்கம் அவளிடமில்லை. அவள் கையில் வரும் பொருள் எல்லாம் அடியவர்களுக்கு அன்னதானம் செய்வதிலேயே செலவானது. அவ்வாறு இருக்கும் காலத்தில் மதுரை சிவபெருமான் சித்தர் வடிவில் பொன்னனையாள் மாளிகைக்கு எழுந்தருளி அனைத்து உலோகப் பாத்திரங்களையும் கொண்டுவரச் செய்து அவற்றில் திருநீற்றைச் சிந்தினார். "இவற்றை இன்று இரவு தீயிலிட்டுக் காய்ச்சுங்கள் தங்கம் கிடைக்கும்" எனக் கூறி மறைந்தார். பொன்னனையாள் அவ்வாறே செய்ய தங்கம் கிடைத்தது. அதனைக் கொண்டு திருப்பூவணத்து உற்சவமூர்த்தியை வார்த்து எடுத்தாள். வார்ப்பை உடைத்து உற்சவ மூர்த்தியை வெளியே எடுக்கும் போது மிகவும் அழகாக இருந்தது. "அச்சோ அழகிய பிரானோ" என்று அன்பினால் அள்ளி பொன்னனையாள் முத்தங் கொண்டாள். இதனால், அவளது கைநகம் பட்டு இறைவனின் கன்னத்தில் நகக்குறி உண்டானது. இக் குறியை இன்றும் உற்சவர் திருமேனியில் காணலாம். அழகிய பிரானோ, என்று பொன்னனையாள் கூறியது பொருட்டு, உற்சவரின் திருநாமம் "அழகிய பிரான்" "அழகிய நாயகர்" என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார். இக்கதை 36ஆவது திருவிளையாடற் புராணமாகப் பாடப்பெற்றுள்ளது. அறுபத்துமூன்று நாயன்மார் சந்நிதி, கன்னிமூல கணபதியை அடுத்து அழகிய நாயகர் சந்நிதி உள்ளது. இதில் அழகியநாயகர், பொன்னனையாள், பிரியாவிடை திருமேனிகள் உள்ளன.

3.4.1 *அழகிய நாயகர் வாழ்த்து*

"திங்கள் தவழ் சடா மௌலித் தென்கூடல்
சிவபெருமான் சித்தராகிப்,
பங்கமுறு கருந்தாது பசும்பொன்னாம்
குளிகை அருள் பான்மையாலே,
பொங்கு அரவு அகல் அல்குல் பொன்னனையாள்
கண்டுவந்து போற்று நீரார்,
அரங்கணுலகம் புகழும் அழகியநாயகர்
பாதம் அகத்துள் வைப்பாம் ."

(திருப்பூவணப் புராணம் பாடல் 8)

3.5 ***பிற மூர்த்திகள் (தெய்வங்கள்)*** *திருப்பூவணநாதர், மின்னன்னை ஆகிய மூல தெய்வங்களுடன், நந்திதேவர், இரட்டைவிநாயகர், கருப்பணசாமி, முருகன், அணுக்கை விநாயகர், சரசுவதி, வித்தியாஈசுவரர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், கன்னிமூல கணபதி, மகாலெட்சுமி, துர்க்கை, சண்டேசுவரர், வயிரவர், தண்டாயுதபாணி, சூரியன், சந்திரன், வேடுவ லிங்கம், காசிலிங்கம், பள்ளிகொண்ட பெருமாள், ராட்சதக்கண்ணு முதலிய தெய்வங்களும் திருப்பூவணம் திருக் கோயிலில் உள்ளன. அர்த்தமண்டப வாயிலில் அணுக்கை விநாயகரும், கருவரை வாயிலில் காளஹஸ்தி விநாயகரும் உள்ளனர்.*



3.5.1 ***கருப்பணசாமி*** *திருப்பூவணம் கோயிலைச் சுற்றிலும் கோட்டையும் அகழியும் இருந்துள்ளன. கோட்டையில் தங்கக் கலசங்களை உடைய நான்கு வாயில்கள் இருந்துள்ளன. பிராதான வாயிலில் கருப்பணசாமி காவல் தெய்வமாக இருந்துள்ளார். பிரளயகாலத்தில் கோட்டை அகழி எல்லாம் அழிந்து போயின. கோட்டை வாயிலில் காவல் தெய்வமாக இருந்த கருப்பணசாமி தெய்வம் தனிச்சந்நிதியில் இருந்து அருளுகிறார். கொடிமரம் பெரிய நந்தியை அடுத்து கருப்பணசாமி சந்நிதி உள்ளது.*

3.5.2 காளிதேவி காளிதேவி சபதம்கூறி சங்கரனுடன் ஆடிய இடம் தில்லையாகும். தில்லையில் காளிதேவி ஊருக்கு வெளியே தனியாகக் கோயில் கொண்டிருக்கிறாள். அதே போன்று திருப்பூவணத்திலும் ஆற்றிற்கு வடக்கே மடப்புரம் கிராமத்தில் "அடைக்கலம் கொடுத்த ஐயனார்" கோயிலில், காளிதேவி கோயில் கொண்டுள்ளாள். தற்போது, "மடப்புரம் காளி" மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகிறாள். கொடிமரம் மகாமண்டபம் இவற்றைக் கடந்து உள்ளே செல்லும் போது இடதுபுறம் உள்ள தூணில் காளிதேவியின் திருவுருவம் உள்ளது. திருப்பூவணத்தில் காளிதேவி ஒரு சிவலிங்கம் வைத்து வழிபட்டுள்ளாள். அந்தச் சிவலிங்கம் வைகை ஆற்றின் வடகரையில் இருப்பதாகப் புராணத்தில் குறிப்பு உள்ளது.

3.5.3 கருவறையைச் சுற்றி வரும் போது, தெற்கே தெட்சிணாமூர்த்தியும் அறுபத்துமூவர் திருவுருவங்களும், மேற்கே இலிங்கோத்பவரும், வடக்கே துர்க்கை அம்மனும் உள்ளனர். துர்க்கை அம்மனுக்கு அருகே வலப்பக்கத்தில் சண்டேசுவரர் உள்ளார்.



3.**5.4 வித்தியாஈசுவரர்**

3.5.5 தட்சிணா மூர்த்தி

வாலகில்லி, தியானகாட்டர் என்ற இரண்டு முனிவர்களும் திருப்பூவணத்திலே சிவபெருமானைச் சிந்தித்து நூறு தேவவருடம் தவம் செய்தனர். அவர்களது தவத்திற்கு அருள வேண்டிச் சிவபெருமான் திருப்பூவணத்திற்கு எழுந்தருளி இவ்விரு முனிவர்களுக்கும் குருவாக இருந்து ஐந்தெழுந்து மந்திரத்தை உபதேசித்து அருளியுள்ளார். இதனால் திருப்பூவணத்தில் வித்தியாஈசுவரரும் தட்சிணாமூர்த்தியும் மாணவர்களுக்குச் சிறந்ததொரு பரிகார மூர்த்தியாக உள்ளனர். மாணவர்கள் அவர்களது ஆசிரியர்களுடன் இங்கு வந்து உபதேசம் கேட்டு, நன்மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வியில் தேர்ச்சி பெறுகின்றனர். தட்சிணாமூர்த்தி முன்பாகச் சனகாதி முனிவர்களுடன் நந்தியும் சேர்ந்து உள்ளது இத்தலச் சிறப்பு.



3.5.6 *சரசுவதி* - அறுபத்துமூன்று நாயன்மார்களை அடுத்தபடியாக வித்தியாஈசுவரர், சரசுவதி ஆகிய திருமூர்த்தங்கள் உள்ளன. எனவே மாணவர்கள் வேண்டிய பூசைகள் செய்து கல்வியில் நல்ல முன்னேற்றம் காணலாம்.

3.5.6.1 *சரசுவதி தேவி வாழ்த்து*

அரியசுவை தரும் அமுதம்அருவி பாய்ந்து ஒழுக அருணமண்டலஞ்சேர்,
விரிகதிர் வெண்மதிக்கற்றை வெண் கலமபீடிகை மேல் வீற்றிருந்து,
பரவரு நற்கலைகள் எல்லாம் பவளவாய் திறந்துரைக்கும் பனுவலாட்டி, திருவடிகள் தமை எமது சிரத்தினிலும் கருத்தினிலும் இருத்துவாமே.



3.5.**7** ***சுர ஹரேசுவரர்***

சுரஹரேசுவரர், மூன்று தலைகள், மூன்று கைகள், மூன்று கால்கள் உடையவர், இடதுகையில் அக்னி ஏந்தி வலது கையால் அருள் வழங்குபவர். காய்ச்சல், வெம்மை (சுரம்) முதலான வெப்ப நோய்களுக்கு இவரைத் தியானித்து வேண்டிக் கொள்கின்றனர். நோய் நீங்கியவுடன் ஆலயம் வந்து இவரது பாதங்களில் சந்தனம் சாத்திப் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்கின்றனர். இவரை மனத்தில் நிறுத்தித் தியானம் செய்தால் மனஎரிச்சல், மனஇறுக்கம் மாறும்.

சுரஹரேசுவரரை அடுத்து உற்சவர் சந்நிதியும், அடுத்து லிங்கோத்பவரும், வள்ளி தேவசேனை சமேத சுப்பிரமணியரும், மகாலெட்சுமியும், துர்க்கையும், சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளன.

3.5.8 நடராசர்

கல்லினால் ஆன சிலா உருவத்துடன் ஐம்பொன்னால் ஆன நடராசர் திருமேனி ஒன்றும் திருப்பூவணக்கோயிலில் வழிபாட்டில் உள்ளது. திருப்பூவணத்தில், சதுர வடிவமான அரங்கினிலே, கங்கை, திங்கள் இவற்றை அணிந்து, வலது கையில் ஒலிக்கும் துடியையும், இடதுகையில் அனலையும் கொண்டு, இடது காலைத் தூக்கி, வலதுகாலை முயலகன் மீது ஊன்றித் திருநடனமாடுகிறார். ஜடா மகுடம், பின்தாழும் செஞ்சடைகள் திருமேனியோடு ஒட்டியுள்ளன. ஒடிவும் வளைவும் இலக்கணப்படியுள்ள அழகான திருமேனி. இந்த ஐம்பொன் சிலை கி.பி. 14-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. நடராசர் சந்நிதியில் பதஞ்சலி, வியாக்ரபாதர், மணிவாசகர், காரைக்காலம்மையார், சிவகாமி அம்பாள் கல்லினால் ஆன உருவமாக உள்ளனர். நடராசர் கருவரையை உ.மு.குடும்பத்தார் கட்டிக் குடமுழுக்கு நடத்தியுள்ளனர்.

3.5.8.1 பிரம்மதாண்டவம்

சிவபெருமான் திருப்பூவணத்தில் ஆடும் திருநடனத்திற்குப் "பிரம்மதாண்டவம்" என்று பெயர். திருப்பூவணத்தில் நடராசன் ஆடிய ஆட்டத்தைப் பற்றிய குறிப்பு திருப்பூவணப் புராணத்தில் உள்ளது.

"கரிமுகன் கந்தவேள் கருணையே பொழி
திருமுக மண்டலம் சிறந்து இலங்க வான்
பெருகு ஒளி பரப்பிடும் பிரமதாண்டவம்
அருள் புரிதர எழுந்து அருளும் நாயகன்" (பாடல் 759)

திருப்பூவணத்தில் சிவபெருமான் ருத்திர மேனியனாய் (ருத்ர விடங்கர்) "பிரம்ம தாண்டவம்" என்னும் நடனமாடியுள்ளார். பௌர்ணமி நாளில், அன்புடன் பிரம்மதாண்டவருக்கு மாபூசை செய்வோர் மகேசர் உலோகத்தில் ஒரு பிரம்மகற்பம் உறைந்து காந்தத்தின் உருத்திரனோடு உற்றுப் பின்றைக்குக் குருமணி நல்விமான மேல்கொண்டு சிவலோகம் சென்று அதில் குடியாய் வாழ்வார்.

3.5.8.2 *கல்லினால் ஆன நடராசர்*

நடாஈசனின் வடிவத்தைப் பொதுவாக கல்லில் வடிப்பதில்லை. ஆனால் விதிவிலக்காகச் சில திருத்தலங்களில் மட்டும் கருவறைக்கு அருகில் கல்லினால் ஆன நடராஜரைக் காணலாம். மதுரையில் கருவறைக்கு அருகில் உள்ள கல்லினால் ஆன நடராசர் வடிவத்திற்கு இயைபு உடைய அளவிற்குத் திருப்பூவணத்திலும் கல்லினால் ஆன நடராசர் சிலை உள்ளது.

மதுரையில் உள்ள நடராசர் இடது காலைத் தரையில் ஊன்றி வலது காலைத் தூக்கி ஆடுகிறார். ஆனால் திருப்பூவணத்தில் வலதுகாலை ஊன்றி இடதுகாலைத் தூக்கி ஆடுகிறார். இவ்விரண்டு திருவடிவங்களையும் கண்ணுற்றால் ஒரே சிற்பியால் செதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். இதனால் மதுரைக் கோயில் கருவறையும் திருப்புவனம் கோயில் கருவறையும் சமகாலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

3.5.8.3 *சபாபதி வாழ்த்து*

பூமேவு திருமாலும் புண்டரிகத்து அயனும்
புரந்தரனும் வானவரும் புங்கவரும் போற்றப்
பாமேவு பண்டரும் சொற்பரிவு உமையாள் காணப் படர்
தரு செம்பவள நறும் சடை தாழ இலைச்சுந்
தேமேவு செழுங்கொன்றை தேன் துளிப்ப இருள் கால்சீக்குமி
நன்மதி நிலவெண்டிசாமுகம் சென்று எறிப்ப
மாமேவு மணி மன்று நடம் புரியும் எங்கோன்
மன்னு பரி புர மலர்த்தாள் சென்னி மிசைச் சேர்ப்பாம்

3.5.9 ***கால பைரவர்*** *திருப்பூவணத்தில் திருப்பூவணநாதர், மின்னம்மை, விநாயகர், முருகக் கடவுளுக்கு அடுத்தாற் போல் வைத்து வணங்கப்படுபவராக பைரவர் என்றழைக்கப்படும் வடுகக் கடவுள் உள்ளார். திருப்பூவணத் திருத்தல வழிபாட்டில் பைரவர் முக்கியத்துவம் பெறுகிறார். சித்திரை மாதம் முழுமதி நாளிலே வடுகக்கடவுளைப் பணிந்து பின்னர் சிவபெருமானை வழிபட்டு அதன்பின்னர் மணிகுண்டத்தில் தீர்த்தமாடியவர்கள் நற்பலன்களை அடைவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பைரவக் கடவுளானவர், அரி பிரம்மன் ஆகியோரின் அகந்தை கெடுமாறு செய்தவர் என்றும், வாயில் குருதி கொப்பளிக்க அஞ்சும்படியான தோற்றத்தை உடையவர் என்றும், திரிசூலத்தைக் கையில் கொண்டவர் என்றும், அவர் எமைக் காக்க வேண்டுமென்றும் பாடப் பெற்றுள்ளது.*

புராண காலத்திலே, திரணாசனன் என்பவன் எளிதில் சிவகதி அடையும் பொருட்டுச் சிவத்தலங்கள் தோறும் சென்று தீர்த்தமாடி சிவலிங்கங்களை வழிபட்டு வந்தான். அவன் திருப்பூவணம் வந்து சேர்ந்து, மிகுந்த அன்பினோடு முதலில் வடுகக் கடவுளை வணங்கி வழிபட்டான். பின்னர் மணிகன்னிகா தீர்த்தம் என்றும், தேவிகுண்டம் என்றும், சூரிய புஷ்கரணி என்றும் அழைக்கப்படுகிற மணிகுண்டத்திலே தீர்த்தமாடினான் என்று கூறப்பட்டுள்ளது.



புராண காலத்திலே, தருமஞ்ஞன் என்பவன் அவனது தந்தையாரின் அஸ்திக் கலசத்தை எடுத்துக் கொண்டு காசிக்குச் செல்லும் வழியிலே திருப்பூவணம் வந்து சேர்ந்தான் என்றும், வந்தவன் முதலில் வடுகக்கடவுளை வணங்கிப் பின்னர் திருப்பூவணநாதரை வணங்கி அதன்பின்னர் மணிகன்னிகா தீர்த்தத்தை அடைந்தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

சர்வபாவமோசனச்சருக்கத்திலே, சித்திரை மாதம் முழுமதி (பௌர்ணமி) நாளிலே வடுகக்கடவுளைப் பணிந்து பின்னர் சிவபெருமானை வழிபட்டு அதன்பின்னர் மணிகுண்டத்தில் தீர்த்தமாடியவர்கள் அடையும் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

விநாயகர், பழனியாண்டவர் ஆகிய கடவுளருக்கு அடுத்தபடியாக வடுகக்கடவுளை வணங்க வேண்டும் என்று சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளது. திருப்பூவணத்திலே வயிரவக் கடவுளை எள்ளு, அருகு, அட்சதை இவற்றாலே பூசை செய்தால் மிகுந்த பலன் உண்டு.

3.5.10 அனந்தசயனம்

தில்லையில் (சிதம்பரத்தில்) நடராசர் சந்நிதிக்கு அருகில் பள்ளிகொண்ட பெருமாள் சந்நிதி இருக்கும். அதேபோல் இங்கும் நடராசர் சந்நிதிக்கு எதிரே பள்ளிகொண்ட பெருமாள் உள்ளார். வாலகில்லி முனிவரின் சாபத்திலிருந்து விமோசனம் பெறவேண்டித் திருமகள் திருப்பூவணம் வந்து வழிபடுகிறாள். திருமகளை அழைத்துச் செல்லப் பெருமாளும் திருப்பூவணத்திற்கு எழுந்தருளித் தனது பெயரால் சிவலிங்கம் ஒன்றை வைத்து வழிபாடு செய்து வரங்கள் பெற்றுள்ளார். ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து பெருமாள் திருப்பூவணம் வந்து வழிபட்ட காரணத்தினால் திருப்பூவணத்தில் உள்ள பள்ளிகொண்ட பெருமாள் வரப்பிரசாதியாக உள்ளார்.

சயனதோசங்கள் உடைய ஆண்களும் பெண்களும் வழிபட்டுத் தங்களது வாழ்வைச் சிறப்புடையதாகப் பெறுகின்றனர்.

3.6 நவக்கிரகப் பரிகாரத்தலம்

நவக்கிரகங்களும், 27 நட்சத்திரங்களும் இங்குள்ள சிவலிங்கத்தை வலஞ்செய்கின்றன என்று திருவிளையாடற்புராணத்தில் பரஞ்சோதி முனிவர் பாடியுள்ளார் . இங்கு நவக்கிரகங்களின் சந்நிதியுள்ளது.

"எண்ணில் அங்குறை சராசரம் இலிங்கம் என்று எண்ணி
விண்ணின் நாள்களும் கோள்களும் விலங்குவ … …"

என்ற திருவிளையாடற் புராணப் பாடலில் "அண்டசராசரமே இங்கு சிவலிங்கமாகத் தோன்றியுள்ளதாக" விண்ணிலுள்ள தெய்வங்களும் தேவர்களும் மற்றும் நவக்கிரகங்களாகிய கோள்களும் கருதுகின்றன என்று பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுகிறார். எனவே திருப்பூவணம் ஒரு நவக்கிரகப் பரிகாரத்தலமாகத் திகழ்கிறது.

4. கோயில் அமைப்பும் சிறப்பும் இந்தியத் திருநாட்டில் திருக்கோயில்கள் சமுதாயத்தின் தலைமையான அங்கமாகத் தொன்றுதொட்டுத் திகழ்ந்து வருகின்றன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஔவையார் கூறுகிறார். அந்த அளவிற்குத் தமிழர்களின் வாழ்க்கை முறையானது திருக்கோயிலோடும் அதன் வழிபாட்டோடும் இரண்டறக் கலந்துள்ளது. திருக்கோயில்கள் அவற்றின் இருப்பிடத்தாலும், அமைப்பு முறையாலும் சிறப்புப் பெறுகின்றன. திருப்பூவணம் சிவலிங்கம் வைகை ஆறு தோன்றுவதற்கு முன்பே திருப்பூவணத்தில் இருந்துள்ளது. பொதுவாக எல்லாச் சிவாலயங்களும் கிழக்குநோக்கி உள்ளன. சில குறிப்பிடத்தக்க சிவாலயங்களும் குடவறைக் கோயில்களும் மேற்குநோக்கி உள்ளன. ஆனால்

திருப்பூவணன் கோயிலானது வடகிழக்கு (ஈசானியம்) நோக்கி அமைந்துள்ளது. இதுபோன்று ஈசானியம் நோக்கி அமைந்துள்ள கோயில்கள் வேறு எங்கும் இல்லை என்று கூறலாம்.

4.1 திருப்பூவணன் கருவறை விமானத்தின் அமைப்பு

கருவறைக்கு மேலே உள்ளதை விமானம் என்று அழைக்கின்றனர்.



விமானங்களின் அமைப்பைப் பலவகையாகப் பிரித்துக் கூறுகின்றனர். அதில் ஒன்று சடங்க விமானம் என்பதாகும். ஒரு கருவறையில் மட்டும் அமைக்கப்படும் விமானத்திற்குச் சடங்க விமானம் என்று பெயர். திருப்பூவணன் கோயிலில் உள்ள விமானம் சடங்க விமான வகையைச் சார்ந்தது என்கின்றனர். வடக்கே பிரம்மாவும், கிழக்கே தேவேந்திரன் வெள்ளையானையில் அமர்ந்த நிலையிலும் நிறுவப்பட்டுள்ளன.

மேலேயுள்ள படத்தில் பிரம்மதேவன் ஆணைப்படி தேவகம்மியனால் கட்டப்பெற்ற ஐந்து கலசங்களைக் கொண்ட திருப்பூவணன் கருவறை விமானம்.

4.1.1 ***ஐந்து கலசங்கள்***

ஈசனது ஐந்து முகங்களைப் போன்று ஐந்து கலசங்களுடன் கருவறை விமானம் உள்ளது. திசைக்கு ஒன்றாக நான்கு கலசங்களும், மையப் பகுதியில் ஒரு கலசமுமாக மொத்தம் ஐந்து பொற்(தங்கமுலாம் பூசப்பட்டுள்ள) கலசங்கள் விமானத்தின் மேல் உள்ளன. நடுவில் உள்ள கலசம் பெரியதாகவும் சதுரவடிவிலும் உள்ளது. கலசத்தின் மொட்டும் சதுர வடிவில் உள்ளது. சுற்றிலும் உள்ள நான்கு கலசங்களும் சிறியதாகவும் உருண்டையாகவும் உள்ளன. இவ்வாறான ஓர் அமைப்புத் தனிச்சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.




ஐந்து நிலையிலான இராச கோபுரம்

2002ஆம் ஆண்டு குடமுழுக்கு விழாவிற்கு முன்பு எடுக்கப்பட்ட படம்.

4.2 **இராச கோபுரம்** - திருப்பூவணநாதர் திருக்கோயில் ஐந்துநிலையிலான இராச கோபுரத்தை உடையது.

ஈசான்யம் (வடகிழக்குத் திசை) பார்த்த கோபுர வாசல். இதில் சிற்பங்கள் ஏதும் இடம்பெறவில்லை. அரைத் தூண்களுக்கு இடையே கோபுரத்தின் ஐந்து வாயில்களும் உள்ளன. வரகுண பாண்டியன் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இரும்பு மற்றும் உலோகங்கள் ஏதும் பயன்படுத்தப்படாமல் மரம் செங்கல் சுண்ணாம்பு இவற்றைக் கொண்டே இக்கோபுரம் கட்டப்பெற்றுள்ளது. மிகவும் பழமையான காரணத்தினால் கோபுரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மரங்கள் சிதிலமடைந்து வருகின்றன. அம்மன் கோயில் நுழைவு வாயிலில் மூன்று நிலையிலான இராசகோபுரம் உள்ளது.

4.3 பூவண நாதர் கோயிலின் அமைப்பு - உலகில் எங்கும் காணக் கிடைக்காத காட்சியாகத் 'திருப்பூவணநாதர் திருக்கோயில்' அமைந்துள்ளது.



மதுரையைப் போன்றே வைகையாற்றின் தென்கரையில் இக்கோயில் அமைந்துள்ளது.

ஐந்து நிலைக் கோபுரத்துடன் சுவாமி சந்நிதி நுழைவுவாயில் அமைந்துள்ளது. சுவாமி சந்நிதியில் சுயம்புலிங்கமாய் ருத்ராட்ச மேனியாய் ஈசானிய திசை (வடகிழக்குத்திசை) நோக்கிச் சிவபெருமான் அருளுகிறார். இச் சுயம்புலிங்கத்திற்கு நேரெதிரே ஆற்றின் மறுகரையில் ஆடித்தபசு மண்டபம் உள்ளது. இடையே வைகையாறு ஓடுகிறது. திருப்பூவணநாதருக்குத் (சுயம்பு லிங்கத்திற்குத்) தீபாராதனை செய்யும் போது ஆற்றின் மறுகரையில் உள்ள ஆடித்தபசு மண்டபத்திலிருந்து தீபாராதனையை வணங்கித் தரிசிக்க முடியும். அதே போன்று ஆடித்தபசு மண்டபத்தில் வழிபாடு நடைபெறும்போது திருப்பூவணநாதர் கோயிலிலிருந்து வழிபடமுடியும். இவ்வாறான காட்சி உலகில் எங்கும் காணக்கிடைக்காத ஆனந்தத் தரிசனக் காட்சியாகும். ஆடித்தபசு மண்டபத்திற்கும் திருக்கோயிலுக்கும் இடையே வைகை ஆற்றின் உள்ளே ஆயிரக்கணக்கான இலிங்கங்கள் ஆற்றுமணலில் புதைந்து உள்ளன என்று கூறுகின்றனர். இதன் காரணமாக ஆற்றின் இப்பகுதியில் மக்கள் யாரும் நடந்து செல்வதில்லை[5]. இக்காரணத்தினாலேயே திருஞானசம்பந்தரும் ஆற்றின் வடகரையிலிருந்து பதிகம் பாடி இறைவனை வழிபட்ட பின்னர் ஆற்றினைக் கடந்து திருக்கோயிலுக்குச் செல்லாமல் வடகரை வழியாக மதுரை சென்றுவிட்டார்.

4.4 மொட்டைக் கோபுரம்

திருக்கோயிலுக்கு மிகப் பெரிய இராயகோபுரம் கட்டும் முயற்சியில் திருமலை நாயக்க மன்னர் ஈடுபட்டு, கோபுரம் முழுமையாகக் கட்டப்படாமல் மொட்டைக் கோபுரமாக உள்ளது. இதனை மதுரையைப் பற்றி விளக்கும் இணையதளம் (Web site) ஒன்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளது (www.maduraionline.com/ thirupuvanam). இது போன்று கட்டப்படாமல் மதுரை, அழகர்கோயில் ஆகிய இடங்களிலும் மொட்டைக்கோபுரங்களாகவே உள்ளன.

[5] திருக்கோயில் பரம்பரைத் ஸ்தானிகர் திரு.தெய்வசிகாமணிப்பட்டர் கூறியது. திருப்பூவணம் கோட்டையில் வசிக்கும் சிற்பி இராசேந்திரன் அவர்கள் கூறியது.



4.5 திசைகள் மாறித் தோன்றும் திருப்பூவணம்

மதுரையின் வீதிகள் அனைத்தும் வாஸ்து இலக்கணப்படி திட்டமிட்டு கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் அமைக்கப்பட்டிருக்கும். இதனால் மதுரையில் திசைகளை எளிதில் அறிந்து கொள்ளமுடியும். ஆனால் திருப்பூவணத்தில் எந்தவொரு இடத்திலும் திசைகளைச் சரியாக அறிந்துகொள்வது மிகவும் கடினாக இருக்கும். வீதிகள் ஒரே நேர்கோடாக இல்லாமலும், சரியான திசைகளில் அமையாமலும் உள்ளன. திருப்பூவணத்துத் திருக்கோயில் ஈசான திசையைப் பார்த்தும், முருகன் கோயில் கிழக்குப் பார்த்தும், பெருமாள் கோயில் வடக்குப் பார்த்தும் அமைந்துள்ளன. இதனால் கோயில்களை வைத்துத் திசைகளைச் சரியாகச் சொல்வது கடினம். மேலும் கோயிலைச் சுற்றிலும் முன்பு வட்டவடிமான கோட்டை இருந்துள்ளது. இப்போது அது தேரோடும் வீதியாக உள்ளது. தேரோடும் வீதியானது வட்டவடிவத்தில் வளைந்துள்ளதால், இந்தத் தேரோடும் வீதி அமைப்பைக் கொண்டும் சரியான திசைகளைச் சொல்ல இயலாது. திருப்பூவணத்தில் வைகையாறும் திசைமாறிச் சிறிது தூரம் ஓடுகிறது, எனவே ஆற்றின் போக்கை வைத்துத் திசையைச் சரியாகச் சொல்ல இயலாது. அதே போன்று கோயிலின் தெற்கே உள்ள தேசிய நெடுஞ்சாலையும்

திருப்பூவணம் அருகே வளைந்து செல்கிறது. இதனால் திருப்பூவணத்தில் திசைகள் மாறித் தெரியும். ஓர் இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் திசைகளில் அதிகமான (சுமார் 45பாகைவரை) அளவு வித்தியாசம் தெரியும். எனவே திருப்பூவணத்தில் கிழக்கு மேற்கை அறுதியிட்டுக் கூற இயலாது. இதனைக் குறிப்பிடும் வகையில் "திருப்பூவணத்துக் கிழக்கும் மேற்கும் பிரமனூர்க் கணக்கு வழக்கும் சொல்லமுடியாது" என்ற மக்கள் வழக்குச் சொல் ஒன்று உள்ளது. திருப்பூவணன் கோயிலுக்கான நிலங்கள் பிரமனூரில் அதிகம் இருந்ததாகவும், ஆனால் பின்னர் முறையான குத்தகை வசூல் குறைந்து விட்டதாகவும். அதனால் தான் இந்த வழக்குச் சொல் தோன்றியதாகவும் கூறுகின்றனர்.

4.6 ஆற்றின் குறுக்கே லிங்கங்கள்

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது அந்திமக் காலத்தில் திருப்பூவணத்தில் வந்து தங்கி வசித்து வரலாயினர். அவ்வாறு தங்கியிருந்து இறந்தவர்களின் நினைவாக சிவலிங்கங்கள் நிறுவப் பெற்றுள்ளன. இச்சிவலிங்கங்களே திருக்கோயிலுக்கு எதிரே ஆற்றின் குறுக்கே ஆடித்தபசு மண்டபம் வரை புதையுண்டு கிடக்கின்றன. ஆற்றில் மணல் அள்ளும்போது சிவலிங்கங்கள் தென்படுகின்றன. உடனே மணல் எடுப்போர் பொதுமக்களுடன் சேர்ந்து எடுத்துவைத்து வழிபாடு செய்கின்றனர். இவ்வாறான இரண்டு லிங்கங்கள் ஆடித்தபசு மண்டபத்திலும் மற்றொரு லிங்கம் நால்வர் ஆலயத்திலும் உள்ளன. கடந்த 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில், திருப்பூவணம் வைகை ஆற்றில் குளித்த சில இளைஞர்கள் அங்குகிடந்த நந்தி, நாகர் உள்பட ஏழுசிலைகளை மீட்டனர். அவற்றை வடக்குப்பள்ளி அருகே ஆற்றங்கரையில் வைத்து வழிபட்டனர். அரசு அதிகாரிகளின் முயற்சியால் இச்சிலைகள் தொல்பொருள் துறையினர் ஆய்வுக்காக எடுத்துச் சென்றுள்ளனர் (தினமலர் 28.12.2006). ஆற்றின் குறுக்கே சிவலிங்கங்கள் புதையுண்டு கிடப்பதால், இன்றும் மக்கள் இப்பகுதியில் நடந்து செல்வதில்லை.

4.11 ஆற்றின் நடுவே ஆலயம்

சிவன் சந்நிதிக்கு நேர் எதிரே வைகை ஆற்றின் நடுவே சிதைந்து கிடக்கும் இந்த ஆலயத்தை கட்டுபவர்களுக்குப் புண்ணியம் நான்கு மடங்காகக் கிடைக்கும் என்று திருப்பூவணப் புராண நூலாசிரியர் புலவர் கந்தசாமிப் புலவர் பாடியுள்ளார். சிவநேயச் செல்வர்கள் இந்த ஆலயத்தைப்

புதிதாகக் கட்டிக் குடமுழுக்கு நடத்தித் திருப்பூவணனின் திருவருளைப் பெற வேண்டும்.

**“குழந்தை வெண்மதிச் சடைக் குழகனுக்கு முன்பு
அழிந்திடும் ஆலயம் தன்னை உண்டாக்குநர்க்கு
கெழுந்த அன்புடன் புதிது இயற்றும் அன்னதின்
வழங்கிடும் அதிக நான்மடங்கு புண்ணியம்“**
(*திருப்பூவணப் புராணம் பாடல் எண்* 1263)



திருக்கோயில் சந்நிதிக்கு நேர் எதிரே, திருக்கோயிலுக்கும் ஆடித்தபசு மண்டபத்திற்கும் இடையே வைகை ஆற்றின் நடுவே ஒரு கோயில் சிதையுண்டு கிடப்பதைக் காட்டும் படம். (ஆடித்தபசு மண்டபத்தில் உள்ள ஆலமரம் பின்னால் தெரிகிறது)



சிதைபாடுகளுக்கு இடையே கோமுகம் ஒன்று கிடக்கிறது. இதனால் இங்கு கோயில் ஒன்றும் தீர்த்தக்கிணறு ஒன்றும் இருந்துள்ளன.

4.12 ஆடித்தபசு மண்டபம்

ஆற்றின் வடகரையில் மடப்புரம் செல்லும் வழியில் திருஞானசம்பந்தர் பாடியருளிய இடத்தில் ஆடித்தபசு மண்டபம் உள்ளது.



ஆடிமாதம் முழுநிலவுநாளில் இங்கு அம்மனை எழுந்தருளச் செய்து வழிபாடு நடைபெற்று வந்தது. ஆங்கில வருடம் 1950-60 ஆண்டு காலத்தில் ஆடித்தபசு மண்டபத்தின் மேலே ஆலஞ்செடி ஒன்று வேர்விட்டு வளரத்துவங்கியது. அவ்வாறு வளர்ந்த செடி வளர்ந்து மண்டபத்தினை முழுமையாக ஆக்கிரமிப்பு செய்துவிட்டது. இதனால் மண்டபம் சிதிலமடைந்தது.

1966ம் ஆண்டு நடைபெற்ற ஆடித்தபசு விழாவின் போது ஆலமரவிழுதினால் சிதிலமடைந்த மண்டபக் கருவறையில் தீபாராதனை காட்டும்போது மண்டபத்தின் மேலேயிருந்து மிகப் பெரிய பாம்பு ஒன்று தீபாராதனைத் தட்டிலேயே விழுந்துவிட்டது. இதன் காரணமாகக் குருக்கள் பூசையை நிறுத்தி விட்டார்[6]. அந்த ஆண்டிலிருந்து அங்கே முறையான பூசைகளும் நின்றுபோய் விட்டன. மேலும் ஆற்றில் கிடந்த இரண்டு சிவலிங்கங்களையும் ஆடித்தபசு மண்டபத்தின் அருகிலேயே எடுத்து வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

இந்த மண்டபத்தில் "இராட்சதக் கண்ணுப் பிள்ளையார்"[7] உள்ளார். இப்பிள்ளையாரே மண்டபத்தின் கருவறைக்குள் இருந்ததாகவும் கூறுகின்றனர். முறையான பூசைகள் இல்லை. இப்பிள்ளையாரே திருப்பூவணலிங்கத்திற்கு நேர்எதிரே ஆற்றின் வடகரையில் இருந்து சிவலிங்கத்தைப் பார்த்தபடி காட்சியளிக்கிறார்.

ஆற்றின் வடகரையில் உள்ள ஆடித்தபசு மண்டபத்தின் வாயிலில் உள்ள பிள்ளையாருக்கு முன் ஒரு நந்தி உள்ளது. இந்த நந்தியானது ஆற்றின் தென்கரையில் திருக்கோயிலினுள் உள்ள திருப்பூவணநாதருக்கு (சுயம்புலிங்கத்திற்கு) நேர் எதிரே உள்ளது.

ஆடித்தபசு மண்டபம் சிதிலமடைந்துள்ள செய்தியை அறிந்த "குமுதம் ஜோதிடம்" ஆசிரியர், உயர்திரு. A.M. இராஜ கோபாலன் அவர்கள், திருக் கோயிலின் பெருமைகளைப் பொதுமக்கள் அறியும் வகையிலும், சிதிலமடைந்த ஆடித்தபசு மண்டபத்தைச் சீரமைக்கும் வகையிலும் 13-10-2006 மற்றும் 20-10-2006 நாளிட்ட குமுதம் ஜோதிடம் இதழ்களில் சிறப்புக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்கள்.

---

[6] திருப்பூவணநாதர் கோயில் பரம்பரை ஸ்தானிகம் தெய்வசிகாமணிப்பட்டர் கூறியது.

[7] இராட்சதக்கண்ணு என்பவர் திருப்பூவணம் திருக்கோயில் ஸ்தானிகர்களின் குலதெய்வமாக வணங்கப்பட்டு வருகிறார். இவரது திருவுருவம் சிவன் சந்நிதியின் உள்ளே அனந்தசயனப் பெருமாளுக்கு அருகில் உள்ளது.





ஆடித்தபசு மண்டபம் (சிதிலமடைந்த நிலையில்)



ஆடித்தபசு மண்டபம் புனர்நிர்மாணம் திருப்பணி பூமிபூசையின் போது (இடமிருந்து வலமாக)

1) தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் இராம. திண்ணப்பன் அவர்கள் சார்பாக இயற்பியல் பேராசிரியர் முனைவர் இரெ.சந்திரமோகன் அவர்கள்,

2) சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் உயர்திரு இளங்கோ அவர்கள்,

3) தேவகோட்டை, எழுவன்கோட்டை ஸ்தபதியார் மு.சண்முகம்

4) திருப்பூவணம் தொழிலதிபர் திரு. கு. முத்துப்பாண்டி அவர்கள்.

5) திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளைச் செயலாளர் வழக்கறிஞர் திரு. சண்முகநாதன் அவர்கள்



ஆடித்தபசு மண்டப பூமிபூஜை சங்கு பதிக்கும் நிகழ்ச்சி.ஸ்தபதியார் மு.சண்முகம் அவர்கள் முன்னிலையில், திருப்பூவணம் திரு.நா.ரா.கி.நாகரெத்தினம் தமயந்தி தம்பதியினரால் பால் வார்க்கப்படுகிறது. அவர்களுக்கு அருகில் காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி.காளைராசன் நாகலெட்சுமி தம்பதியினர் உடனிருக்கின்றனர்.





02 ஜூன் 2010 அன்று குடமுழுக்குச் சிறப்பாக நடைபெற்றது.

இதன் பயனாகத் தேவகோட்டை ஜமீன்தார், உயர்திரு. அள.அரு.சோம. நாராயணன் செட்டியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தேவகோட்டை உயர்திரு. தி.ராம. திண்ணப்பன் செட்டியார் அவர்கள், இம்மண்டபத்தைச் சீரமைக்கும் பணியை உபயமாகச் செய்திட முன்வந்தார்கள். இத்திருப்பணியில் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியின் மேனாள் முதல்வர் பேராசிரியர் ரெ.சந்திரமோகன் அவர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றினார்கள். இத்திருப்பணி தேவகோட்டை ஸ்தபதியார் மு.சண்முகம் அவர்களிடம் ஒப்புவிக்கப் பெற்றது. அதற்கான பூமிபூசை 23-04-2007 அன்று காலை 9.00 மணி முதல் 9.30 மணிக்குள் சிறப்பாக நடைபெற்றுப் புனர்நிர்மாணப் பணிகளுக்கான பூசைகள் நடைபெற்றன.

4.13 தில்லையும் திருப்பூவணமும்

வியாச முனிவரிடம் உபதேசம் பெற்ற மாந்தியந்தின முனிவரும், தியானகாட்ட முனிவரும் சிவபிரானை நோக்கித் திருப்பூவணத்திலே நூறு தேவ வருடம் தவம் செய்தனர். அதற்கு மகிழ்ந்த சிவபிரான் இடபாரூடராகத் தோன்றி இம்முனிவர்களுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்து அருளினார். பின்னர் அம்முனிவர்களது இருதயக்கமலங்களிலே திருநடனம் செய்தார் . திருப்பூவணத்தில், சிவபெருமான் ஆடிய தாண்டவத்திற்குப்

பிரம்ம தாண்டவம் என்று பெயர். மேலும், திருப்பூவணத்தில் கருவறையும் இராசகோபுரமும் வடகிழக்குத்திசையில் சிதம்பரத்தை நோக்கியிருக்கும். இவ்வாறான அமைப்பினால் திருப்பூவணம் கோயில் வாசலில் இருந்து உள்நோக்கி வணங்கினால் திருப்பூவணநாதரையும். வெளிநோக்கி வணங்கினால் சிதம்பர நடராஜரை நினைந்தும் வணங்கலாம். இவ்வாறாகத் திசையமைப்பினால் தில்லையும் திருப்பூவணமும் தொடர்பு உடையனவாக உள்ளன.

4.14 திருப்பரங்குன்றமும் திருப்பூவணமும்

திருப்பரங்குன்றத்தில் கருவறையின் உள்ளே சிவலிங்கம் கிழக்கு நோக்கி உள்ளது. சிவலிங்கத்திற்கு நேர் எதிரே பெருமாள் மேற்கு நோக்கிச் சிவலிங்கத்தைப் பார்த்தபடி நின்றருளுகிறார். இவர்களுக்கு இடையே இடமிருந்து வலமாகப் பெருமாளுக்கு அடுத்து முருகனும், முருகனையடுத்துத் துர்க்கை அம்மனும், அம்மனையடுத்து விநாயகரும் வடக்கு நோக்கி உள்ளனர். விநாயகரை அடுத்துச் சிவலிங்கம் கிழக்குநோக்கி உள்ளது.

திருப்பரங்குன்றத்தில் கருவறை அமைப்பு



இவ்வாறாக ஒரு குடவரைக்கோயிலில் அடுத்தடுத்து தெய்வங்கள் உள்ளது போல். திருப்பூவணத்தில் இந்த ஐந்து தெய்வங்களும். அடுத்தடுத்து ஒரே வீதியில் இருந்திருக்கின்றன.

திருப்பூவணநாதர் கோயிலில் சுற்றுச்சுவர் கட்டப்படுவதற்கு முன்னர். சிவலிங்கம், விநாயகர், சௌந்தர நாயகி அம்மன், முருகன், பெருமாள் ஆகிய ஐவருக்கும் ஒரே வீதியில் (இவ்வீதியை ஆவணவீதி என்று கருவூர்த்தேவர் பாடியுள்ளார்) தனித்தனியே கோயில்கள் இருந்துள்ளன. பின்னர் சௌந்தரநாயகி அம்மனைத் திருக்கோயிலின் உள்ளேயே கருவறை கட்டி எழுந்தருளச் செய்துள்ளனர். மேலும் அம்மன் இருந்த இடத்தில் முருகப்பெருமானை எழுந்தருளச் செய்துள்ளனர். இதனால் ஐந்து தெய்வங்களும் ஒரே வீதியில் இருந்த அமைப்புத் தற்போது திருப்பூவணத்தில் மாறிவிட்டது.

4.15 மதுரையும் திருப்பூவணமும்

மதுரையில் தற்போது உள்ள கோயில் அமைப்பிலேயே முன்பு திருப்பூவணத்தின் கோயில் அமைப்பு இருந்துள்ளது. சுவாமியின் வலது

பக்கத்தில் அம்மனுக்குச் தனிச் சந்நிதியும். அம்மன் சந்நிதிக்கு எதிரே தீர்த்தக் குளமும் இருந்துள்ளன.

	
1. மீனாட்சி அம்மன் சந்நிதி 2. சோமசுந்தரேசுவரர் சந்நிதி 3. பொற்றாமரைக் குளம் 4. சுவாமி கோயில் கிழக்குக் கோபுரம் 5. அம்மன் சந்நிதி கிழக்குக் கோபுரம்	1. முன்பு சௌந்தரநாயகி அம்மன் சந்நிதி (தற்போதைய முருகன் கோயில்) 2. திருப்பூவணநாதர் சந்நிதி 3. இராச கோபுரம் 4. மணிகன்னிகாத் தீர்த்தம் (தற்போது மூடப்பட்டுள்ளது) 5. திருமலைநாயக்கர் காலத்தில் கட்டப்பெற்று முடிக்கப்படாமல் உள்ள மொட்டைக் கோபுரம்

இவ்வாறாகத் திருப்பூவணத் திருக்கோயில் பலவிதங்களிலும் சிறப்புடையதாக அமைந்துள்ளது.

5. தீர்த்தங்கள்

திருப்பூவணத்தில் நவதீர்த்தங்கள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அவற்றில் 1) பாவநாச தீர்த்தம், 2) மணிகர்ணிகைத் தீர்த்தம், 3) பிரம்ம தீர்த்தம், 4) விஷ்ணு தீர்த்தம் 5) இலக்குமி தீர்த்தம், 6) சந்திர தீர்த்தம், 7) மார்க்கண்டேய தீர்த்தம், 8) வசிட்ட தீர்த்தம், 9) இந்திர தீர்த்தம் என ஒன்பது

தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் கீழ்க்கண்ட நான்கு தீர்த்தங்கள் பிரசித்தியுடன் உள்ளன.

5.1 **பாவநாச தீர்த்தம்** - சிவலிங்கத்திற்கு முன்பு வைகைநதியில் ஒரு அம்பு செல்லும் தொலை வரையுள்ள ஆற்றிற்குப் பாவநாசதீர்த்தம் என்று பெயர். இதற்கு "வேகவதி" என்ற பெயரும் உண்டு. சூரிய உதயத்திற்கு முன் இதில் மூழ்கி, சிவராத்திரியிலே தூக்கமின்றி, நான்கு சாமமும் விழித்திருந்து சிவபூசை செய்து தானங்கள் செய்வோர், இறுதியிலே சிவலோகம் சேர்ந்து வாழ்வர்.

5.2 மணிகன்னிகா தீர்த்தம் - இதற்கு மணிகன்னிகா தீர்த்தம், மணிகுண்டம், தேவிகுண்டம் என்ற பெயரும் உண்டு. முருகன் கோயிலுக்கு நேர் எதிரே உள்ள மிகப்பெரிய தெப்பக்குளம். இதிலேதான் தருமஞ்ஞன் என்பவன் கொண்டுவந்த அஸ்திக் கலயத்திலிருந்த எலும்பு பூவாக மாறியது. இதன் சிறப்புகள் இந்நூலில், தீர்த்தச் சருக்கத்திலே விரிவாகக் கூறப்பட்டுள்ளன. (தற்போது இத் தீர்த்தக்கரையைச் சுற்றிலும் குடியிருப்புகள் உள்ளன).

மணிகன்னிகைத் சூரியனால் சதுரவடிவில் தோண்டப் பெற்றது. இத்தீர்த்தத்திலே விண்ணுலகத்திலிருந்து அமிர்தத்துளி ஒன்று மணியாய் வந்து வீழ்ந்தது. இத்தீர்த்தத்தைப் பருகினால் நோய்கள் நீங்கப்பெற்று நீண்ட ஆயுள் உண்டாகும். மணிகன்னிகைத் தீர்த்தத்தில் நீராடினால் அனைத்துத் தீவினைகளும் நீங்கப் பெறும். அதில் நீராடி மின்னம்மையை வழிபட்டால் திருமணம் நடைபெறும். நல்ல கணவன் அமையப் பெறுவர். தீர்க்க சுமங்கலியாய் சுகம் அனுபவிப்பர். நன்மக்களைப் பெற்று வளமுடன் வாழ்வர். பெண்களைக் காமக்கண்ணோடு பார்த்தல் முதலான காமத்தினால் உண்டான பாவங்கள் நீங்கப்பெறும். பிறரை அவமதித்துக் கேலிசெய்த பாவம் நீங்கப் பெறும். மற்றும் அனைத்துப் பாவங்களும் நீங்கப்பெறும்.

இத்தீர்த்தத்தில் உயிர்நீத்தோர் சுவர்க்கம் சேர்வர். இறந்தோரின் ஓர் அங்கமோ எலும்போ இத்தீர்த்தத்தில் வீழ்ந்தால் அந்த உடலுக்குடையவர் சிவகதியடைவர். இத்தீர்த்தக் கரையிலே நீத்தார்களுக்குத் தர்ப்பணம் செய்தால், நீத்தார்கள் பெரிதும் மகிழ்ந்து தனது சந்ததியினரை ஆசிர்வதிப்பர். இதனால் சிவபெருமான் உள்ளம் மகிழ்ந்து, நீத்தார்களுக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் நற்கதியை வழங்குவார். இத் தீர்த்தத்திலே, திருமால், பிரம்மன், ருத்திரன்(சிவன்), இந்திரன், நாரதன், சனகாதி முனிவர்கள், கருடர்,

கந்தருவர், கபிலர் மற்றும் பல தேவர்களும் முனிவர்களும் இத்தீர்த்தத்திலே வாழ்கின்றனர். இத்தீர்த்தம் பிரம்மதேவனால் மராமத்துச் செய்யப் பெற்றுள்ளது.

5.3 *பிரம்ம தீர்த்தம்* - பிரம்ம தீர்த்தம் பிரம்மனால் உண்டாக்கப்பட்டது. திருக்கோயில் வளாகத்தில், யானை மண்டபத்திற்கு அருகே, இரட்டை விநாயகர் சந்நிதிக்கு எதிரே,கிணறாக உள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடினால், அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெறும். கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திர தினத்தன்று பிரம்மதீர்த்தத்திலே நீராடினால் அரக்கர் உருவம் மாறி, அழகான உருவம் பெறுவர். புத்திசுவாதீனம் குறைந்தோர் இதிலே நீராடினால் அவர்கள் நல்ல புத்தியைப் பெறுவர்.

5.5 *மார்க்கண்டேய தீர்த்தம்* - மார்க்கண்டேய தீர்த்தம், திருக்கோயிலில் இருந்து இரண்டம்பு செல்லும் (400 மீட்டர்) தூரத்தில் உள்ளது. இது மார்க்கண்ட முனிவரால் தோற்றுவிக்கப்பட்டது. பாலைக் கடையும் போது அதிலிருந்து வெண்மையான வெண்ணெய் திரண்டு தெரித்து விழுவது போல், வைகையாற்றில் வெள்ளப் பெருக்கு எடுத்து வரும்போது வெண்மையான நுரைதிரண்டு பந்துபோல் எறிந்து விளையாடுகிறதாம். அந்த நுரையானது மார்க்கண்டேயே தீர்த்தத்தில் வந்து விழுகிறது எனத் திருப்பூவணப் புராணம் (பாடல் எண் 1239) குறிப்பிடுகிறது.



“பாலின் வெண் தரளந்தனைத்
திரைசுருட்டிப் பந்து எறிந்தே விளையாடும்
சீலமார் வைகைத் திகழ் புனல்
இடத்துஞ் சேர்ந்த தெள் அமுத தீர்த்ததுஞ்
சால நீள் வான் தோய் சந்திரதடத்தும்
சங்கரன் கோயிலில் நன்பால்
கோல வாளி இரண்டு இட்டதோர் எல்லை
கொண்ட மார்க்கண்டதீர்த்தத்தும்”

தென்னை மட்டைகளை இந்தத் தீர்த்தத்தில் போட்டுவைத்துத் தென்னங்கிடுகள் செய்வர். இதனால் இந்தத் தீர்த்தம் மட்டைஊரணி என்ற பெயரால் பொதுமக்களால் அழைக்கப்பட்டு வருகிறது. மட்டைஊரணி (சர்வே எண் 16/14) 1 ஏக்கர் 75 செண்ட் நடுவில் அகில்தோப்பு தீர்த்தக் கேணி (கிணறு) வழியாக மார்க்கண்டேய தீர்த்தம் இருந்தது.

மட்டை ஊருணியைத் தூர்வாரி மீண்டும் பழையபடி தெப்பக்குளமாக மாற்றிடத் திருப்பூவணம் பேரூராட்சி சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் மைய மண்டபம் சுற்றுச்சுவர் நால்வர்சிலை பூங்கா உள்ளிட்ட அமைப்புகளுடன் தெப்பக்குளம் கட்டி முடிக்கப்பெற்றது. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஜெ. ஜெயகாந்தன் தலைமையில் 24.06.2020 அன்று தமிழகக் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் மாண்புமிகு க. பாஸ்கரன் அவர்கள் தெப்பக்குளத்தைத் திறந்து வைத்தார்.

6. ***தலவிருட்சம்***

“ஒரு யுகத்திலே தருவா, ஒரு யுகத்தில் வில்லுவமாய்,
ஒரு யுகத்தில் வன்னியாய், ஒரு யுகத்திற் - சீருற்ற
பாரில் கடவுள் பலாவாய்த், தழைக்க அதன்
வேரில் கிளைத்த முதல் விண்ணவர்கோன் - .... "

என்று திருப்பூவணநாதருலா பாடல் குறிப்பிடுகிறது.

*முதலாம் யுகத்திலே **பாரிசாதம்** தலவிருட்சமாக இருந்துள்ளது. இரண்டாம் யுகத்திலே **வில்வம்** தலவிருட்சமாக இருந்துள்ளது. மூன்றாம் யுகத்திலே **வன்னி** தலவிருட்சமாக இருந்துள்ளது. நான்காம் யுகமாகிய இந்தக் கலியுகத்திலே **பலா** மரம் தலவிருட்சமாக உள்ளது.*

பாரிசாதம் - பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் திரண்டு வந்தது. அமுதம் திரளும்போது சில அமுதத் துளிகள் பூமியிற் சிதறின. அதிலிருந்து பாரிசாதம் முதலான கற்பக விருட்சங்கள் பூமியில் தோன்றி வளர்ந்தன. பாரிசாதம் தேவலோகத்தில் உள்ள மரமாகும். பாரிசாத மரம் திருக்கைலாயத்தில் உள்ளது. இது நினைப்பதைத் தரக்கூடிய இயல்புடையது. பாரிசாதம் ஓர் அறிவுடைய மரம். பாரிசாதப் பூவின் மணம், அதனைச் சுற்றிலும் யோசனை (சுமார் 18 கி.மீ.) தூரம் பரவியிருக்கும். இம்மரத்தை அண்டி வசிக்கும் பறவைகள் மற்றும் விலங்குகன் யாவும் தம்முடைய பகையை மறந்து மகிழ்ச்சியாய் வாழும்.

உமையம்மை தவம்மேற்கொள்ள வேண்டிக் கைலாயத்திலிருந்து திருப்பூவணம் வந்தபோது பாரிசாதத்தின் கிளையைக் கொண்டு வந்து நட்டுவைத்து வளர்த்து அதன் நிழலிலே தவம் செய்தார். அம்மரத்தின் கீழே சிவபெருமான் சுயம்புலிங்கமாய்க் காட்சியளித்ததாகத் திருப்பூவணத் தலபுராணம் கூறுகிறது. இதனால் “பாரிசாத மரம்” தலவிருட்சமாகும். தற்போது கோயிலில் பாரிசாதமரம் இல்லை. இராசகோபுரத்திற்கு அருகே பலாமரம் ஒன்று உள்ளது.

7. தினவழிபாடுகளும் திருவிழாக்களும்

இங்கு தினமும் ஆறுகால பூசை நடைபெறுகிறது.

7.1 மாத விழாக்கள் - வைகாசியில் விசாகவிழா, ஆடித்தபசு விழா, ஆடிமுளைக்கொட்டு உற்சவம், புரட்டாசியில் நவராத்திரிக் கொலு உற்சவம், ஐப்பசியில் கோலாட்ட உற்சவம், கார்த்திகையில் பெரியதீபம், மார்கழித் திருவாதிரையில் ஆருத்ரா தரிசனம், மாசியில் சிவராத்திரி ஆகிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

1) சித்திரை விசு – சுவாமி அம்பாள் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் நடைபெறும். 2) வைகாசி விசாகம் அன்று முருகன் கோயிலில் அருள்மிகு வள்ளி தேவசேனை உடனாய சுப்பிரமணிய சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு. 3) ஆனி, 4) ஆடி 5) ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்திவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, அன்று கோயிலில் இருந்து விநாயகர் புறப்பாடு நடைபெறுகிறது. 6) புரட்டாசி மாதம் **நவராத்திரி** உற்சவ விழா சிறப்பாக நடைபெறுகிறது. 9ஆம்நாள் **கொலு** அலங்காரம் நடைபெறுகிறது. 10ஆவது நாள் குதிரைவாகனத்தில் சந்திரசேகர் புறப்பாடு ஆகி **அம்புவிடுதல்** நடைபெறுகிறது. 7) ஐப்பசி மாதம் மகா அன்னாபிஷேகம் சிறப்பாக

நடைபெறுகிறது. 8) கார்த்திகை மாதம் சொக்கப்பன் கொழுத்துதல் பஞ்சமூர்த்தி புறப்பாடு நடைபெறுகிறது. 9) மார்கழி மாதம் தேய்பிறை அட்டமி அன்று பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடக்கிறது. உலக உயிரினங்களுக்கு எல்லாம் சிவபெருமான் 'படிஅளத்தல்' செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. உத்தங்குடி இராமநாதஐயர் குடும்பத்தினர் இந்த விழாவில் பங்கேற்கின்றனர். 10) தைப்பூச நாளில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலில் சிறப்பு அபிஷேகமும் வழிபாடும் நடைபெறுகிறது.11) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் அன்று திருப்பூவணத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறுகின்றன. 12) பங்குனி மாதத்தில் திருப்பூவணம் புதூரில் உள்ள **மாரியம்மன்** கோயிலில் **எல்லைப்பிடாரி அம்மன்** உற்சவத் திருவிழா 10 நாட்களுக்குச் சிறப்பாக நடைபெறுகிறது. திருப்பூவணநாதர் கோயிலில் இருந்து மாரியம்மன் (உற்சவர்) புறப்பாடு ஆகி, மாரியம்மன் கோயிலுக்குச் செல்கிறது. ஒன்பதாம் நாள் பொங்கல் திருநாளாகும். அன்று **அக்னிச்சட்டி** எடுத்தல் சிறப்பாக நடைபெறுகின்றது. 10ஆம் நாள் தீர்த்தவாரி. முன்பு லாடனேந்தல் கிராமத்தில் உள்ள **வீரமாகாளி அம்மன்** கோயிலில் 'பிடாரி உற்சவம்' நடைபெற்று வந்ததாகவும், நாயக்கர் ஆட்சிக் காலத்திற்குப் பின்னர் புதூர் மாரியம்மன் கோயிலில் நடைபெற்று வருவதாகவும் கூறுகின்றனர்.

7.2 திருவிழாக்கள் – திருப்பூவணத்தில் ஆடியில் முளைக்கட்டுத் திருவிழா 10 நாட்களும், பங்குனியில் திருக்கல்யாணம் திருவிழா 10 நாட்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

முளைக்கட்டுத் திருவிழாவானது அம்மனுக்கு உகந்த விழாவாக, பிரம்ம உற்சவ விழாவாக நடைபெறுகிறது. ஆடி அமாவாசைக்குப் பிறகு உத்திர நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் முதல்நாள் திருவிழா துவங்கி நடைபெறுகிறது. பத்தாம்நாள் முளைப்பாரி ஊர்வலம், திருவிழா. மறுநாள் உத்திராட நட்சத்திரத்தில் தீர்த்தவிழா நடைபெறுகிறது. முளைக்கட்டுத் திருவிழாவில் அல்லிநகரம் கிராமம் அகுதார்கள்[8] பங்கேற்கின்றனர். விநாயகர் மற்றும் அம்பாள் புறப்பாடு நடைபெறுகிறது. முளைப்பாரி ஊர்வலமாகச் சென்று சின்னக்கோட்டையைச்[9] சுற்றி வருகிறது.

[8] அகுதார்கள் - உரிமையாளர்கள்

[9] சின்னக்கோட்டை – கோயிலில் இருந்து புறப்பட்டு பஜார்தெரு வழியாகச் சென்று வீரபத்திரசாமி கோயிலுக்குச் சென்று திரும்புதல்



பங்குனியில் திருக்கல்யாணம் நடைபெறும் 10நாள் திருவிழாவே சிறப்பாக அனைவராலும் கொண்டாடப் பெறுகிறது. இவ்விழா, பங்குனியில் அமாவாசை முடிந்தபின் வரும் கார்த்திகை நட்சத்திர தினத்தன்று கொடியேற்றத்துடன் துவங்குகிறது. இத்திருவிழாவில் 6ஆம் நாள் கீழரத வீதியில் உள்ள கழுவேற்றம்-பொட்டல் என்ற இடத்தில் சமணர்கள் கழுவேறிய நிகழ்ச்சி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. 7ஆம் நாள் பிட்சாடணர் உலாவந்து பொதுமக்களிடம் பிச்சை பெறுதல் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. 8ஆம் நாள் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. பூப்பல்லக்கில் வீதியுலா சென்று அருள்மிகு மாரியம்மன்கோயிலுக்கு எதிரேயுள்ள ***கைலாச மடத்தில்*** எழுந்தருளுவர். 9ஆம் நாள் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. ஒரு பெரிய தேரும், ஒரு சிறிய தேரும் இத் திருக்கோயிலுக்கு உள்ளன. 10ஆம் நாள் இரவு, சுவாமியும் அம்பாளும் காளைவாகனத்தில் திருவீதியுலா வருகின்றனர். இத்துடன் பங்குனித் திருவிழா முடிவடைகிறது.

7.3 ஆடித்தபசு விழா

ஒவ்வொரு வருடமும் ஆடிப் பூரணை (பௌர்ணமி) முடிந்த மறுநாள் இவ்விழா நடைபெறுகிறது. அன்று காலையில் அம்மன் புறப்பட்டுச் சென்று

ஆற்றைக்கடந்து ஆடித்தபசு மண்டபத்தில் வீற்றிருக்கிறார். மாலையில், திருப்பூவணநாதர் புறப்பட்டுச் செல்கிறார். ஆற்றின் குறுக்கே அம்மன் எதிர்கொண்டு அழைத்துச் செல்கிறார். பின்னர் தம்பதிசமேதரராக மண்டபத்தில் வீற்றிருந்து மக்களுக்கு அருள்கின்றனர். பின்பு இரவு நேரத்தில் மண்டபத்திலிருந்து அர்த்தசாம பூசைக்குத் திருக்கோயில் வந்து சேர்கின்றனர். தற்போது ஆடித்தபசு விழா திருக்கோயில் வளாகத்தில் நடைபெறுகிறது.

அருள்மிகு மின்னம்மையின் (சௌந்தரநாயகியின்) திருவருளால் நாட்டரசன்கோட்டை கண்ணப்பன் செட்டியார் அவர்களுக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. குழந்தைச் செல்வம் கிடைக்கப்பெற்ற செட்டியார் அவர்கள் மின்னம்மைக்குத் திருவிழா நடத்திட விரும்பியுள்ளார். அவர் அரச குடும்பத்தினருடன் மிகவும் நட்புக் கொண்டிருந்த காரணத்தினால், ஆடிமாதம் 10நாள் திருவிழாக்கள் கோயிலில் நடைபெறவும், 11ஆவது நாள் திருவிழாவாக ஆடித்தபசுவிழாவை கண்ணப்பன் செட்டியார் அவர்கள் நடத்திடவும் அனுமதி வழங்கியுள்ளனர். அது தொடக்கம் நாட்டரசன்கோட்டை கண்ணப்பன் செட்டியார் அவர்களும் அவரது வம்சத்தினரும் ஆடித்தபசு விழாவைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த திரு. ச. இராம. சங்கர நாராயணன் செட்டியார் (இருப்பு-திருச்சிராப்பள்ளி) அவரது தம்பி இராம. சுப்பையா செட்டியார் (இருப்பு – மதுரை) மற்றும் SD.கண்ணப்பன் செட்டியார் (இருப்பு- மதுரை) ஆகியோரால் ஆடித்தபசு விழா நடத்தப்பட்டு வருகிறது.

ஆடித்தபசு மண்டபம் சிதிலமடைந்து இருந்த காரணத்தினால் இத்திருவிழா கடந்த பல வருடங்களாக ஆடித்தபசு மண்டபத்தில் நடைபெறாமல் திருக்கோயில் வளாகத்திலேயே நடைபெற்று வருகிறது. இப்போது ஆடித்தபசு மண்டம் சீரமைக்கப்பட்டுக் குடமுழுக்கு நடைபெற்றுள்ளதால், இத்திருவிழாவை மீண்டும் ஆடித்தபசு மண்டபத்தில் சிறப்பாக நடத்துவதற்கான முயற்சிகளை ஸ்ரீபொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையினர் செய்து வருகின்றனர்.

7.4 இரசவாதம் செய்த 36ஆது திருவிளையாடல் சித்தர் திருவிழா

மதுரைத் திருக்கோயிலில் 64 திருவிளையாடல்களும் வருடந்தோறும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதில் பங்குனி உத்திரம் நன்னாளன்று 36ஆவது திருவிளையாடலான "இரசவாதம் செய்த படலம்" விழாவிற்கு மதுரையிலிருந்து சுந்தரேசர் சுவாமி புறப்பட்டுத் திருப்பூவணம் பொன்னனையாள் மண்டபத்திற்கு வந்து திரும்புவார். மதுரைக்கும்

திருப்பூவணத்திற்கும் இடையேயுள்ள விரகனூர், புளியங்குளம், தட்டாங்குளம் மற்றும் பல ஊர்களில் தேசிய நெடுஞ்சாலையின் ஓரங்களில் இத் திருவிழாவிற்கான மண்டபங்கள் இன்றும் உள்ளன. இத்திருவிழா இப்போது திருப்பூவணத்தில் நடைபெறுவதற்குப் பதிலாகத் திருவாப்புடையார் கோயிலில்[10] நடைபெற்று வருகிறது.



36ஆவது திருவிளையாடல் இரசவாதம் செய்த திருவிழா
சித்தராய் வந்த சிவபெருமானுக்குப்
பொன்னனையாள் அன்னம் பாலித்தல்

"*இத்திருவிழாவை மீண்டும் நடத்திட வேண்டியது அவசியமாகும்*" என்று ஸ்ரீலஸ்ரீ ஞானசேகரசுவாமிகள் அருளிச் செய்து, இவ்வுலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ்வதற்கு வழிவகை செய்யும் பொருட்டு ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை ஆரம்பித்துள்ளார்கள். அறக்கட்டளையின் சார்பாக 17.04.2008 சித்திரை மாதம் வளர்பிறை பிரதோசம் அன்று முதன்முறையாகச் சித்தர்விழாவும், அன்னதானமும்

[10] திருவாப்புடையார்கோயில் முன்னாளில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தின் நிருவாகத்தில் இருந்தது. தற்போது மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிருவாகத்தில் உள்ளது.

சிறப்பாக நடைபெற்றன. அதைத் தொடர்ந்து வருடந்தோறும் சித்தர்விழாவும், அன்னதானமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பங்குனி உத்திரம் அன்று மதுரையிலிருந்து அருள்மிகு சோமசுந்தரேசுவரரைத் திருப்பூவணத்திற்கு அழைத்துவந்து முன்புபோல் இரசவாதம் செய்த திருவிளையாடலை நடத்திட வேண்டும் என ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் சார்பாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.



36ஆவது திருவிளையாடல் இரசவாதம் செய்த திருவிழா சித்தராய் வந்த சிவபெருமான் திருநீற்றை இட்டு இரசவாதம் செய்கிறார்.

7.4.1 சாம நத்தம்

பங்குனிமாதம் உத்திரநட்சத்திர நாளன்று திருப்பூவணத்தில் நடைபெறும் 36ஆவது திருவிளையாடல் திருவிழாவின் போது ஒவ்வொரு வருடமும் மதுரையிலிருந்து அருள்மிகு சோமசுந்தரேசுவரரையும் அன்னை மீனாட்சியையும் திருப்பூவணத்திற்கு எழுந்தருளச் செய்வர். இரவு திருப்பூவணத்தில் தங்காமல் அர்த்தசாம பூசைக்குச் சுவாமியும் அப்பாளும் பல்லக்கில் மதுரைக்குத் திரும்பி விடுவர்.


மதுரையைத் திருமலைநாயக்க மன்னன் ஆண்ட போது, இவ்விழா சிறப்பாக நடைபெற்றது. ஒருவருடம், பங்குனி உத்திரநாளன்று இவ்வாறு அன்னை மீனாட்சியையும் அப்பன் சொக்கநாதனையும் திருப்பூவணத்திலிருந்து மதுரைக்குத் திரும்பித் தூக்கி வரும்போது வைகையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இருந்தது. இதனால் சிலைமான் என்ற ஊரின்

அருகே பெரும் வெள்ளம் பாதையைக் கடந்து ஓடியது. எனவே சுவாமியையும் அம்மனையும் வெள்ளத்தைக் கடந்து தூக்கிச் செல்ல முடியவில்லை. சிலைமானுக்கு அருகில் உள்ள கீழடி என்ற ஊரின் வழியாகத் தூக்கிச் செல்ல முயன்றனர். கால்வாயிலும் வைகையாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடியதால், மனித முயற்சிகள் பயனளிக்கவில்லை. நிலைமையை உணர்ந்து கொண்ட திருமலைநாயக்க மன்னன் அருகில் உள்ள ஊர்களில் எல்லாம் பறையறிவிக்கச் செய்தார். அர்த்த சாமத்தில் 'மதுரையம்பதியின் முதல்வன்' ஆற்று வெள்ளத்தைக் கடக்க முடியாமல் இருப்பதை அறிந்து ஓடிவந்த உதவினர். தோன்றாத்துணையாய் ஈசனும் வந்து திருவருள் புரிந்தான். அன்னை மீனாட்சியும் அப்பன் சொக்கனும் நல்லபடியாக மதுரைக்குத் திரும்பிச் சென்று அர்த்தசாம பூசையில் கலந்துகொண்டனர். மன்னன் திருமலை நாயக்கனும் நிம்மதியாக உறங்கி எழுந்தான். எழுந்தவுடன் அமைச்சரை அழைத்து, தங்களது உயிரையும் பொருட்டாக மதியாமல் அர்த்த சாமத்தில் வந்து உதவிய அனைவரையும் அழைத்து வருமாறு ஆணையிட்டான். உதவியோர் அவனைவருக்கும் ஒரு கிராமத்தையே தானமாக வழங்கினான். சாமத்தில் வந்து உதவியோருக்குச் சன்மானமாக வழங்கப்பட்டதால், அந்தக் கிராமத்திற்குப் பெயர் 'சாம நத்தம்' என்ற பெயர் உண்டானது.

இரவில் தங்காமல் மதுரை திரும்பிய காரணத்தினால், இந்நிகழ்ச்சி நடைபெற்ற காலந்தொட்டு, அருள்மிக மீனாட்சியம்மைக்கும் அப்பன் சொக்கநாதனுக்கும் "இராத் தங்கார்" என்ற காரணப் பெயர் உண்டானது. அன்றைய நாளிலிருந்து அன்னை மீனாட்சி பிறந்த மதுரையம்பதியில் பிறந்த பெண்கள் யாரும் இராத் தங்கார். அதுபோல், மதுரையில் திருமணம் செய்து கொண்ட மாப்பிள்ளைகள் யாரும் இராத்தங்கார். எப்பாடு பட்டேனும் இரவுக்குள் மதுரை வந்து சேர்ந்துவிடுவர்.

மன்னன் திருமலை நாயக்கருக்குப் பின்னர் பல்வேறு ஆட்சிமாற்றங்கள் உண்டாகி, ஆங்கிலேயேர் ஆட்சி செய்த காலத்தில் இந்த விழாவானது திருப்பூவணத்தில் நடைபெறுவது நின்றுபோய், மதுரையின் வடகரையில் உள்ள திருவாப்புடையார் கோயிலில் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீபொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் நிறுவுனர் தலைவரான மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு, அருள்மிகு ஸ்ரீ பஞ்சமுக ப்ரத்தியங்கிராதேவி கோயில், ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகளது தலைமையில் இத்திருவிழாவை மீண்டும் திருப்பூவணத்தில் நடத்திடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.



03.05.2012 அன்று சித்தர்விழா மற்றும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது. விழாவின்போது 'திருப்பூவணம்-தலவரலாறு' குறுந்தகடு வெளியிடப் பெற்றது. அதைத் தொடர்ந்து தேவகோட்டை காரைக்குடியார்வீடு திருவளர்செல்வி மெ.ராம.பழ.ராம.சுப.பழ. பழ.விசாலாட்சி அவர்களின் பரதநாட்டியமும் நடைபெற்றது.

7.5 குடமுழுக்கு விழாக்கள் -- (1) 1900ஆம் ஆண்டு தேவகோட்டை உத்தமன் செட்டியார் வகையறாவினர் பெரும் பொருட்செலவில் திருப்பணிகள் பலவும் செய்து குடமுழுக்கு நடத்தியுள்ளனர்.

(2) 1932ஆம் ஆண்டு இக்கோயிலின் திருப்பணிகள் துவங்கி கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றுள்ளது.

(3) 1961ஆம் ஆண்டு அரசு மானியம், பொதுமக்களின் நன்கொடை, கோயில் நிதி இவற்றின் உதவியால் சீரமைக்கப்பட்டு, தேவகோட்டை உ.மு. குடும்பத்தாரால் (28.08.1961) அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

(4) 2002ஆம் ஆண்டு ரூபாய் 50இலட்சத்திற்கும் அதிகமான பொருட்செலவில் திருப்பணிகள் செய்யப்பெற்று (27.06.2002) அன்று அட்டபந்தன மகா கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.



சிவகெங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த திருப்பூவணம்

ஸ்ரீ சௌந்தரநாயகி சமேத ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர்

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை.

[illegible]

நிகழ்ச்சி நிரல்


23—8—61	7a.	[illegible]
24—8—61	8a.	[illegible]
25—8—61	9a.	[illegible] இரவு 9-30 மணிக்குமேல் 11 மணி [illegible] யாக பூஜை
26—8—61	10a.	[illegible]
27—8—61	11a.	[illegible]
28—8—61	12a.	[illegible] (காலை 6 மணி முதல் 7-20)க்குள் [illegible] மஹா கும்பாபிஷேகம். [illegible]

S. ஜெயராமய்யர், B.A., B.L.,

திருப்பூவணம் கோவில் திருப்பணிக் கமிட்டி மெம்பர்களும், நிர்வாகஸ்தர்களும்.

7. திருப்பூவணப் புராணம்

துறவியரும், ரிஷிகளும் பிரம்மனை அணுகித் தவம் மற்றும் வேள்வி செய்வதற்கேற்ற புனித இடத்தைக் காட்டுமாறு வேண்டிக் கொண்டனர். அதற்கேற்பப் பிரம்மனும் ஒரு சக்கரத்தை உருண்டோடச் செய்து அது நின்று விழும் இடமே தவத்திற்கு ஏற்ற புண்ணிய பூமியாகும் என்றார். அவ்விடம்



"நைமிசாரண்யம்" என்று அழைக்கப்படுகிறது. இங்குதான் வியாச முனிவர் புராணங்களையும் மகாபாரதத்தையும் இயற்றினார். வியாசமுனிவர்

சூதமுனிவருக்குக் கூறிய புராணங்கள் பதினெட்டு ஆகும். இப்புராணங்களில் பிரம்மகைவர்த்த புராணம் என்பதும் ஒன்று. இப்புராணத்தின் எழுபதாம் அத்தியாயம் முதல் எண்பத்துநான்காம் அத்தியாயம் வரை திருப்பூவணத்தலபுராணம் கூறப்பட்டுள்ளது.

திருப்பூவணப் புராணம் (வடமொழியில்) பாடப்பெற்ற வரலாறு

நைமிச வனத்திலே, மிகுந்த தவமுடைய சௌநகர் முதலான முனிவர்கள் பலர் சிவபிரான் திருவடியை அடைவதற்குக் கூறப்பட்ட வரலாற்றுக் கதைகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கே சூதமுனிவர் என்பவர் வந்தார். மற்றைய முனிவர்கள், அவரை வணங்கி வரவேற்று அமரச்செய்தனர். பின்பு அவரிடம் நீங்கள் முன்பு ஒருமுறை சுவேதவன (திருவெண்காடு) சேத்திரமான்மியத்தைக் கூறும்போது இடையிலே புட்பவன மான்மியத்தைச் சுருக்கிச் சொன்னீர்கள். இப்பொழுது அதனை விரிவாக விளக்க வேண்டுமென்று முனிவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

முருகப்பெருமான் நந்திக்குத் திருப்பூவணப் புராணத்தைக் கூறினார். நந்திதேவன் சநற்குமாரனுக்கு விரித்துக் கூறினார். சநற்குமாரன் வேதவியாசனுக்கு அதை ஓதினார். வேதவியாசர் சூதமுனிவருக்குக் கூறினார். சூதமுனிவர் நைமிசவன முனிவர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்குத் திருப்பூவணப் புராணத்தைச் சொல்லியருளினார்.

திருப்பூவணப் புராணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் உண்டாகும் பலன்கள்

சூரியன் பூசனைச் சருக்கத்தைப் படிப்போரும் கேட்போருக்கும் புத்தியில் கொள்வோரும், அவர்கள் திருப்பூவணம் வந்து வழிபட்டு முக்தியடையும் பேறு கிடைக்கப்பெறுவர். திரணாசனன் முக்தி பெற்ற சருக்கத்தை இசையுடன் பாடுவோரும், இக் கதையைக் கூறுவோரும், பொருள் உணர்ந்தோரும் மற்றும் இக்கதையைச் செவிமடுத்துக் கேட்டவர்களும் சிவபெரும்பதி சேர்வர். மணிகன்னிகைச் சருக்கக் கதையைக் கூறுவோர் அர்த்தநாரியான சிவபெருமானின் பதியில் தங்குவார்கள். துன்மனன்சருக்கத்தைப் படிப்போரும் அதனை ஓதுவோரும் கேட்போரும் பூசை செய்வோரும், ஊர்வசியைப் போன்ற அழகுடைய பெண்டிருடன் பதினாயிரம் வருடம் வாழ்வர். தருமஞ்ஞன் முக்தி பெற்ற சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் அரனாகிய சிவபெருமானிடத்து வந்து அவரது அருகில் இருப்பர்.

உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கத்தில், அமங்கலிகள் நீராடினால் அடுத்த பிறவியில் சுமங்கலியாய் வாழ்வர், விரத நற்பலன்கள் உண்டாகும். உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் அடையும் பலன்கள் கலியின் கொடுமை நீங்கப்பெற்று, வளமை பெற்று நற்கதி பெறுவர். பாற்கரபுரச் சருக்கத்தைப் பண்பொடு பாடுவோர் செவிகொண்டு கேட்டு உள்ளத்தில் கொள்வோர் செல்வம்மிகுந்த நாட்டை அரசாள்வர். சர்வபாவ விமோசனச்சருக்கத்தைப் படிப்போரும் அதைக் கேட்போரும் பிறரிடம் கூறுவோரும் மனைவி மக்கள் பேரன் பேத்திகள் சுற்றத்துடன் மங்கலமாக வாழ்ந்து சிவபிரானின் பொற்பாதங்களை அடைவர். பிரம்மசாப விமோசனச்சருக்கத்தைத் தினமும் படிப்போர், அதன் பொருளை உணர்ந்தோர், அதனைப் பிறரிடம் கூறுவோர் அதைக் கேட்போர் அனைவரும் தங்களது வாழ்நாளில் நீண்ட சுவர்க்கத்தில் உள்ள மகளிர் சூழ இருப்பர். இலக்குமி சாபவிமோசனச் சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் இலக்குமியின் அருளாலே செல்வம் பெற்று, மங்கலமாக வாழ்வர். மேலும் இதனால் கிடைக்கும் பலனைத் திருநந்தி தேவரே நேரில் வந்து எடுத்துரைத்தாலும் அரிதாகும். அவ்வளவு அதிகமான பலன்கள் கிட்டும். உமாதேவி திருவவதாரச்சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் சிவபிரான் திருவருளினாலே முக்தியடைவார்கள். திருக்கலியாணச் சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் கடுந்துயரங்கள் நீங்கப் பெற்று, மங்களம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும், இந்திரபோகங்கள் நிறைந்த செஞ்சடிலன் பதத்தில் சேர்குவார்கள். தக்கன் வேள்வியழித்த சருக்கத்தை விருப்பத்துடன் படிப்போரும் கேட்போரும், எட்டுத் திசைகளும் புகழ அரசராய் வாழ்வர். சித்தம் மிகும். சுவர்க்க இன்பத்தை நீண்ட காலம் அனுபவிப்பர். உமைவருசருக்கத்தை ஓதுவோரும் அதைக் கேட்போரும், சிவபெருமானது தாமரைமலர்ப் பாத நிழலில் வாழ்வார்கள். சுச்சோதி தீர்த்த யாத்திரைச் சருக்கத்தைப் படிப்பவர்கள், நல்ல புதல்வர்களைப் பெற்று, மேன்மையடைவர். பத்தி மிகுந்திருப்பர், தேகம் சுத்தமாய் வாழ்ந்து சிவகதி சேர்வார்கள். சுச்சோதி பிதுர்களை முக்தியடைவித்த சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் சிவபிரானது மோன ஞான நன்துதி பொருந்துவார். தீர்த்தச் சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் "பார்புரந்தருள் பார்த்தி வராகியே பரவரும் பரமுத்தி பொருந்துவார்". நளன்கலிமோசனச்சருக்கத்தை இசையுடன் பாடி எண்ணத்தில் மகிழ்ச்சி அடைவோரின் துன்பங்கள் நீங்கும். கலிகாலத்தின் கொடுமைகள் குறையும். திருவிழாச் சருக்கத்தைப் படிப்போரும் அதை அன்புடன் கேட்போரும் தங்களது துயரமான

எண்ணங்கள் நீங்கப் பெற்று, பொன்னலம்பலத்தைச் சென்று சேர்வர். சிதம்பரவுபதேசச் சருக்கத்தைப் படிப்போரும் கேட்போரும் திருப்பூவண நாதருக்கு நல்ல பூசைகள் செய்தால் கிடைக்கும் பலன்கள் அனைத்தும் கிடைக்கும். நாடிய பொருள்கள் யாவும் கிடைக்கப்பெறுவர். "புவனம் எங்கும் சீர்போற்றும் பூவண மான்மியத்தை நவிலுறச் செவிக்கு நாளும் நல் விருந்தாக எடுத்துக் கூறுவோர்க்குச் சிவபிரான் அருளினாலே, அவர்கள் விரும்பும் பேர் உவகை கூடும், இது சத்தியஞ் சத்தியம்" (திருப்பூவணப் புராணப் பாடல் 1435).

திருப்பூவணப் புராணக் கதைகள்

7.1 சூரியன் பூசனைச் சருக்கம்

நவக்கிரகங்களுக்கும் தலைவனாகச் சூரியபகவான் விளங்குகிறார். ஒரு காலத்தில் பேரண்டத்தில் ஒரு பெரிய புரட்சி நிகழ்ந்தது. இதனால் சூரியனுடைய தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டு, பதவி பறிபோகும் நிலை ஏற்பட்டது. வேறொரு சூரியன் தலைமைப் பதவி ஏற்கும் நிலை உண்டானது.

தனது பதவியை நிலை நிறுத்திக் கொள்வதற்கான வழி வகைகளைச் சூரியன் ஆராய்ந்தார். அப்பொழுது இந்தப் பேரண்டமே சிவலிங்கமாகத் திருப்பூவணத்தில் எழுந்தருளுகிறது என்பதை அறிந்தார். எனவே தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள திருப்பூவண நாதரைச் சித்திரை மாதத்திலே சித்திரை நட்சத்திரத்திலே, மணலைச் சிவலிங்கம் போலக் குவித்து, உரிய முறைகளைப் பின்பற்றிப் பூசை செய்தார்.

அருள்மிகு திருப்பூவணனைச் சூரியன் போற்றி வழிபட்டது.

254
சுகர் அன்பு உடையானே, துதி சொல்வார் புடையானே,
இகல் சார்பு அடையானே, குறள் எழு சூழ் படையானே,
திகழ்கண் படையானே, உறு செனனம் படையானே,
புகழ் மன்று உடையானே, பொரு புலித்தோல் உடையானே,
255
அண்டங் கரியானே, அரி அயர்கட்கு அரியானே,
விண் தங்கு ஒளியானே, சதுர் வேதத்து ஒளியானே,
பண் தங்கு இசையானே, உறுபவம் ஒன்று இசையானே,
கண்டம் கரியானே, நுதல் கண்டம் கரியானே,
256
மேவும் பொருவு இல்லாய், மக மேருப் பொருவில்லாய்
சேவின்று வசத்தாய், அரு தினம் ஒன்று வசத்தாய்
ஓவில் உயிர்க்கு உயிராய், திருவுருவம் பரம் உயிராய்,
தாவில் சிவ பதத்தாய், திகழ் தரு தாமரைப் பதத்தாய்
257
கதி நல்கு சங்கரனே, உலகவை நீக்கு சங்கரனே,
விதி நல்கு கங்கையனே, சடை மிசை தாங்கு கங்கையனே
கத நல்கும் அங்கணனே, உமிழ் கடு நாக(க்) கங்கணனே
திதன்[11] ஆன வங்கியனே, திகழ் திருமேனி அங்கியனே
258
மனம் ஒன்றும் எம்மானே, மழு மான் ஏந்தும் எம்மானே,
புனல் சேர் சடையானே, புவி புகழ் மா சடையானே,
சின மால் விடையானே, அடி சேரா விடையானே,
கனல் ஏந்து தினகரனே, எனத் துதித்தான் தினகரனே.
259
அன்னதோர் காலை தன்னில், அவ் இலிங்கத்து, நாப் பண்
கன்னியாய் உலகம் ஈன்ற கௌரி மெய்கலந்து தோன்றச்,
சென்னியில் திகழ்ந்த கற்றைச் செஞ் சடா மகுட வேணி
மன்னிய மதிக் கொழுந்தும், வாளரா விலங்கு மார்பும்,
260
அங்கண் மா ஞாலம் காக்கும் அபயமும் வரதமும் சேர்,
பொங்கு ஒளி திசை விளங்கும் போர் மழுப் படையும் மானும்

---

[11] *திதன் = மனவுறுதியுடையவன். திதனாயெவருமறியாத பொருளைத் தெரிந்துகொண்டு* (*பகவற்கீதை* 2 31)

வங்க வாரிதியின் நஞ்ச மருவு கந்தரமு(ம்), மேனி
தங்கு வெண்ணீறு மிக்குத் தயங்கு கண்டிகை நற்றாரும்,
261
கோடி சூரியரும் கோடி குளிர் மதித் திரளும் ஒன்றாய்
நீடிய ஒளியும் வேங்கை நிகழ் பொறி அதளும் தோன்ற
மாடு உறும் அயன் மால் விண்ணோர் மாதவர் முநிவர் போற்றத்
தேட அரும் பொருளை அந்தத் தினகரன் தெரியக் கண்டான்
262
நித்தமாய் அருள் சுரக்கு நிருமலன் தன்னைக் காணுஉ
அத் திரம் இன்றி யானே அதிபதியாக வேண்டும்
சுத்தமாம் என துமிக்க தொல்லிரும் பதத்திற்கு என்னாப்
பத்தியால் சத தளச் செம் பங்கய பதத்தில் வீழ்ந்தான்,

சூரியனுக்கு அருள்புரிய உமாதேவி சமேதராகச் சிவபிரான் தோன்றியருளினார். சூரியன் விரும்பியபடியே நவக்கிரகங்களுக்கும் நாயகனாக என்றும் நிலைத்திருக்கும்படிச் சூரியனுக்கு அருள் வழங்கினார். திருப்பூவணத்தில் வசிப்பவர்க்கு அறமும் பொருளும் இன்பமும் வீடும் கிடைக்குமென்று அருளினார். சூரியனுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தையும் உபதேசம் செய்தருளினார். இப்பதியில் வணங்கிய பெருமையாலே விநாயகக்கடவுள் சிவார்ச்சனை செய்து முடித்தார்.

7.1.1 *மணிகன்னிகை தீர்த்தம்* - *இறைவனால் மந்திர தீட்சை கிடைக்கப்பெற்ற ஆதித்தனாகிய சூரியன், தான் கேட்ட உபதேசப் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து, சிவலிங்கத்துக்குத் தென்கிழக்கே (அக்கினித் திக்கிலே), தனது கையினாலே சதுரமாகக் குளம் தோண்டினான். அதில், உற்பலமும் [12] தாமரையும் உண்டாக்கி, ஐந்தெழுத்தைத் தியானித்து முறைப்படி வழிபட்டான். அந்தத் தீர்த்தத்துக்கு "மணிகன்னிகை" என்னும் பெயரையிட்டான். தேவதச்சனை அழைத்து ஆலயம் அமைத்து, ஆவரண தேவதைகளையும் பிரதிட்டை செய்து, திருவிழா நடத்தித் தன்னுடைய உலகத்தை அடைந்தான். அகத்தியமுனிவரும் அம்மணிகன்னிகைத் தீர்த்தத்தில் மூழ்கித் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரித்துத்*

[12] *உற்பலம் = நீலோற்பலம், நீல நிற அல்லி*

திருப்பூவணநாதரை வணங்கி சமுத்திரத்தைக் குடிக்கும் வல்லமையைப் பெற்றார்.

குறிப்பு - இத்தீர்த்தத்தின் சிறப்புகள் பின்வரும் சருக்கங்களிலும் மிகவும் வெகுவாகப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளன. தற்போது இத்தீர்த்தம் எவ்வாறு உள்ளது என்பது பற்றிய குறிப்பு நான்காவது சருக்கமாகிய துன்மனன் சருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.2 திரணாசனன் முக்திபெற்ற சருக்கம்

சைவபுராணம் முதல் பிரமவைவர்த்த புராணம் முடிய உள்ள பதினெட்டுப் புராணங்களிலும் சிறப்புடன் குறிப்பிடப்படுவது திருப்பூவணத் தலமாகும். பிரளயகாலத்தில் தோன்றிய அமிர்தக்கலசம் மகாவிஷ்ணுவால் மூன்று கூறாக உடைக்கப்பட்டது. முதலாவதைத் திருப்பூவணத்திலும், இரண்டாவது பகுதியைக் கும்பகோணத்திலும், அதன்பின் மூன்றாவது பகுதியை எல்லாத் திருத்தலங்களிலும் வைத்தார். அமிர்தத்தின் முதலாவது பகுதி திருப்பூவணத்திலுள்ள மணிகன்னிகைத் தீர்த்தத்திலே மலராய் வந்து வீழ்ந்தது. அத்தீர்த்தத்திற்கு மாயாதீர்த்தம் என்றும் மணிகன்னிகைத் தீர்த்தம் என்றும் இரண்டு பெயருண்டு. இத்தீர்த்தத்திலே நீராடுவோர்க்குப் பாவங்களெல்லாம் ஒழியும்.

திருப்பூவணத்தில் சிவலிங்கத்தை முதலிலே தரிசித்த பின்னரே தேவியைத் தரிசிக்க வேண்டும். இத்தலத்தில் அம்மையை முதலில் வணங்குபவர்கள் நரகலோகம் அடைவர். மதுரை உட்பட மற்றபிற தலங்களில் முதன்முதலாக அன்னையை வணங்கிய பின்னரே சிவலிங்கத்தை வணங்கி வழிபடுகின்றனர். ஆனால், திருப்பூவணத்தில் மட்டும் அம்மையை முதன்முதலில் வணங்கக் கூடாது. ஏனென்றால், முதலாம் யுகத்திலே, கௌதமி ஆற்றங்கரையில் திரணாசனன் என்ற முனிவர், சிவபிரானின் திருவடிகளை மனம் வாக்கு காயங்களினால் வழிபட்டு வந்தார். அவர் தன் ஆசிரியரை வணங்கி, எளிதாக முக்தி கிடைத்திடும் உபாயத்தைக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு அவரது ஆசிரியரும் பல சிவத்தலங்களுக்கும் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி முறைப்படிச் சிவலிங்க மூர்த்திகளைப் பேரன்போடு வழிபட்டால், பாவங்கள் ஒழிந்து முக்திபெறலாம் என்று கூறி அருளினார். உடனே திரணாசனன் துறவறம் பூண்டு சிவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று, திருவாலவாயில் (மதுரையில்) வீற்றிருந்தருளும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரை வணங்கித் திருப்பூவணம் வந்து சேர்ந்தான். திருப்பூவணத்தில் உள்ள மணிகன்னிகைத்

தீர்த்தத்தில் மூழ்கியெழுந்து, தீர்த்தக்கரையில் உள்ள மின்னம்மையைத் (உமையம்மையைத்) தரிசித்தான். சற்று தொலைவில் உள்ள சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்காமல், தெற்குத்திசையில் உள்ள திருச்சுழிக்குச் சென்றான். அங்கு முறைப்படிச் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு, மீண்டும் திருப்பூவணம் வந்து மணிகன்னிகைத் தீர்த்தத்தில் மூழ்கினான். அதனால் இராச்சதனாய் மாறிப் பசியினால் வருந்தினான். அவன் முன்னம் செய்த நல்வினைப் பயனால், திருப்பூவணத்தில் நாரதமுனிவரைக் கண்டான். நாரதர் அவனை நோக்கி, "நீ யார்?" என்று கேட்டார். அப்பொழுது அவனுக்குச் சிறிது ஞாபகம் வந்தது. அவன், "இத்தீர்த்தத்தில் மூழ்கிய அளவிலே நான் மனங்கலங்கியவன் ஆனேன், இதற்குக் காரணம் என்ன என்று புலப்படவில்லை" என்று கூறினான். அதற்கு நாரதமுனிவர், பூவணநாதரை முதலிலே வழிபடாது தேவியை வழிபட்ட காரணத்தால், நீ இவ்வாறு ஆகிவிட்டாய். இனி, முதலிலே புட்பவனேசுவரரை வணங்கிப் பின்பு மின்னம்மையை வணங்கினால் நற்கதி பெறுவாய். மேலும் "புட்பவனேசுவரர் சந்நிதியிலே ஐநூறு விற்கிடை அளவுள்ள ஒரு பிரம்மதீர்த்தம் உள்ளது. அது முறை பிறழ்ந்த பாவம் முதலியவற்றைப் போக்கும். அதிலே கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்திலே நீராடுதல் சிறந்ததாகும். ஆதலால், அத்தீர்த்தத்தில் நீ நீராடி புட்பவனேசுவரரை வழிபடுவாய்" என்று கூறி வழிகாட்டினார்.

மேலும், காசி முதலிய திருத்தலங்களில் செய்த பாவங்களும் இத்தலத்தில் நீங்கிவிடும். இத்திருப்பூவணத்தில் செய்த பாவம் இத்திருப்பூவணத்திலே ஒழியும் என்றும் கூறித் திருமால் உலகம் சேர்ந்தார். நாரதமுனிவர் அருளிய வழியே திரணாசனன் திருப்பூவணநாதரையும் மின்னம்மையையும் வழிபட்டுத் திருக்கைலாசபதவி சேர்ந்தான். இவ்வாறு பிரம்மகைவர்த்த புராணத்திலே எழுபத்தோராம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ளது.

7.3 ***மணிகன்னிகைச் சருக்கம்***

திருப்பூவணத் திருத்தலமானது விராட்புருடனுக்கு முகமண்டலமாகும். இங்குள்ள தீர்த்தத்தில், விஷ்ணு முதலாவது வைத்த அமிர்தக்கூறு மணிமயமாய் வீழ்ந்தபடியால், அதற்கு மணிகன்னிகை என்று பெயர். அதிலே நீராடுவோர், பத்துப் பிரமகற்பகாலம் அமிர்தம் உண்டு

தேவலோகத்தில் வாழ்வார்கள். இத்தீர்த்தத்திலே எல்லாத் தேவர்களும் இருடிகளும் வசிக்கின்றார்கள். அதிலே மூழ்கிச் சூரியலிங்கத்தைத் தரிசனம் செய்வோர், காலனைக் காணாமல், காலகாலர் கயிலையைக் காண்பர். அத்தீர்த்தமாடுதலும், அச்சிவலிங்க தரிசனம் செய்தலும் அறஞ் செய்வோர்க்கே கைகூடும். இத்தலத்தினைத் தரிசனம் செய்வோரின் அனைத்துப் பாவங்களும் ஒழிந்துவிடும்.

"சுய அறிவுடனோ அறிவின்றியோ ஒரு கணப் பொழுதாவது திருப்பூவணத்தில் வசித்தால் சிவ உருவம் பெறுவர். ஒரு தளிரோ கனியோ திருப்பூவணநாதருக்குப் பக்தியோடு கொடுப்போர் முக்தி அடைவர். மற்றைய தலத்தினின்று வயோதிகத்தைச் சிந்தித்து இத்தலத்திற்கு வந்து சேர்ந்து இறந்தவர்களுக்குச் சிவபிரான் தாரகமந்திரமாகிய பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்தருளுவர்". ஆதலால் இத்தலத்தில் யாவரும் வயோதிக காலத்தில் வசித்தல் வேண்டும். காசியின் தட்பவெப்பத்தினால் பெரிதும் உடல் வருந்தும். திருப்பூவணத்தில் சமநிலையிலான தட்பவெப்பம் நிலவுவதால், உடல் வருத்தமுறாது. ஆதலால் காசிப்பதியினும் திருப்பூவணம் ஏற்றதாகும். பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம் முதலியவற்றைச் சூரியலிங்க மூர்த்திக்கு அபிடேகம் செய்தால் சிவனருள் பெறலாம். மணிகன்னிகா தீர்த்தக் கரையினில் பிதுர்சிரார்த்தம் முதலியன செய்தால் நெடுங்காலம் பிதுர்கள் பெரிதும் மகிழ்வார்கள்.

முன்னம் ஒரு காலத்தில், அந்தணனின் இறந்த உடலில் உள்ள ஓர் அங்கத்தைக் கழுகு ஒன்று தூக்கிவந்து திருப்பூவணத்தில் போட்டது. இதனால் அவன் நற்கதியடைந்தான். எனவே, பிதுர்கள் முத்தியடையும் வண்ணம் அவர்கள் இறந்த பின்னர், அவர்களது அங்கங்களை இங்கே போடவேண்டும்.

7.4 துன்மனன் சருக்கம்

மாதா, பிதா, குரு, அந்தணர் இவர்களை இகழ்ந்தவர்களும், மற்றும் இதுபோன்ற மன்னிக்கமுடியாத கொடிய பாவங்களைச் செய்தவர்களும் நரகத்தில் சேர்ந்து பெருந் துன்பங்கட்கு ஆட்படுவர். அகிம்சை, உண்மைகூறல் முதலிய தர்மங்களை உடையவர் சொர்க்கத்தில் சுகங்களைப் பெறுவர். ஆனால் துன்மனன் என்னும் கள்வன் இப்பிறவியில் செய்யாத பாவங்களேதுமில்லை, செய்த புண்ணியமும் ஏதுவும் இல்லை. அவனது பூர்வபுண்ணியத்தினாலே, ஒருசமயம் திருப்பூவணத்திலே பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறுவதைக் கேள்வியுற்றுத் திருடும் நோக்கத்தோடு இத்தலம்

வந்தடைந்தான். தேரில் எழுந்தருளியிருந்த இறைவனைத் தரிசித்து விட்டு, நடுநிசியில் மற்றபிற கள்வர்களுடன் திருட வரும் போது காவலர்களால் விரட்டியடிக்கப்பட்டான். இரவில் வழிதெரியாமல் ஓடிய திருடர்கள் மணிகன்னிகைத் தீர்த்தத்தில் வீழ்ந்து இறந்தனர். இருப்பினும் தீர்த்தத்தின் சிறப்பினால் அவர்கள் சிவலோகம் சேர்ந்தனர்.

பஞ்சமாபாதகங்களைச் செய்த தீயோர்களுக்கே சிவப்பேறு கிடைத்தது என்றால், நற்புத்தியுடனும் உண்மையான பக்தி நோக்கத்துடனும் இந்தத் தீர்த்தமாடுவோர் சிவலோகம் சேர்வதில் சிறிதும் ஐயமில்லை.

மணிகன்னிகா தீர்த்தம் இருந்த இடம் - இத்தீர்த்தம் தற்போதைய முருகன் கோயிலின் (முன்பு சௌந்தரநாயகி அம்மன் கோயில் கொண்டிருந்த இடம்) முகப்பிலும், பெருமாள் கோயில் வாயில் அருகிலும் இருந்துள்ளது.

தீர்த்தத்தின் இன்றைய நிலைபற்றிய குறிப்பு - மணிகன்னிகா தீர்த்தம் பற்றிப் பலவாறாகப் புகழ்ந்து புராணங்களில் கூறப்பட்டுள்ள காரணத்தால், அந்திமக்காலத்தில் நிர்க்கதியாய் நின்ற பலர் இத்தீர்த்தத்தில் வந்து மூழ்கி உயிரை விட்டனர். இவ்வாறாக இத்தீர்த்தத்தில் வீழ்ந்து இறப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே சென்றது. அரசியல் செல்வாக்கு மிகுந்தோர் தீர்த்தம் ஆட வரும்போது, அவர்கள் எதிரேயே பிணத்தைத் தூக்கிச் செல்லும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் தங்களது வீட்டிலிருந்த முதியோர்களும் 'இவ்வாறு தீர்த்தத்தில் மூழ்கி இறந்துவிட்டனரே' என்ற வருத்தங்களும் பொதுமக்களிடம் அதிகம் இருந்தன. இக்காரணங்களாலும், அருகில் வசித்தோர் தீர்த்தக்கரையில் வீடுகளைக் கட்டிய காரணத்தினாலும் மணிகன்னிகாதீர்த்தம் மறைக்கப்பட்டுவிட்டது. பின்னர் இவ்விடத்தில் தென்னந்தோப்பு இருந்துள்ளது. தற்போது மக்கள் குடியிருப்புகள் உள்ளன.

திருக்கோயிலின் உள்ளே அம்மன்சந்நிதி வாயில் கோபுரத்திற்கு எதிரே, ஆடிவீதியில் அக்கினித்திக்கில் ஒரு கிணறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இக்கிணறே தற்போதைய மணிகன்னிகா தீர்த்தமாகக் கருதப்படுகிறது. இந்தத் தீர்த்தக் கிணற்றின் அருகில், ஆலயத்தின் தண்ணீர்த் தேவைகளுக்காக ஆழ்குழாய்க் கிணறு (bore well) ஒன்று தோண்டப்பெற்றுத் தண்ணீர் வழங்கப்படுகிறது.

7.5 ***தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கம்*** - தென் திசையில் தாமிரபரணி நதிக்கரையிலே "வேணுவனம்" என்னும் ஊரின் மேற்குத் திசையிலே "கோலாகலம்" என்ற கிராமத்திலே, வேதசர்மா என்னும் பெயருள்ள ஒரு

பிராமணன் இருந்தான். அவன் நான்கு வேதங்களையும் ஆறு சாத்திரங்களையும் கலைகளையும் ஓதி உணர்ந்தவன். கடமைகளை வழுவாது செய்து ஐந்தெழுத்து மந்திரத்தை விதிப்படி மெய்யன்போடு ஓதுபவன். பிள்ளைகள் மற்றும் பேரன் பேத்திகளுடன் குபேரனுக்கு ஒப்பாக வாழ்பவன். அவனுக்கு மூப்புப் பருவம் வந்து இயற்கை மரணமடைந்தான். அவனுடைய புத்திரன் தருமஞ்ஞன் என்னும் பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் தந்தையைப் போல வேதம் முதலியவற்றை ஓதியுணர்ந்து ஒழுக்கத்திலே வழுவாதவனாக இருந்தான். தன்னுடைய தந்தைக்கு இறுதிக் கடமைகளை அன்புடன் முடித்துப் பிதாவின் அஸ்தியை ஒரு குடத்திலே அடைத்துத் துணியினாலே வாயைமூடி அரக்குமுத்திரை வைத்துக் கங்கைநதியிலே இடுவதற்காக, அவனுடைய மாணாக்கனோடு வடதிசை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில் உள்ள சிவத்தலங்களிலே பெரியோர்களுக்குத் தானங்கள் கொடுத்துத் தீர்த்தங்களிலே நீராடி, மதுரையை அடைந்தான். மதுரையில் உள்ள தீர்த்தங்களிலே மூழ்கித் தானங்கள் கொடுத்து மூன்று தினங்கள் தங்கி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரைத் தரிசித்து வழிபட்டான். பின்னர் மதுரையிலிருந்து திருப்பூவணம் வந்துசேர்ந்தான்.

திருப்பூவணநாதரைத் தரிசித்து, மணிகன்னிகைத் தீர்த்தக்கரையை அடைந்தான். வயிரவக் கடவுளை எள்ளு, அருகு, அட்சதை ஆகியவற்றாலே பூசை செய்தான். அஸ்திக் குடத்தை மணிகன்னிகைத் தீர்த்தக் கரையிலே வைத்துவிட்டுத் தீர்த்தத்திலே மூழ்கினான்.

மூழ்கும்போது பெருமழை பெய்த காரணத்தினால் விரைந்தெழுந்து கரை ஏறினான். அப்போது அவனது கால் இடறி, அஸ்திக் குடம் அத்தீர்த்தத்திலே விழுந்தது. உடனே தருமஞ்ஞன் தீர்த்தத்தில் இறங்கி குடத்தை எடுத்துப் பார்த்தான். அதனுள்ளே இருந்த எலும்பு முழுவதும் தாமரை மலரும், உற்பல மலருமாக இருந்தன. இதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து பர்ணசாலைகளிலே வசிக்கின்ற முனிவர்களிடம் போய் நிகழ்ந்தவற்றைக் கூறினான். அவர்களும், இத்தலம் "காசியைவிடச் சிறப்புடையது" என்றனர். உடனே தருமஞ்ஞன் "என்னுடைய பிதாமுதலியோர் நற்கதியடைந்தனர்" என்று கூறிச் சிவாலயஞ் சேர்ந்து, சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கித் துதித்தான்.(திருப்பூவணப் புராணம் பாடல் எண் 548)

<u>அருள்மிகு திருப்பூவணனைத் தருமஞ்ஞன் போற்றி வணங்கியது.</u>

ஈது முன்னர் இழைத்த மாதவம் ஈண்டு கண்டனன் ஆக, இப்

போது எனன் குல வாணரும் புகழ் பொற்பின் வந்து பொருந்தினார்,

ஆதலால் அடியேனும் உய்ந்தனன், அதிக சற்குரு விரதனான்
நாத வேதம் உனகா அடைந்தனன் என்று நின்று நடித்தனன்

இன்ன தன்மையன் இந்நிலத்தினின் என்னின் மேல் அவர் இன்றெனா
வன்ன அந்தணர் தம்மை நீங்கினன், ஆலயந்தனை அண்மியே
துன்னு நாகர் தலத்தது நின்றும் ஓர் சோதிலிங்காகியே
முன்னை நாளின் முளைத்து எழுந்து அருள் மூர்த்தியைத் தொழுது ஏத்தினான்

அருள் மேனி தரித்து அருள்வாய் சரணம்,
அறிவுக்கு அறிவாமானே சரணம்,
உரக ஆபரணா சரணம் சரணம்,
ஒரு மூவிலை வேல்கரனே சரணம்,
பொருளே அடியார் புகலே சரணம்,
பூதப்படையாய் சரணம் சரணம்,
திருமால் அயன் அறிவரியாய் சரணம்,
திகழ் பாற்கரபுரவ சிவனே சரணம்,

கழைவேளை எரித்து அருள்வாய் சரணம்,
கனகாசலவில் கரனே சரணம்,
பொழில்சேர நிறைந்து அருள்வாய் சரணம்,
பூர்வந்தரு புண்ணியனே சரணம்,
ஒழியா உலகம் ஒளிப்பாய் சரணம்,
ஒரு வெஞ் சமனை உதைத்தாய் சரணம்,
செழு நான்மறையின் முடிவே சரணம்,
திகழ் பாற்கரபுர சிவனே சரணம்,

ஒரு மானில ஓர் உருவாய் சரணம்,
மோதும் தொழில் ஐந்துடையாய் சரணம்,
புரம் மூன்று எரி செய்தருள்வாய் சரணம்,
பொரு மால்விடை மேல் வருவாய் சரணம்,
பெருகாதரவே பிரியாய் சரணம்,
பிறை வேணியனே சரணம் சரணம்,
திரையார் புனல் சேர் சடையாய் சரணம்,
திகழ் பாற்கரபுர சிவனே சரணம்,

அடைவார் வினை தீர்த்து அருள்வாய் சரணம்
அருளால் அறியும் பொருளே சரணம்,
கடல்சேர் விடம் உண்டவனே சரணம்
கமலன்றரு கங்கையனே சரணம்
சுடர் சேர் சுடலைப்பொடி பூசிடு
நற் சுக ரூபமதை உடையாய் சரணம்,
செடி சூழ் மிகு கற்பக நன் நிழலில்
திகழ் பாற்கரபுர சிவனே சரணம்,

மாயா உருவாரமலா சரணம்
ஆலானவர் பாலேலாய் சரணம்,
தாயா உலகம் தருவாய் சரணம்
தன் அடியார்கட்கு அருள்வாய் சரணம்,
பேயோடு ஆடும் பெருமான் சரணம்,
பிரிவரு திவ்விய உருவா சரணம்,
தீ ஏந்திய செங்கரனே சரணம்
திகழ் பாற்கரபுர சிவனே சரணம்,

பொரு மத கரி உரி போர்த்தாய் சரணம்,
பொதுவினின் நடமிடு புனிதா சரணம்,
வெருவரல்விட அருள் விகிர்தா சரணம்,
வேதபராயண நாதா சரணம்
அரி அயம் அடி பரவமலா சரணம்,
அடல் விடை தரு கொடி அரனே சரணம்,
திருமணி உமிழ் கட்செவி அணிமகுடம்
திகழ் பாற்கரபுர சிவனே சரணம்

பத்தர் விரும்பு வரத்தினை நித்தம் பரிவான்
மிகவும் தருவாய் சரணம்,
புத்தி கொளுத்தமர் புந்தி புகுந்தவர்
பூசனை கொண்டு அருள் ஈசா சரணம்,
தத்துவ ஞானம் அளிப்பாய் சரணம்,
சஞ்சித பாசம் அறுப்பாய் சரணம்,
சித்தியும் முத்தியும் மிக்க அருள் புரியும்
திகழ் பாற்கரபுர சிவனே சரணம்,

அட்டகுணம் சேரமலா சரணம்
மாதுலர் தம்மை அளிப்பாய் சரணம்,
எட்டு உருவாகிய இறைவா சரணம்
எங்கும் நிறைந்து அருள் எந்தாய் சரணம்,
கட்டமும் நோயும் கவர்வாய் சரணம்,
கதி அருள் பரபதமானாய் சரணம்,
சிட்டர் தினம் தொழும் தேவே சரணம்
திகழ் பாற்கரபுர சிவனே சரணம், *என்று சரணம் கூறி வழிபட்டான். அப்போது, சிவபெருமான் இடபாரூடராய்த் தோன்றிக் காட்சி கொடுத்துத் தருமஞ்ஞனுக்கும் நற்கதியை அருளி மறைந்தருளினார். தருமஞ்ஞனைப் புகழ்வோரும் அவன் கதையைப் படிப்போரும் பாவங்கள் நீங்கிச் சுவர்க்கலோகம் சேர்வர்.*

7.6 *உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கம்*

துங்க பத்திரை நதிக்கரையில் உள்ள ஒரு புண்ணிய கிராமத்திலே, கோபாலன் என்னும் பிராமணனுக்கு உற்பலாங்கி என்ற பேரழகுடைய மகள் ஒருத்தியிருந்தாள். அவளுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் என்று அப்பிராமணன் நினைத்துக் கொண்டிருந்தான். அப்போது, அவர்கள் வீட்டு வாயிலில் அழகு பொருந்திய ஏழைப் பிராமணன் ஒருவன் வந்து அன்னப்பிச்சை கேட்டு நின்றான். அவனைக் கண்ட கோபாலன், தன் மகளுக்கு ஏற்ற வரன் இவனே என்று முடிவு செய்து, அவனிடம் தன் கருத்தைச் சொல்லி கலந்துரையாடினான். அவனும் அதற்கு இசைந்து உற்பலாங்கியை மணமுடிக்க விருப்பினான். கோபாலன் தன் மனைவியிடம் கலந்து ஆராய்ந்த பின்னர் மணப்பந்தல் அமைத்து, சில சடங்குகளைச் செய்தான். பின்னர் தன் மகளைக் கன்னிகாதானம் செய்யும் முன் மணமகன் மரணமடைந்தான். இவ்வாறு இருபது நபர்கள் கன்னியாகிய உற்பலாங்கியைத் திருமணம் செய்துகொள்ளும் முன் மரணம் அடைந்தார்கள். இந்தக் கவலையில் இவளுடைய பெற்றோரும் சிறிது காலத்தில் காலமடைந்தனர். அதன் பின் உற்பலாங்கி தனக்கேற்ற நாயகனை அடையும் பொருட்டுப் பல சிவதீர்த்தங்களிலே மூழ்கி இறைவனை வழிபட்டு வந்தாள். இறுதியாகத் திருப்பூவணம் வந்து சேர்ந்தாள். திருப்பூவணத்தில் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடினாள். அத்தீர்த்தக் கரையில் காலவமுனிவர் என்பவரைக் கண்டு வணங்கித் தான் வந்த நோக்கத்தைக் கூறினாள். அதனைக் கேட்டறிந்த முனிவர் உற்பலாங்கிக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்படக்காரணம் முற்பிறவியிலே கௌரிதேவியின் விரதம் மேற்கொண்டு விரதத்தை

முறைப்படி முடிக்காமல் விட்டதால் இப்பிறவியிலே இத்துன்பங்கள் நேர்ந்ததெனச் சொன்னார். மணிகன்னிகை தீர்த்தத்தில் நீராடிவிட்டதால் இப்பாவங்கள் நீங்கி மங்களம் உண்டாகும். மேலும் நீ, "இத்தீர்த்தத்தில் மலர்ந்துள்ள தாமரை மலரையும், உற்பல மலரையும் கொண்டு உமாதேவியாரை விதிப்படி பூசனை செய்து வழிபட்டால், அம்மை நேரில் எழுந்தருளி மங்களம் தந்து அருளுவாள்" என்று முனிவர் சொல்லியருளினார். உற்பலாங்கியும் அவ்வாறே செய்து தேவியாரின் திருவருளினாலே நல்ல கணவன் வாய்க்கப் பெற்று, தீர்க்க சுமங்கலியாயிருந்தாள். "இத்தீர்த்தத்திலே இடபராசியில் சந்திரன் இருக்கும் செவ்வாய்க்கிழமைகளில் அமங்கலிகள் நீராடினால் மறுபிறப்பிலே தீர்க்க சுமங்கலிகளாக வாழ்வர்". சுமங்கலிகள் நீராடினால் பிள்ளைப்பேறு அடைவார்கள். இத்தகைய புண்ணிய தீர்த்தங்கள் பல உடையது திருப்பூவணத் திருத்தலமாகும்.

7.7 பாஸ்கரபுரச் சருக்கம்



பாஸ்கர விநாயகர்

காசிபமுனிவருக்கும் அதிதிக்கும் மகனாகப் பிறந்த சூரியன். துவட்டாவின் மகளாகிய பிரபையை மணந்து வாழ்ந்துவந்தான். அவள் சூரியனின் வெப்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாய்த் தனது நிழலைத் தன்னைப் போலப் பெண்ணாக மாற்றிச் சூரியனிடத்தில் நிறுத்திவிட்டுப் பெண்குதிரை வடிவமெடுத்து, வட நாட்டிற்குச் சென்று ஒரு வனத்தில்

சூரியனின் வெம்மையைப் பொறுக்கும்படிச் சூரியனை நினைத்துத் தவம் மேற்கொண்டாள். இதனை உணர்ந்த சூரியன் ஆண்குதிரை வடிவமெடுத்து அவள் இருக்குமிடத்தை அடைந்து அவளைக் கலந்தான். பிறகு சூரியனும் பிரபையும் ஆகாய வழியாகச் செல்லும் போது தேவர் முதலியோரைச் சந்தித்துச் சூரியமண்டலத்தினைக் கடைந்து செப்பனிட்டனர்.

அப்போது பொறி ஒன்று தோன்றி முதலில் திருப்பூவணத்தில் விழுந்தது. பின்பு மற்றைய தலங்களுக்கும் விரிந்து பரந்தது. இதனால் இவ்வூர் "பாஸ்கரபுரம்" என்னும் பெயர் பெற்றது என்பர். சூரியனும் பிரபையும் திருப்பூவணக் கோயிலையும், மற்ற கோயில்களையும் தரிசித்தது போன்றே நாமும் உபவாசம், விரதம், ஜபம் ஆகியவற்றை அன்புடன் செய்தால் முத்தி பேறு எய்துவது நிச்சயமாகும் எனக் கூறப்படுகிறது. இத்தகைய சிறப்புகளை உடையது திருப்பூவணத்திருத்தலமாகும்.

7.8 சர்வ பாவ விமோசனச் சருக்கம்

இச் சருக்கத்திலே ஒவ்வொரு திங்களிலும் இத் திருப்பூவணத் தீர்த்தமாகிய மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடி. ஈசனை வழிபடும் முறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. சித்திரை மாதத்தில், முதலில் பைரவக் கடவுளை வணங்கிப் பின் சிவபெருமானை வழிபட்டுச் சூரியோதயத்திற்கு முன் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடினால் கொலை முதலிய பாவங்கள் நீங்கும். குட்ட நோயுடையோர் மற்றும் கொடிய நோயுடையோர் இத்தீர்த்தத்திலே நீராடினால். அந் நோய்கள் ஒழியப் பெறுவர்.

வைகாசி மாதத்தில் புதன்கிழமைகளில், இத் தீர்த்தத்தில் மூழ்கி நீராடினால், பொருட்களவின் பாவம் போகும். இதே மாதத்தில் இங்கு பொருட்களைத் தானம் செய்வோருக்குப் புத்திரர்கள் எள், தயிர், பால், உளுந்து மற்றும் வெல்லம் இவற்றுடன் அறுசுவைக் கறியமுது செய்விப்பார்கள். சந்தனம், பொட்டு மற்றும் ஆபரணம் முதலியவற்றைத் தானம் செய்வோர்கள் சுகம் அனுபவிப்பர்.

மாசிமாதத்திலே மாமக காலத்தில் மூழ்குவோர் பாவங்களைப் போக்குவர். மார்கழி மாதத்தில் நீராடுவோர், சொர்க்கம் சேர்ந்து 14 இந்திரப் பட்டம் வரை வாழ்ந்து பூலோகத்தில் அரசராவர் என்று கூறப்படுகிறது . கார்த்திகை மாதத்தில் நீராடுவோர் சிவபுரம்சேர்வர். இவ்வாறாக மணிகன்னிகைத் தீர்த்தத்தின் சிறப்புகளாக ஒவ்வொரு மாதமும் நீராடினால் கிடைக்கும் பலன்பற்றி இச்சருக்கத்திலே கூறப்பெற்றுள்ளது.

7.9 பிரம்ம சாப விமோச்சனச் சருக்கம்

திருக்கயிலாய மலையில் உள்ள திருமண்டபத்தில் தேவர் முதலியோர் சூழ்ந்திருக்கச் சிவனும் உமாதேவியாரும் வீற்றிருந்தனர். நந்திதேவர் துதிசெய்து கொண்டு இருந்தார். அரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை முதலிய தேவரம்பையர்கள் திருநடனம் புரிந்தார்கள். அவர்களில் ஊர்வசி தனித்து ஆடியபோது சிவபிரான் மகிழ்ந்திருந்தார். அவ்வேளையில் ஊர்வசியின் இடையில் உடுத்தியிருந்த ஆடை சற்றே ஒதுங்கியது. இதனால் மற்றவர்கள் அனைவரும் அஞ்சித் தலைகவிழ்த்தனர். ஆனால் பிரம்மன் ஒருவன் மட்டும் அவ்விடத்தை உற்று நோக்கினான். அதனை உணர்ந்த சிவபிரான், சினங்கொண்டு நமது சந்நிதியிலே நிற்க உனக்கு அருகதையில்லை எனக் கூறினார். உடனே பிரம்மன் சிவனது பாதங்களில் விழுந்து தொழுதான். அவனது அன்பை உணர்ந்த சிவபிரான் இது போன்று நமது சந்நிதியில் தவறுகளை இழைப்போர் நரகவாசி ஆவான் என்று கூறித் தவறை உணர்ந்த பிரம்மனுக்குப் பிராயச்சித்தமாக திருப்பூவணத்திலே தேவியினால் பூசிக்கப்பட்ட மகாலிங்கத்தைப் பூசித்தால் கருணை புரிவதாக அருளிச்செய்தார். பிரம்மனும் அவ்வாறே திருப்பூவணம் வந்து இறைவனை வழிபட்டான். அங்கே தவஞ் செய்துகொண்டிருந்த விஷ்ணுவைக் கண்டு தான் பூமிக்கு வந்த வரலாற்றைக் கூறி உரையாடினான். பிரம்மன் தேவகம்மியனை வரவழைத்து புட்பவனேசுவரருக்கு ஆலயம் அமைக்கும்படிச் சொல்ல, அவனும் அந்த ஆணைப்படித் திருக்கோயில் அமைத்தான். பிரம்மன் அத்திருக்கோயிலினுள் புகுந்து சிவலிங்கத்தைப் பூசித்து சிவயோகத்தில் இருந்தான்.

ஈசா சரணம், எந்தாய் சரணம்,
நேசா சரணம், நிமலா சரணம்,
ஆசானவை தீர்த்து அடியார்க்கு அருளும்
தேசா சரணம், சிவனே சரணம்,

மூவா முடியா முதலே சரணம்,
மேவாதவர்பால் மேவாய் சரணம்,
காவாய் எனவே கடல் நஞ்சு அயிலும்
தேவாதியர்தம் தேவே சரணம்,

அகிலம் தரு காரணனே சரணம்,
புகலும் புவனாதிபனே சரணம்,
மகிழ் மன்மதவேள் மாண்டே எரியத்

திகழ் வெங்கணனே சிவனே சரணம்,

உலகு எங்கணும் ஓர் உருவா சரணம்,
மலர் செங்கதிரோன் அதி தாகமுடன்
வலம் வந்து உழலும் மக மேரு எனும்
சிலை தங்கிய கைச் சிவனே சரணம்,

உலகு ஆதர நல் ஒருவா சரணம்,
மலமாயை களைந்து அருள்வாய் சரணம்,
அலை ஆழியின் மேவ அமுதா சரணம்,
திலக ஆபரணா சிவனே சரணம்,

இவ்வாறாக அன்னவாகனாகிய பிரம்மதேவன் தனது இரு கைகளையும் தலைக்குமேலே கூப்பிச் சரணம் சொல்லி வேண்டிக் கொண்டான். பிரம்மனுடைய வேண்டுதலை உணர்ந்த திருப்பூவணநாதர் பிரம்மனுக்குக் காட்சியருளி அவன் செய்த பாவத்தைப் போக்கி இப்பூவணத்தில் வசிப்பவருக்கும் பாவம் தீரும்படி அருளினார். திருப்பூவணத்தில் இறைவன் சுயம்புலிங்கமாய்த் தோன்றியருள அங்கு பிரம்மனால் கோயில் கட்டப்பட்ட வரலாற்றைக் கதையாகக் குறிப்பிடுகிறது இச்சருக்கம்.

7.10 *இலக்குமி சாப விமோசனச் சருக்கம்*

இச்சருக்கத்தில் வைகுண்டத்தில் இலக்குமி செய்த பாவத்தைப் போக்க இத்தலம் வந்த வரலாறு கூறப்படுகிறது.

வைகுண்டத்தில் ஆடிப்பாடிய அரம்பை, வித்தியாதரன் முதலியோருக்கு வேண்டிய வரங்களை அருளிச் செய்து, சயனமண்டபத்தில் இலக்குமிதேவி திருவடிப் பணிசெய்ய, விஷ்ணு நித்திரை புரிந்திருந்தார். அவ்வேளையில் வாலகில்லி என்ற முனிவர் வந்துள்ள செய்தியைச் சேடியர் மூலம் கேள்விப்பட்ட இலக்குமி தேவி, அம்முனிவர் குள்ளமானவராய் (குரூபிகளாய்) இருத்தல்பற்றி எள்ளி நகையாடினாள். அதனால் கோபமுற்ற முனிவர் விஷ்ணுவையும் மதியாது வைகுண்டத்தை விட்டு வந்தவழியே திரும்பிச் சென்று விட்டார்.

அப்பொழுது நித்திரை நீங்கிய விஷ்ணு பெருமான் இதுவரை நான் 'அந்தணர்களுக்கு அன்பன்' என்பதை நீ இப்போது மாற்றி விட்டாய். உயர்ந்த குலமகளாய்க் கணவன் கருத்தின் வழி ஒழுகுபவளாயினும், அந்தணர்களை அவமரியாதை செய்தால் அவள் குலத்திற்குக் கேடு விளைவிப்பவளாவாள் என்று சபித்தார். அச்சாபத்தையடைந்து இலக்குமி தேவி திருப்பூவணம் சேர்ந்து தவம் செய்தாள். விஷ்ணு மூர்த்தி பயந்து விரைந்து சென்று

முனிவரிடம் தன் மனைவி நகைத்ததைப் (கேலியாகச் சிரித்ததைப்) பொறுத்துக் கருணை புரிய வேண்டும் என்று வேண்டினார். அதற்கு அம்முனிவர் இலக்குமியானவள் பன்னிரண்டு வருடங்கள் மணிகன்னிகையில் மூழ்கித் தவம் செய்ய, விஷ்ணுவாகிய நீ போய் புட்பவனேசுவரரைப் பூசித்தால் அவமதித்த அபராதமும் சாபமும் நீங்கி வைகுண்டத்தில் வாழ்வாய் எனப் பாவ விமோசனம் கூறினார்.

பிறகு விஷ்ணு பெருமான் முனிவரிடம் அவர் தன்னைநாடி வந்த காரணத்தை வினவினார். அதற்கு வாலகில்லி முனிவரும், நாங்கள் செய்யும் வேள்வியை நீ காத்தல் வேண்டும் எனக்கூறினார். இதனால் அங்ஙனமே முனிவர்கள் வேள்வியைக் காத்தருளினர். பின்பு திருப்பூவணம் சேர்ந்து சிவலிங்கப் பெருமானைப் பூசித்ததினால் இலக்குமிக்கு உண்டான அபராதமும் சாபமும் நீங்கப் பெற்று அவளோடு வைகுண்டம் சேர்ந்து வாழ்ந்தார்.

சித்திரை மாதத்திலே ஆதிவாரத்திலே (ஞாயிற்றுக்கிழமைகளில்) விஷ்ணு தம் பெயரால் உண்டாக்கிய சிவலிங்கத்தை மணிகன்னிகைத் தீர்த்தத்திலே மூழ்கி வழிபட்டால் பாவம் நீங்கி விஷ்ணுபாதத்தில் முத்தி பெறுவர்.

7.11 உமாதேவி திருஅவதாரச் சருக்கம்

ஒருசமயம், தட்சன் பிரம்மாவிடம் முழுமுதற் கடவுள் யார்? என வினவினான். அதற்குப் பிரம்மாவும் "சிவன்தான்" என்று கூறினார். இப்பதிலைக் கேட்ட தட்சன், படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களும் முறையே மூவர்களுக்கும் உரியதாய் இருக்கச், சிவனை மட்டும் முதற்கடவுள் எனக் கூறுவது என்பது பொருந்தாது எனக் கூறினான். அதனைக் கேட்ட பிரம்மா என்னையும் விஷ்ணுவையும் உண்டாக்கிப் பின்பு இவ்வுலகத்தைப் படைக்கவும், காக்கவும் சிவபெருமான் அதிகாரம் கொடுத்தார். ஆதலால் அவரே முழுமுதற் கடவுள்- அவரை நோக்கி நீ தவஞ் செய்வாய் எனக் கூறியருளினார்.



அவ்வாறு தட்சனும் தவஞ் செய்ய, சிவபெருமான் எழுந்தருளினார். தட்சனும், சிவபெருமானிடம் அவரை நோக்கி *"உம்மை வணங்குவோர் அனைவரும் என்னை வணங்கவும், என்பணி செய்யவும், யான் உன்னை மாத்திரம் பணியவும், இந்திரபதம் பிரம்மபதம் விஷ்ணுபதம் அசுரபதம் முதலிய எல்லாம் என்னுடைய ஆணைவழி ஒழுகும்படி நான் தலைவனாய் இருக்கவும், எனக்குப் புதல்வர் புதல்வியரைக் கொடுத்து அவர்கள் இறக்காமல் இருக்கவும், உமாதேவி எனக்கு மகளாகப் பிறக்கவும், நீர் அத்தேவியைத் திருமணம் புரியவும் வரமருள வேண்டும்"* என வரங்கள் கேட்டான். சிவபெருமானும் அவ்வாறே வரங்கள் அருளினார். வரம் பெற்ற தட்சன் பிரமாவை அழைத்து "மகாபுரம்" என்னும் நகரை அமைத்தான். அந் நகரிலிருந்து அரசாட்சி செய்து வேதவல்லியை மணந்து கொண்டான். பின்பு புத்திரர்களைப் பெற்று விவாகம் செய்து கொடுத்து பாக்கியத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தான். அந்நேரத்தில் திருக்கைலாயத்தில் உமா தேவியார் சிவனை வணங்கி உயிர்களுக்கு முத்தியருளும் முறையை அருளிச் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் செய்தபோது, சிவபிரான் உமாதேவியாரைப் படைத்து முத்தி கொடுப்பதாகக் கூறினார். பின்பு காளிந்தி நதியிலே தாமரை மலரிலே வலம்புரிச்சங்கு வடிவாய் நீ தவம் புரிந்தால், தட்சன் உன்னைக் குழந்தையாகக் கொண்டு வளர்ப்பான் எனக்கூறி அருளினார். பிறகு நான் வந்து உன்னை மணம் செய்து கொண்டு இக்கயிலைக்கு வருவோம் என்றார்.

உமாதேவியாரும் அந்த ஆணைப்படித் தவஞ் செய்ய, வேதவல்லியோடு தட்சன் நீராடிய போது, கமலமலரிலே தங்கிய சங்கினைக் கண்ணுற்றுக் கைகளினால் அள்ளிய போது, உமாதேவியார் குழந்தை வடிவாகினார். அக்குழந்தையைத் தங்கள் மகளாக வளர்த்து வந்தனர். உமாதேவியின் ஆறாவது பருவமாகிய (26 முதல் 31 முடிய) தெரிவைப் பருவத்தில் கன்னிமாடத்தில் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தாள். சிவனும், பிராமணன் வடிவம் கொண்டு வர, அவரை வணங்கி உபசரித்தாள். பிரமச்சாரிப் பிராமணனாக வந்த சிவபெருமானும்,

தேவியிடம், உன்னை மணம் செய்யும் பொருட்டு வந்தோம் எனக் கூறினார். அதற்கு அஞ்சிய தேவியார் வஞ்சக வேடம் தாங்கி வந்தாய் போலும் எனச் சினந்து கூறினார். மேலும் நான் சிவனை மணம் புரியும்பொருட்டுத் தவம் செய்கிறேன் என்றும் கூறினார். அப்போது, "இறைவன் வந்து மணம் புரிதல் அருமை" எனத் தேவியை இகழ்ந்தார். இதனால் தேவியார் மேலும் வருந்தி, அருந்தவம் செய்வேன் எனக் கூறினார். சிவன் தன் உண்மை வடிவை வெளிப்படுத்தத் தேவியார், கண்ணீர் ஒழுக அவரைத் தரிசித்தார். இந்நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற சேடியர் ஓடிச் சென்று தட்சனிடம் சொல்லினர். தட்சனும் சிவனுக்கே தனது மகளை மணம் செய்து கொடுப்பேன் என உறுதிபூண்டான்.

7.12 திருக்கலியாணச் சருக்கம்

தட்சன் உமா தேவியாருக்குத் திருமணம் செய்விக்கும் பொருட்டு, அனைத்து வேலைகளையும் துவக்கி, புத்திரிகளையும் வரவழைத்தான். விஷ்ணு பிரம்மா ஆகியோரும் வந்தனர். சிவன் உமாதேவியார் தவஞ்செய்யும் இடத்திற்கு எழுந்தருளினார். அப்போது, தட்சன் சிவபெருமானைத் திருமண மண்டபத்திற்கு எழுந்தருள வேண்டுமென வேண்டினான். அவ்வாறே எழுந்தருளிய சிவபிரானுக்கு, வேதவல்லி பசும்பால் வார்த்து பாதபூசை



செய்தாள். தேவர்கள் சூழ உமாதேவியார் திருமணக்கோலம் கொண்டு சிவபிரான் அருகே அமர்ந்தார். பிரம்மா அக்கினி வளர்த்துத் திருமணச் சடங்குகளை முடிக்கும் போது, சிவபிரான் மறைந்தருளினார். பெரிதும் வருந்திய உமாதேவி அருந்தவம் செய்தார். தட்சன் தேவர்களை அனுப்பிவைத்துவிட்டுச் சிவனை நிந்தித்துக் கொண்டிருந்தான். இவ்வாறு இருக்கும் போது, சிவபிரான் உமாதேவியாருக்குக் காட்சியளித்து அவரை இடபவாகனத்திலே அமரச் செய்து கைலாயத்திற்கு அழைத்துச் சென்றார். இவ்வாறு தட்சனுக்குக் காட்சி அளிக்காமலேயே உமாதேவியாரைக் கவர்ந்து சென்றதால், தட்சன் தேவர்களை

அழைத்து, இன்று முதல் சிவபிரானை நீங்கள் வழிபடக்கூடாது என ஆணையிட்டான்.

7.13 தட்சன் வேள்வியழித்த சருக்கம்

பார்வதிதேவியின் தந்தையாகிய தட்சன் நடத்திய யாகத்திற்கு அவளது கணவன்-பரமேஸ்வரனுக்கு அழைப்பு இல்லை. இதனால் அழையா விருந்தாளியாக யாகத்திற்குச் செல்லக்கூடாது என்பது ஈசனின் விருப்பம். இருப்பினும் தனது தந்தை நடத்தும் யாகத்திற்குச் சென்று தந்தைக்கு முறைப்படி எடுத்துக் கூறி, ஈசனையும் அழைக்கச் செய்யவேண்டும் என்பது உமையம்மையின் விருப்பம். இதனால் தட்சனின் யாகத்திற்குச் செல்வதற்கு அனுமதி வேண்டிப் பார்வதி பரமேசுவரருடன் தர்க்கம் செய்தார்.

தட்சன் சிவபிரானை விலக்கி திருமால் முதலிய தேவர்கள் சூழ வேள்வி செய்யத் துவங்கினான். இதனை நாரதர் சிவனிடம் தெரிவித்தார். அப்போது உமாதேவியார், சிவனின் திருவுள்ளம் உணராமல் தட்சனின் யாகசாலையை அடைந்தார். தன் மகள் வேள்விக்கு வந்திருப்பதைக் கண்ட தட்சன் மிகுந்த கோபமுற்று, நீ கயிலைமலைக்குத் திரும்பிச் செல்லலாம் எனக் கூறினான். உமாதேவியார் கடுஞ்சினம் கொண்டு அவ்வேள்வி அழிய உன்னுடைய தலையும் ஒழிந்திடுக எனச் சபித்தார். பின்பு மூலாக்கினியை எழுப்பி அதிலே மூழ்கி தட்சன் வளர்த்த யாககுண்டத்திலே அவதரித்தாள். இந்நிகழ்ச்சிகளை திருநந்தி தேவர் வழியாக அறிந்த சிவபிரான், வீரபத்திரக் கடவுளைப் படைத்து தட்சனின் சிரத்தை அறுத்து, அவனது வேள்வியையும் அழித்துவிடு, யாமும் வருவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார்[13].

வீரபத்திரக் கடவுளும் ஈசனது ஆணைப்படியே தட்சனது தலையை அறுத்து யாக குண்டத்திலே போட்டார். அப்போது சிவன் எழுந்தருளினார். உடனே திருமால் வணங்கிப் பிரார்த்தனை செய்தமையால், வீரபத்திரக் கடவுள் முகமாகச் சிவபெருமான் தேவர்களைப் பிழைப்பித்தார். பின் பிரம்மா வணங்கிக் கேட்டுக் கொண்டபடி ஆட்டின் தலையைத் தக்கனுக்கு அமைத்து எழுப்பினார். சிவபிரான் பார்வதி தேவியாருடன் திருக்கயிலாய மலை சேர்ந்து யோகியாய் எழுந்தருளினார். ஈசனின் விருப்பத்திற்கு மாறாகச் சென்றதும், அவரை எதிர்த்துச் சண்டைச் செய்ததும் இறைவி அறிந்து செய்த பாவங்கள் அல்லவா? இப்பாவங்களை இறைவியே செய்துவிட்டாரே!

[13] திருப்பூவணத்தில் தேர்முட்டியில் அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோயில் உள்ளது.

இவ்வாறு அறிந்து செய்த பாவத்தைப் போக்கப் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென பார்வதி தேவி விரும்பியிருந்தார்.

7.14 உமைவரு சருக்கம்

சிவபெருமானும், நீ போய்த் திருப்பூவணத்தலத்தில் தவம் செய், அங்கே ஒரு மூல லிங்கம் தோன்றும், அதனை நீ பூசித்தால், தாம் வெளிப்படுவதாகக் கூறி, உமா தேவிக்கு அருள்புரிந்தார். உமா தேவியாரும் அவ்வாறே பாரிசாத மரத்தை வளர்த்து அதன் நிழலிலே தவஞ் செய்தார். அம்மரத்தின் அடியிலே சிவலிங்கம் முளைத்தது. அதனை அறிந்து பூசித்து வழிபட்டார். சிவனும் வார்த்தை கடந்த பாவத்தை மாற்றி அமர்ந்திருந்தார்.

இதுவே திருப்பூவணத்தில் சுயம்புலிங்கமாய்ச் சிவபிரான் தோன்றிய வரலாறு ஆகும். இவ்விடத்தில் தினையளவு தானம் செய்தாலும் அது புண்ணியத்தைச் சேர்க்கும்.

இங்கே வேதம் உணர்ந்த அந்தணன் ஒருவன் சிவார்ச்சனை செய்து உடலினை வெறுத்து, இலைக்கறி மாத்திரம் உண்டு சிவ யோகத்தில் அமர்ந்திருந்தான். பெருமழை பெய்யும் ஒரு நாள் இரவிலே ஒரு பிராமணன் அந்தச் சிவயோகியின் பர்ணசாலையை அடைந்தான். சிவயோகியும் வணங்கி அவரை வரவேற்றுத் தனக்கிருந்த இலைக்கறியில் (கீரை) ஒரு பங்கை அவருக்கும் கொடுத்து உண்பித்தான். பிராமணனும் கீரையை உண்டு மகிழ்ந்தார். அதனால். சிவபிரானும் திருவுள்ளம் மகிழ்ந்து அருளினார். கீரையைப் படைத்த அந்தணர் முன் சிவன் தோன்றி பிறவி அறுமாறு அருள் செய்தார். அவனுக்கு மரணம் நேரிட்டபோது வேதாந்த முடிபாகிய சித்தாந்தத்தை உபதேசித்தார். எனவே "இத்திருப்பூவணத் திருத்தலத்திற்கு ஒப்பான எந்த ஒரு தலமும் இல்லை" எனக் கூறப்படுகிறது .

7.15 சுச்சோதி தீர்த்தயாத்திரைச் சருக்கம்

கோதாவிரி நதிக் கரையிலே, போகவதி நகரத்திலே, தேவவன்மா என்னும் அரசன் ஒருவன் ஆட்சி செய்திருந்தான். அவனுக்குச் சுச்சோதி முதலான நான்கு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்து, மூத்த புத்திரனாகிய சுச்சோதி என்பவனுக்கு முடிசூட்டி முறைப்படி அரசாட்சியை அவனிடம் ஒப்புவித்துவிட்டு மனைவி தருமசீலையுடன் வனத்தை அடைந்து தவம் செய்தான். பின்னர் அவனும் அவனது மனைவியும் சிவபதமடைந்தனர். சுச்சோதி அரசன், தன் பெற்றோருக்குக் கர்ம காரியங்களை

முடித்தபின் நாரதமுனிவர் அவனைச் சந்தித்து, "உன் முன்னோர்கள் நீ செய்யும் தில (எள்) தருப்பணத்தை நேரிலே வந்து பெற்றுக் கொள்ளும் வரை தருப்பணஞ் செய்வாய்" என்று கூறினார். இதுகேட்ட சுச்சோதி அரசனும், தன் சேனைகள் சூழப் புறப்பட்டுப் பிரயாகை, அரித்துவாரம், அவந்தி, மாளவம், காகோலம், நீலகண்டம், திரிகூடவீசம் ஆகிய வடநாட்டுத் தலங்களிலும், காஞ்சீபுரம், தில்லைவனம் ஆகிய தென்நாட்டுத் தலங்களிலும் முறைப்படியாகத் தீர்த்தங்களாடிச் சிவபிரானைத் தரிசித்துப் பிதுர்களை நோக்கித் தில தருப்பணம் செய்தான். பின்னர் பாண்டிய நாட்டிலே திருவாலவாய் (மதுரை) சேர்ந்து, பொற்றாமரைக் குளத்திலே மூழ்கி அவனது முன்னோர்களுக்குத் திலதருப்பணம் செய்து மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபட்டு அங்கே தங்கினான். அவ்வாறு தங்கியிருக்கும் போது, ஒரு தினம் இத்தனை தலங்களில் திலதருப்பணம் செய்தும் என் முன்னோர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள வில்லையே! ஒருவேளை, "நாரதமுனிவர் கூறிய வார்த்தை விநோதமோ" என்று கருதி மனம் வருந்தியிருந்தான்.

அப்போது நாரதமுனிவர் அங்கு வந்து இத் திருவாலவாய்க்குக் கிழக்குத் திசையில் திருப்பூவணம் என்னும் தலம் உள்ளது. அத்தலம் சிவபிரானுக்கும், முனிவர்களுக்கும், பிதுர்களுக்கும் திருவுள்ளம் மகிழத்தக்க தலமாக உள்ளது. "நீ அங்கே சென்று உன் பிதுர்களுக்குத் தில தருப்பணம் செய்தால் அதனை அவர்களே நேரில் வந்து பெற்று முத்திடையவார்கள்" என்றார். அங்ஙனமே சுச்சோதி அரசன் திருப்பூவணம் சேர்ந்தான்.

7.16 சுச்சோதி பிதுர்களை முத்தியடைவித்த சருக்கம்

நாரத முனிவர் அருளியபடித் திருப்பூவணம் சேர்ந்த சுச்சோதிராசன், மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடிச் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு வரும் நாளிலே, ஒருநாள், காலவமுனிவரைக் கண்ணுற்று வணங்கி, அவரது ஆசிர்வாதம் பெற்று, வைகைநதி முதலிய தீர்த்தங்களிலே அமாவாசைதினத்திலே நீராடி, தன்னோடு வந்த மூவாயிரம் முனிவருக்கும் அறுசுவைக் கறியமுதுடன் திருவமுது செய்வித்து, திருப்பூவணேசருக்குப் பூசைகள் நடத்தி, மணிகன்னிகைத் தீர்த்தத்தை அடைந்து நீராடி, சங்கற்பம் பண்ணிப் பிதுர்களை ஆவாகித்து, "என்னுடைய பிதுர், பிதாமகர், பிரபி அனைவரும் எனக்கு எதிரே தோன்றி நான் கொடுக்கும் எள்ளையும், தண்ணீரையும் பிண்டத்தையும் ஏற்றருளவேண்டும், ஏற்று அருளாவிடின், எனதுயிரை விட்டுவிடுவேன்" என்று அனைவரும் கேட்கும்படியாகச்

சொல்லிப் பிண்டம் கொடுத்தான். அப்போது மற்றவர்களுக்குத் தோன்றாமல் அந்த அரசனுக்கு மட்டும் பிதுர்கள் அனைவரும் தேவவடிவங்கொண்டு எதிரிலே தோன்றிப் பிண்டத்தை உண்டு அரசனை ஆசிர்வதித்தனர். இதனால் அரசன் மகிழ்ந்தான். பின்னர் அவனது முன்னோர்கள் சிவபிரான் திருவடிநிழலிற் சேர்ந்தார்கள். சிவபிரான் திருவருளினாலே சுச்சோதிராசன் சீவன் முத்தி பெற்றான். மூவாயிரம் முனிவர்களும் பிதுர்கள் பொருட்டுத் தானஞ் செய்தமையால் அம்முனிவர்களுடைய பிதுர்களும் நற்கதி பெற்றனர். இக்காரணத்தாலே இத்தலமானது பிதுர்முத்திபுரம் என்று பெயர் பெற்றது. புட்பவனேசர் திருக்கோயிலுக்கு நிருதித்திக்கிலே (தென்மேற்குத்திசை) சுச்சோதிராசன் தன்னுடைய தந்தை தேவவன்மாவின் பெயராலே ஒரு சிவலிங்கத்தை நிறுவினான். பின்பு அவ்வரசன் மூவாயிரம் முனிவர்களோடு போகவதி நகரஞ் சேர்ந்தான்.

"திருப்பூவணத் தலத்திலே பிதுர்களுக்குத் திலதர்பணஞ் செய்வோர் அளவில்லாத பயன் பெறுவர்" என்ற கருத்தும் "பிதுர் முத்திபுரம்" என்ற பெயர் ஏற்பட்டதற்கான காரணமும் இச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

7.16.1 திதி - *தருப்பணம் செய்தல்* - திருப்பூவணத்தில் 1) ஸ்ரீ கோவிந்தராஜன் *ஐயங்கார், 2) ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் மற்றும் 3) ஸ்ரீ ரெங்கநாத ஐயங்கார் இவர்களது குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாகத் திதி மற்றும் தர்ப்பணங்களைச் செய்து வருகின்றனர். திருக்கோயில் அருகே உள்ள அக்ரகார வீதியில் இவர்களது வீடுகள் உள்ளன.*

7.17 ***தீர்த்தச் சருக்கம் -*** *கார்த்திகை மாதம் பிறக்கும் புண்ணிய காலத்திலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் சூரியோதயத்திற்கு முன்னே, மணிகுண்டத் தீர்த்தத்திலே, சூரிய மந்திரம் உச்சரித்து மூழ்குவோர், அவர்கள் விரும்பியவற்றை அடைந்து, முடிவிலே சிவலோகஞ்சேர்வர்.*

அம்மணிகுண்டத்திலே மூழ்கி அந்தணர்களுக்கு உடல் உழைப்பைத் தானம் செய்வோர் குன்ம(குட்டநோய்)முதலிய நோய்கள் நீங்கி, முடிவிலே சூரியஉலகம் அடைவர். அத்தீர்த்தத்திலே, மார்கழி மாதத்தில் செவ்வாய்க்கிழமைகளில் மனைவியுடன் மூழ்குவோர் புத்திரப்பேறு அடைவர்.

திருவைந்தெழுத்தை உச்சரித்து அசுவதி நட்சத்திரத்திலே மூழ்குவோர் இறுதியிலே சிவலோகம் அடைவர். முழுநிலவு (பௌர்ணமி) நாட்களில் பிரம்மதாண்டவ மூர்த்தியைப் (திருப்பூவண நடராசரை) பூசிப்போர் மகேசர்

உலகத்திலே ஒரு கர்பகாலம் வரையிலே தங்கிப் பின்பு சிவலோகம் சேர்வர்.

மக(ஆவணி) மாதத்திலே சூரியோதய காலத்திலே, சூரிய மந்திரம் உச்சரித்துச் சிவபிரான் திருமுன்னர் நாடகம் செய்வோர் இறுதியிலே நற்கதி பெறுவர். சூரியோதயத்திற்கு முன் வைகை நதியிலே மூழ்கி, சிவராத்திரியிலே உறக்கமின்றி நான்கு யாமமும் சிவபூசை செய்து, தானங்கள் செய்வோர் இறுதியிலே சிவலோகம் சேர்ந்து வாழ்வர்.

மணிகன்னிகைத் தீர்த்தத்தில் இடப(வைகாசி)மாதத்தில் விசாக நட்சத்திரத்திலும், தட்சணாயணத்தில் கிரகண காலத்திலும் நீராடுவோர், பல வகையான தானங்கள் செய்த பயனைப் பெறுவர். சிவசந்நிதியில் இரண்டம்பு செல்லும் தூரத்தில் வசிட்ட தீர்த்தத்தில் மூழ்குவோர் இறுதியிலே பிரம்மபதம் பெறுவர்.

சூரியோதயத்திலே இந்திரத் தீர்த்தத்திலே, பங்குனி மாசம் உத்தர நட்சத்திரத்தில் மூழ்குவோர் யாகபலத்தை அடைவர். பன்னிரண்டு தினங்கள் மூழ்குவோர் சாகயாகபலனைப் பெறுவர். ஒரு மாதம் மூழ்குவோர் அசுவமேத யாகப் பலனைப் பெறுவர்.

மணிகர்ணிகைத் தீர்த்தத்தைப் பருகுவோர் அக்கினி ஹோம பலனை அடைவர். இவ்வாறு திருப்பூவணத் திருத்தலத்தில் உள்ள தீர்த்தங்களையும், அவற்றில் எந்த நாட்களில் எவ்வாறு நீராட வேண்டும் என்பது பற்றியும், அவ்வாறு நீராடி இறைவனை வணங்குவதால் ஏற்படும் பலன்களை எல்லாம் குறிக்கும் வண்ணம் இச்சருக்கம் அமைந்துள்ளது.

7.18 **நளன் கலிமோசனச் சருக்கம்** - நளச்சக்கரவர்த்தி வேட்டையாடி முடித்து வேடர்களோடு மதியஉணவு உண்டு மரநிழலிலே தூங்கினான். அப்பொழுது, மரத்திலிருந்து கீழே வீழ்ந்த பாம்பு தீண்ட உடல் கருத்ததாகக் கனவு கண்டு விழித்தான். கனவிற்குப் பிராயச்சித்தம் செய்தும் நளராசனுக்கு ஊக்கம் உண்டாகவில்லை. பின்பு நளராசன் சூதாடி எல்லாவற்றையுந் தோற்றுத் துன்பமுற்று, மனைவி புத்திரர்களை விட்டு வனம் புகுந்தான். வனத்தில் நகுடன் என்பவன் பாம்பாகித் தீண்டினமையால் உடல் முழுவதும் ஒளி மழுங்கிக் கருமையுற்றான். பின்னர் நளராசன் இருதுபன்ன மன்னனிடம் தேர்ப்பாகனாகச் சேர்ந்திருந்தான். அவனுடன் தமயந்தி சுயவரத்திற்குச் சென்று அவளை மனைவியாக அடைந்தான். மீண்டும் சூதாடி வென்று, அரசாண்டு, மனைவி மைந்தருடன் நால்வகைச் சேனை சூழத் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டான். பிறகு கேதாரம் காசி முதலிய தலங்களை அடைந்து, தீர்த்தமாடிச் சிவலிங்க மூர்த்திகளைத் தரிசித்துக் கொண்டு, மதுரையை

அடுத்துத் திருப்பூவணம் சேர்ந்து சுவாமியையும் அம்மையையும் தரிசனம் செய்து வழிபட்டான். திருப்பூவணத்தின் மகிமையையும் அப்பதிக்குத் தான்வந்த பின்னர்த் தனக்கு உண்டாகிய மனநிம்மதியையும் உணர்ந்து ஈசனை வணங்கி இத்திருப்பூவணத்தலத்திலேயே தங்கினான். தானங்கள் கொடுத்து திருப்பூவணநாதருக்கு மகோற்சவம் நடத்தினான். நளமகாராசன் காலத்தில் திருப்பூவணநாதருக்குப் "பாதாளநாதன்" என்ற பெயரும், மின்னம்மைக்கு "வளர்நாதவதி" என்ற பெயரும் இருந்துள்ளது.

7.19 திருவிழாச் சருக்கம்

நளச்சக்கரவர்த்தி, திருப்பூவணேசருக்குத் திருவிழா நடத்தத் தொடங்கி, வளர்பிறையிலே புனர்பூச நட்சத்திரத்திலே இடபக் கொடியேற்றி இரத உற்சவம் நடத்தித் தீர்த்த விழாவும் செய்வித்தான். பின்பு சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து விடை பெற்றுக் கொண்டு தனது நகரத்தை அடைந்து வாழ்ந்திருந்தான்.

அறியாமல் செய்த பாவம் திருப்பூவணத் திருத்தலத்தை வணங்கிய உடனேயே ஒழிந்துவிடும். அறிந்து செய்த பாவங்கள் இத்தலத்தில் ஒருமாத காலம் தங்கி இறைவனை வழிபட்டால் நீங்கும். அந்தணரை நிந்தித்தபாவம் முதலியன, அப்பதியில் ஆறுமாத காலம் தங்கி வழிபட்டால் தீரும்.

சித்திரை மாதத்தில் முழுமதி (சித்திரா பௌர்ணமி) நாளில் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே மூழ்கித் திருப்பூவணேசருக்கு பூமாலை சாத்தினால், சிந்தித்தன எல்லாம் சித்திக்கும். வைகாசி மாதம் முழுமதிநாளில் விசாக நட்சத்திரத்தில் புட்பவனேசருக்குப் பட்டுப் பரிவட்டங் கொடுத்தவர், பாவங்கள் நீங்கிச் சந்ததியுடன் சக்கரவர்த்தியாய் வாழ்ந்து, சிவலோகஞ் சேர்வர். உத்தராயணம், தட்சிணாயணம், மாதப்பிறப்பு, கிரகணகாலம் முதலிய புண்ணிய காலங்களிலே மணிகன்னிகை முதலிய தீர்த்தங்களாடித் தானம் செய்வோர், பாவங்கள் ஒழிந்து எட்டுவிதமான போகங்களை அனுபவிப்பர்.

7.20 சிதம்பர உபதேசச் சருக்கம்

வசிட்டர் முதலாகிய முனிவர்கள், நான்கு வேதங்களையும் ஓதி உணர்ந்து தங்குதற்கு இடம் ஆகிய காரணத்தினால் திருப்பூவணம் சதுர்வேதபுரம் எனப் பெயர் பெறும் என்று *திருப்பூவணப் புராணம் பாடல் எண் 1353 சிறப்பித்துக் கூறுகிறது.*

அப்பதியிலே, வியாச முனிவரிடம் உபதேசம் பெற்ற மாந்தியந்தின முனிவரும், தியானகாட்ட முனிவரும் சிவபிரானை நோக்கித் தேவவருடம் நூறு வரையும் அருந்தவம் புரிந்தனர். அதற்குச் சிவபிரான் இடபாரூடராகத் தோன்றினார்.

அம்முனிவர்கள் தரிசித்துத் துதிக்க, அத்துதிக்கு மகிழ்ந்தருளிய சிவபிரான், முனிவர்கள் வேண்டிய வரத்தை வினவினார். முனிவர்கள், "இத்திருப்பூவணத்திலே ஐந்தெழுத்து மந்திரத்தை எங்களுக்கு உபதேசித்து ஆனந்த தாண்டவம் செய்து அருள வேண்டும்" என்று வேண்டினர். அதற்குச் சிவபிரான், "கான்மீர நாட்டில் உள்ள முனிவர்கள் பொருட்டுத் தில்லைவனத்திலே திருநடனஞ் செய்வோம் அதை நீங்களும் தரிசிக்கலாம்" என்று அருளினார்.

"இத்தலத்திலே பிரணவமாகிய திருவைந்தெழுத்தை உங்களுக்கு உபதேசித்து, உங்கள் இருதயக் கமலமாகிய அம்பலத்திலே திருநடனம் செய்வோம்" என்று கூறிப் பிரணவத்தை உபதேசித்து அருளினார். அதனை முனிவர்கள் சிந்தித்துத் தெளிந்து, சிவபிரான் திருநடனத்தையும் அவர்களது இருதயக் கமலத்திலே தரிசித்துப் பின்பு தில்லைவனம் (சிதம்பரம்) சேர்ந்து சிவபிரானுடைய ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்தனர்.

இவ்வாறாகத் திருக்கயிலாச நாதர் காட்சிதரும் திருத்தலங்களைத் தொகுத்துத் திருநாவுக்கரசர் கூறும் ,

"புலிவலம்புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கைநல்லூர்"

என்ற பாடலிலும் திருப்பூவணமும் இடம்பெற்றுள்ளது.

உமாதேவி, விஷ்ணு, பிரம்மன், சூரியன் முதலியோரும் மற்ற முனிவர்கள், இராக்கதர்கள் முதலியோரும் புத்தி முத்தியின் பொருட்டுச் சிவபிரானை அர்ச்சித்துப் பாவங்களைப் போக்கினமையால், இத் திருப்பூவணம் "மகா பாபவிமோசனபுரம்" என்று பெயர் பெற்றது.

சிவபிரானோடு காளிதேவி சபதங்கூறி ஆடிய பாவத்தைப் போக்கும் பொருட்டுத் திருப்பூவணத் திருக்கோயிலுக்கு, வடதிசையிலே தன் பெயராலே காளிசுரலிங்கம் என ஒன்று நிறுவிப் பூசித்தாள்.

பன்னிரண்டுவருடம் மழையில்லாத காலத்திலே, சலந்தரன் என்னும் தவளை திருப்பூவணத்திலே, அலரியடியில் தங்கியிருந்தது. அந்த அலரியில் பூத்த மலரானது சிவபிரான் திருவடியில் ஏற்றி வைக்கப்பட்டது.

சிவபெருமான் தனக்கு அலரிமலர் கிடைக்கக் காரணமான அந்தத் தவளைக்குச் சக்கரவர்த்தியாய் இருக்கும் வரம் அருளினார். வரம் பெற்ற சலந்திரன், பூமியை ஆண்டு தேவர்களை வருத்தினான். அதனால் அவனை அழிக்கச் சிவபிரான் விஷ்ணுவுக்கு இத்தலத்திலே சக்கரப்படையை அருளிச் செய்து, சலந்தரனைக் கொல்வித்தார். எனினும். முன்பு அலரிமலர் சூடுதற்குக் காரணமானதால் சலந்தரனுக்கு முத்தி அருளினார்.

	குரங்குச் சித்தர், பன்றிச் சித்தர், சிங்கச் சித்தர் திருப்பூவணத்திலே தவம் செய்யும் காட்சி – பெரிய நந்திக்கு இடதுபுறம் தூணில் உள்ள சிறப்பம்.
	சிங்கச் சித்தர் மற்றும் குரங்குச் சித்தர் திருப்பூவணத்தில் தவம் செய்யும் காட்சி – மின்னம்மை சந்நிதியின் கோமுகம் (தீர்த்தத்தொட்டி) அருகே உள்ள தூண் சிறப்பம்.

7.20.1 தாழம்பூ வழிபட்ட திருத்தலம்

ஈசனின் அடிமுடி தேடிய கதையில், ஈசனின் தலையிலிருந்து கீழே விழுந்த தாழம்பூ பிரம்மனுக்கு ஆதரவாக இறைவனிடம் பொய் சொல்வது

தவறு என்று அறிந்தும் பொய் சொன்னது. தான் அறிந்து செய்த பாவம் போக்கத் திருப்பூவணம் வந்து ஆற்றின் கரையில் ஒதுங்கியிருந்து ஈசனை வணங்கிப் பாவ விமோசனம் பெற்றது. இவ்வாறு அஃறிணை உயிர்களின் வேண்டுதலுக்கும் கூடச் செவிசாய்த்து அவற்றின் பாவங்களையும் போக்க வல்லவர் திருப்பூவணநாதர். உயிர்களின் மீதும் அன்புடையவர், வினை தீர்க்கும் பரிவு உடையவர் திருப்பூவணநாதர்.

இவ்வாறு திருப்பூவணப் புராணம், திருப்பூவணநாதரின் பல்வேறு சிறப்புகளையும் பாடியுள்ளது.

7.21 திருப்பூவணப் புராணம் (தமிழ்மொழியில்) தோன்றிய வரலாறு

திருப்பூவணப் புராணம் வடமொழியில் உள்ளது. அதனை அனைவரும் அறிந்துகொள்ளத் தமிழில் பாடுக. என்று கந்தசாமிப் புலவரிடம் பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் கந்தசாமிப் புலவர் திருப்பூவணப் புராணத்தை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துச் சகாத்த வருடம் 1543ல் (கி.பி. 1620-21) பாடியுள்ளார்.

7.21.1 புத்தகவடிவில் புராணம் - ஏட்டுச்சுவடியில் இருந்த புராணத்தைப் புத்தகமாக அச்சிட்டு வெளியிட வேண்டுமென, மதுரை திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் ஆதீனத்து அம்பலவாண சுவாமிகள் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். அதன்படி, தேவகோட்டை

உ.மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்,

உ.ராம. சுப்பிரமணியச் செட்டியார் அவர்கள்,

உ.வீர. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள்

இம்மூவர்கள் பொருளுதவி பெற்று, மதுராபுரியில் வாசித்த இ.இராமசுவாமிப்பிள்ளை என்று அழைக்கப்பட்ட ஞானசம்பந்தப்பிள்ளையால் அகப்பட்ட பிரதி கொண்டு, சென்னை இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில் மன்மதவருடம் (1896ம் ஆண்டு) மாசிமாதம் அச்சிடப்பெற்றுள்ளது.

இதன் விலை ரூபாய்.கவ (Rs.1.$^{1/4}$)

இப்புத்தகத்தின் முகவுரையில் "…. …. இப்பாடலடங்கிய ஏட்டுப்பிரதி ஒன்றே கிடைத்தமையால், அதுகொண்டு ஒருவாறு பார்வையிட்டு அச்சிடப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போன்றே, 1993ம் ஆண்டின் இறுதியில், இந்நூலாசிரியர்

(கி.காளைராசன்) தனது M.Phil. ஆய்வினை மேற்கொண்டார். ஆய்விற்குத் திருப்பூவணப் புராணப் புத்தகம் தேவைப்பட்டது. ஆனால் திருப்பூவணத்தில் யாரிடமும் இப்புத்தகம் கிடைக்கவில்லை. பல நூலகங்களில் தேடியும் கிடைக்கப் பெறவில்லை. இறுதியாகக் காரைக்குடியில் உள்ள இராமசாமி தமிழ்க்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள் திருப்பூவணப் புராணப் புத்தகத்தைக் கொடுத்து உதவினார்கள். புத்தகம் அச்சிடப்பெற்று நூறு ஆண்டுகளுக்கும் மேலான காரணத்தால், காகிதங்கள் மிகவும் பழையதாய் இருந்தன. தொட்டால் ஒடிந்துவிடும் நிலையிலிருந்த, அப்புத்தகத்தை நுணுகிப் படித்தே இந்நூலாசிரியர் திருப்பூவணப் புராணப் பாடல்களைக் கணினியில் அச்சேற்றியுள்ளார்.

7.21.2 தமிழில் புராணம் எழுதிய ஆசிரியர் வரலாறு

கந்தசாமிப்புலவரின் ஊர் திருப்பூவணமாகும். இவரைப் பற்றிய வரலாறு ஏதும் தெரியவில்லை. இவர் திருவாப்பனூர் புராணமும். திருப்பூவணநாதர் உலாவும் இயற்றியுள்ளார். இவர் காலத்திலேயே இந்நூல்களுக்கு நன் மதிப்பிருந்துள்ளதற்கு ஆப்பனூர் புராணப் பாயிரச் செய்யுளும். திருப்பூவணநாதர் உலாவின் சிறப்புப் பாயிரச் செய்யுளும் சான்று தருகின்றன.

இவர் திருப்பூவணப் புராணத்தில் பாயிரம் பாடும்போது, சகாத்த வருடம் 1543ல் தமிழில் மொழிபெயர்த்துப் புட்பவனபுராணத்தை இயற்றியதாகக் குறிப்பிடுகிறார். இதனை ஆங்கில வருடத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது சகாப்த வருடம்1543+78= கி.பி.1620-1621ம் ஆண்டைக் குறிப்பிடுகிறது. இப்புத்தகம் 2016ஆம் ஆண்டு எழுதப்பெற்றது. இதனால் இவர் இன்றைக்குச் சரியாக (2016-1620=396). சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் திருப்பூவணப் புராணத்தை இயற்றியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

இவர், நைமிசாரணியச் சருக்கம், சவுநகர் சூதரை வினவிய சருக்கம், திருக்கைலாயச் சருக்கம், ஆற்றுச் சருக்கம், திருநாட்டுச் சருக்கம், திருநகரச் சருக்கம் ஆகிய சருக்கங்களைப் பாடிப் பாயிரம் பாடிய பின்னர் இருபது சருக்கங்களில் திருப்பூவணப் புராணத்தைப் பாடியுள்ளார்.

திருப்பூவணப் புராணத்தில் மொத்தம் 1437 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களை விருத்தப்பாவில் எழுதியுள்ளதாக அவையடக்கம் ஐந்தாம் பாடலிலே கந்தசாமிப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

8. *திருவிளையாடல் புராணம்* *மதுரையில் வீற்றிருந்து அருளும் அருள்மிகு மீனாட்சி சுந்தேரேசுவரர் அடியவர்களுக்கு அருள்புரிந்த சிறப்புகளைத் திருவிளையாடற்புராணம் எடுத்துக் கூறுகிறது. திருவிளையாடற்புராணக் கதைகளைப் புலியூர்நம்பி என்பவரும், பரஞ்சோதி முனிவர் என்பவரும் பாடி யுள்ளனர்.*

64 *திருவிளையாடற் புராணங்களில்* 36*ஆவது "இரசவாதம் செய்த படலம்" ஆகும்.* 49*ஆவது "திருவாலவாயான படலம்" ஆகும். இவ்விரண்டு படல நிகழ்வுகளும் திருப்பூவணத்தில் நடைபெற்றுள்ளன.*

8.1 *இரசவாதம் செய்த படலம்*

36***ஆவது திருவிளையாடல்*** **-** *பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் முப்பத்தாறாவது படலமாக இரசவாதம் செய்த படலம் உள்ளது. இதில் மதுரை அருள்மிகு சுந்தரேசுவரர் சித்தர்வடிவில் திருப்பூவணம் வந்து இரசவாதம் செய்தருளிய செய்தி கூறப்பட்டுள்ளது.*

8.2 *அன்னமிட்ட கை* *முன்னொரு காலத்தில், திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற சிவபக்தை இருந்தாள். இவள் சிறந்த நடனமாது. நாட்டிய இலக்கணப்படித் தினமும் இறைவன் முன் நடனமாடுவது இவளது நியமம். தனக்குக் கிடைக்கும் வருமானத்தை எல்லாம் அன்னதானத்திற்கே செலவு செய்தாள். தினமும் சிவனடியார் பலரும் வந்து உணவருந்திச் செல்வதைக் கண்டு மகிழ்ந்தாள்.*

"திருத்தர் பூவணவாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்தம் ஆடி, வந்து அடியவரைப் பொருள் என நினையுங்
கருத்தளாய், அருச்சித்து, அவர் களிப்ப இன்சுவை ஊண்
அருத்தி, எஞ்சியது அருந்துவாள், அஃது அவள் நியமம்"

அப்படியிருக்கையில் அவளுக்குத் திருப்பூவணம் கோயிலில் வைத்துப் பூசிப்பதற்கு உற்சவரைத் தங்கத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்ற பேராவல் பூவணநாதரின் அருளாசியினால் உண்டானது. ஆனால் கிடைக்கும் பொருள் எல்லாம் அன்னதானத்திற்கே செலவானது. தங்கத்திற்கு எங்கே போவது? குலபூடண பாண்டியனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத பொற்கிழியை வழங்கிய மதுரை சோமசுந்தரக் கடவுளை மனதில் நினைந்து வேண்டினாள்.

8.3 சித்தர் வடிவில் சிவபெருமான் இந்தப் பக்தையின் விருப்பத்தை அறிந்த மதுரை சோமசுந்தரப் பெருமான், அதனைப் பூர்த்தி செய்யத் திருவுள்ளம்கொண்டு சித்தர் வடிவில் திருப்பூவணத்தில், பொன்னனையாள் வீட்டிற்கு எழுந்தருளினார். அன்னதானம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தாதியர்கள் உணவு உண்ண வாருங்கள் எனச் சித்தரையும் அழைத்தனர். அதற்குச் சித்தர் பெருமான், உங்கள் தலைவியை இங்கே அழையுங்கள் எனக் கூறினார். பொன்னனையாள் வந்தாள். சித்தரது பாதங்களில் தனது தலைமுடி பதியுமாறு பணிந்து வணங்கி உணவு உண்ண அழைத்தாள். அதற்குச் சித்தர், உனது முகம் வாட்டத்துடன் காணப்படுகின்றதே! உனது மனக் கவலைதான் என்ன? என்று கேட்டார். பொன்னனையாளும், "எங்கள் தலைவனாம் திருப்பூவணன் திருவுருவினைத் தங்கத்தில் செய்வதற்கு உள்ளத்தில் பெருவிருப்பம் கொண்டு மெழுகினால் கருக்கட்டி வைத்துள்ளேன். ஆனால், நாள்தோறும் என் கையில் வரும் பொருள் முழுவதும் அடியார்களுக்கு அன்னம் இடுவதிலேயே செலவாகி விடுகின்றது. நான் என்ன செய்வேன்?" என்று தனது கவலையைக் கூறினாள்.

அதற்குச் சித்தரும், நீ தானத்துள் சிறந்த அன்னதானத்தை நாள்தோறும் செய்து வருகின்றாய். உன் பெயருக்கு ஏற்றவாறு அழிவில்லாத இறைவனின் திருவுருவத்தைத் தங்கத்தினால் செய்யப் பெறுவாயாக என வாழ்த்தினார். பின்னர், அனைத்து உலோகப் பாத்திரங்களையும் கொண்டு வரச்செய்து, திருநீற்றினைத் தூவினார். இவற்றைத் தீயிலிட்டுக் காய்ச்சுங்கள் தங்கம் கிடைக்குமெனக் கூறி அருளினார். பொன்னனையாள் அச்சித்தர் சுவாமியை வணங்கி இன்றைய இரவு தாங்கள் இங்கேயே தங்கித் திருவமுது செய்து இரசவாதம் செய்து முடித்தபின்னர் அதிகாலை எழுந்து செல்லலாம் என வேண்டினாள். மீனாட்சி அம்மையைப் பிரியாத சோமசுந்தரரே சித்தர் வடிவில் வந்துள்ளதால் அவர் "யாம் மதுரையில் விளங்கும் சித்தராவோம்" எனக் கூறி மறைந்தார். சித்தர் கூறிய சொற்களும், மறைந்தருளிய தன்மையையும் கண்ட பொன்னனையாள், வந்தவர் மதுரை வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடியருளும் அம்பலவாணரே எனக் கண்டு பக்தியால் நெகிழ்ந்தாள். தனது கவலையை இறைவனே நேரில் வந்து நீக்கினார் எனக் களிப்புற்றாள். சித்தர் கூறியபடியே உலோகப் பாத்திரங்களைத் தீயிலிட்டுப் புடம் செய்தாள். ஆணவமலம் கெட்டு இறைவனின் திருவடியை அடைந்தவர் சிவமாக விளங்குதல் போல, உலோகங்களின் களிம்பு நீங்கிப்

பொன்னாக மாறின. அப்பொன்னைக் கொண்டு இறைவனுக்குத் திருவுருவம் வார்ப்பித்தாள்.

8.4 அழகிய பிரான்

இரசவாதத்தால் கிடைத்த தங்கத்தைக் கொண்டு, வடிவே இல்லாத இறைவனின் திருவுருவத்தை வடித்து எடுத்தாள். இறைவனின் அழகான திருவுருவத்தைக் கண்டு "அச்சோ, அழகிய பிரானோ இவன்" என்று இறைவனின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். அதனால் இறைவனின் திருமேனியில் தழும்பு உண்டானது. கன்னத்தில் தழும்புடன் கூடிய இத் திருவுருவத்தை இன்றும் கோயிலில் தரிசித்திடலாம். பொன்னனையாள் இறைவனின் கன்னத்தைக் கிள்ளுவது போன்ற சிற்பம் கோயில் சுவாமி சந்நிதி மகா மண்டபத்தில் உள்ள கல்தூணில் செதுக்கப்பட்டுள்ளது.



பொன்னனையாள் இறைவனின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிடுதல்,

திருப்பூவணம் கோயில் உற்சவர் திருமேனியைச் செய்திட வேண்டி மதுரை அருள்மிகு சுந்தரேசுவரரே சித்தர் வடிவில் திருப்பூவணத்திற்கு நேரில் வந்து, இரசவாதம் செய்து தங்கம் தயாரித்துக் கொடுத்தது இத்திருத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

இறைவனது திருவுள்ளத்தில், அடியவர்களில் அடிமையென்றும் ஆடிப்பிழைப்பவர் என்றும் பேதங்கள் ஏதும் இருப்பதில்லை. இறைவன் மனம் விரும்புவதெல்லாம் அன்பும், தொண்டும், பக்தியும் தான். மேலும் சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்வதால் நமது பாவங்கள் அனைத்தும் ஒழிந்து, நமக்கு இறைவன் நேரில் காட்சி தந்து அருளுவான்.



அழகியநாயகர், அழகியபிரான், (கன்னத்தில் நகக்குறியுடன் உள்ள உற்சவர் திருமேனி)

பொன்னனையாள் தங்கத்தினால் ஆன இறைவனது திருவடிவத்தைப் பிரதிட்டை செய்து தேர்த்திருவிழா முதலியன நடத்தி இனிது வாழ்ந்தாள். சிலகாலம் சென்ற பின்னர் வீடுபேறு அடைந்தாள்.

மதுரையில் திருவிளையாடற் புராணக்கதை தொடர்பான விழாக்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. அவ்வாறாக நடைபெறும்போது இரசவாதம் செய்த படலம் நடைபெறும் பங்குனி உத்திரம் நாளில் சோமசுந்தரக் கடவுள் மதுரையிலிருந்து திருப்பூவணத்திற்கு எழுந்தருளி வந்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு திருப்பூவணம் வந்த சோமசுந்தரக் கடவுளைக் குறிப்பிட்ட நேரத்தில் மீண்டும் மதுரை ஆலயத்திற்குக் கொண்டு சேர்ப்பது முடியாததாகிவிட்டது. இக்காரணத்தினால் அதற்கு அடுத்த ஆண்டுகளில் இத்திருவிளையாடல் தொடர்பான விழாவினை மதுரை திருவாப்புடையார் கோயிலிலேயே வைத்து நடத்தி வருகின்றனர். இப்போது வாகன வசதிகளும், நவீன தொலைத்தொடர்பு வசதிகளும் கூடியுள்ளதால் முன்புபோல் இப்போது காலதாமதம் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இரசவாதம் செய்த படலம் தொடர்பான திருவிழாவினை மீண்டும் திருப்பூவணத்தில் நடத்திடத் தேவையான நடவடிக்கைகள் ஸ்ரீபொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.5 திருவாலவாயான படலம் (49ஆவது திருவிளையாடல்)

திருப்பூவணத்தில் கோட்டை என்ற பகுதியில் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு தொன்மைக்காலங்களில் உயரமான மதில்களாலான கோட்டை இருந்துள்ளது. இதனைப் "பொன்மதில் சூழாலயஞ் சேர் பூவணத்தின் வளம் யாவர் புகலற்பாலார்" என்று திருப்பூவணப்புராணம் குறிப்பிடுகிறது. இக்கோட்டை தோன்றிய வரலாறு திருவிளையாடற் புராணத்தில் 49ஆவது படலமான திருவாலவாயான படலத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. இப்படலத்தில் நான்மாடக் கூடலான மதுரையைத் திருவாலவாய் ஆக்கிய திருவிளையாடல் கூறப்பட்டுள்ளது. அதுலகீர்த்திப் பாண்டியனுக்கு மகனான கீர்த்திபூசணபாண்டியன் மதுரையை ஆட்சி செய்யும்போது ஏழுகடல்களும் தமக்குக் காவலாக விளங்கும் கரையைக் கடந்து பொங்கி எழுந்தன. இதனால் எல்லா உலகங்களும் நீரில் மூழ்கின. ஆயினும் மீனாட்சியம்மை திருக்கோயிலின் இந்திரவிமானமும், பொற்றாமரைக்குளமும், மற்றும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலில் தோன்றிய இடபமலை, பசுமலை, யானைமலை, நாகமலை, பன்றிமலை என்பன அழியாது விளங்கின.

ஈசன், பிரளயம் வற்றிய பின்னர் மீண்டும் உலகங்களும் உயிர்களும் உண்டாகுமாறு செய்தார். அப்போது சந்திரனது குலத்தில் பாண்டியர்களைத் தோற்றுவித்தார். அப்பாண்டிய வம்சத்தில் வங்கிய சேகர பாண்டியன் தோன்றினான். ஒருசமயம், வங்கிய சேகர பாண்டிய மன்னன், மதுரை மக்களெல்லாம் வசிக்கத்தக்கத் தகுதியுடையதாக நகரினை உண்டாக்க வேண்டுமென விருப்பம் கொண்டு, "மதுரை நகரின் பழைய எல்லைகளை வரையறுத்துத் தரவேண்டும்" என இறைவனிடம் வேண்டி நின்றான். மன்னனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வானில் இருந்து ஒரு விமானத்தில் இறங்கிய சோமசுந்தரக்கடவுள் ஒரு சித்தமூர்த்தியாகி அற அருட்கடலாகித் தோன்றினார். பாம்பினால் அரைஞாணும் கோவணமும் அணிந்திருந்தார். பிளவுடைய நாக்கையுடைய பாம்பினையும், குழையும் குண்டலமும், காலில் சதங்கை கோர்த்த கயிறும், கை வளையும் உடையவராகத் திகழ்ந்தார். அவ்வாறு வந்த சித்தமூர்த்தியானவர் தனது கையில் கட்டியிருந்த நஞ்சுடைய பாம்பை ஏவி, "நீ இம் மன்னனுக்கு மதுரையின் எல்லைகளைக் காட்டு" எனக் கட்டளையிட்டார்.

8.6 பாம்பு எல்லையைக் காட்டுதல்

கண்டவர்களுக்கு அச்சத்தினை உண்டாக்கும் படியான அப்பாம்பும் விரைந்து சென்றது. கிழக்குத் திசையில் திருப்பூவணம் சென்று வாலை நீட்டிப் பெரிய அந்த மாநகருக்கு வலமாக நிலத்தில் படிந்து உடலை வளைத்து, வாலைத் தன் வாயில் வைத்துப் பெரிய வளையம் ஆக்கியது. அதன் உட்புறப் பகுதியே மதுரை நகரின் பழைய எல்லையென பாண்டிய மன்னனுக்குக் காட்டியது. சித்தமூர்த்தியானவர் தம்முடைய திருக்கோயிலில் எழுந்தருளினார். வங்கியசேகர பாண்டிய மன்னன், பாம்பு வளைத்து எல்லையை வரையறுத்துக் காட்டியபடி மதில் சுவர் உண்டாக்க எண்ணினான்.

8.7 கோட்டை வாயில் அமைத்தல் - மதுரைக்குத் தென்கிழக்கில் சோலைகள் சூழ்ந்த திருப்பூவண நகரானது கிழக்கு எல்லையாக இருக்கும்படி, பாம்பு கிழக்கு எல்லைகாட்டிய இடத்தில், சக்கரவாள மலையை அடியோடு தோண்டி எடுத்து வைத்தது போன்று முகில் தவழும்படியான பெரிய மதிலை மன்னன் அமைத்தான். அந்த உயரமான, நீண்ட மதிலை "ஆலவாய் மதில்" என்று கூறுவர். நான்கு பெரிய வாயில்களும், தெற்கில் திருப்பரங்குன்றமும், வடக்கில் ஆனைமலையும், மேற்கில் திருவேடகமும், கிழக்கில் சோலைகள் சூழ்ந்த பூவண நகரமும் எல்லைகளாக இருக்கும்படி அம்மதில்களை

அமைத்தான். ஆலத்தைத் தனது வாயிற் கொண்ட அந்தப் பாம்பு சித்தர் வடிவில் தோன்றிய இறைவனின் பாதங்களை வணங்கி இனி இந்த நகரமானது தன்னுடைய பெயரால் "ஆலவாய்" என்று விளங்கவேண்டுமென விண்ணப்பஞ் செய்தது. சித்தராய்த் தோன்றிய இறைவனும் அவ்வாறே ஆகுக என்று வரம் அருளினார். இதனால் மதுரை மாநகரம் "திருவாலவாய்" என்ற பெயரில் விளங்குவதாயிற்று. பின்னர் அந்தப் பாம்பானது இறைவனுடைய திருக்கரத்தில் கங்கணம் ஆனது. இவ்வாறு திருப்பூவணத்தில் மதுரை மாநகரக் கிழக்கு வாயிலாகக் கோட்டை அமைக்கப்பட்டது. அன்று கோட்டை இருந்த இடமே இன்று பெயரளவில் கோட்டை என்று அழைக்கப்படுகின்ற பகுதியாகும். இதனால் திருப்பூவணம் என்பது மதுரை நகர் புணர்நிர்மானிக்கப்படுவதற்கு முன்பே பழமை மாறாமல் சிறப்புடன் விளங்கி வந்துள்ளமை தெளிவாகிறது.

8.8 திருவிளையாடற் பயகரமாலை இரசவாதம் செய்த திருவிளையாடற் புராண வரலாறு, திருவிளையாடற்பயகர மாலையில்,

"மணிதிகழ் மாடமலிமது ராபுரி வாழ்சித்தரேந்
துணிவுட னின்னன்பு கேட்டணைந் தோமென்று சொல்லிப் பின்ன
ரணிதிகழ் பூவணப் பொன்னனை யாளுக்கன் றாணிப் பொன்னைப்
பணிவிடைக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே"

என்று பாடப்பெற்றுள்ளது.

8.9 கடம்பவன புராணம் - பொன்னனையாளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல் கதையானது, கடம்பவன புராணத்திலும்,

"பூவணத்திற் பொன்னனையாள் பதியி லாண்முன்
புனிதனுருக் கும்பிடு வாள் மெழுகு சாத்தி,
மேவணநற் பொருள்பெறாள் சொக்குண டென்று
மிகவருந்துங் காற்சித்த ராச்சென் றாண்டு,
மாவணவல் லிரும்புதரச் சொல்லித் தீயின்
மாட்டென்று பரிசனஞ்செய் தொளிந்தான் றந்து,
பாவணத்தாள் சொலிச் செய்நிறை யுருக்கண்டான்
மெய்ப் பத்தியெழில் கண்டள்ளி முத்தங் கொண்டாள்"

என்று பாடப் பெற்றுள்ளது.

இவ்வாறாக, திருப்பூவணத் தலபுராணம், திருவிளையாடற் புராணம், திருவிளையாடற் பயகரமாலை, கடம்பவன புராணம் ஆகிய புராணங்களில் திருப்பூவணத் திருத்தலத்தில் இரசவாதம் செய்யப்பெற்ற நிகழ்ச்சி எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.

9. வழிபட்டோர்

தேவர்கள் - பார்வதிதேவி, சூரியன், பிரம்மன், இலெட்சுமி, திருமால், இந்திரன்.

சித்தர்கள் - மதுரை அருள்மிகு சோமசுந்தரர் திருப்பூவணத்திற்குச் சித்தராக எழுந்தருளியுள்ளார். சிவபெருமான் சித்தராக எழுந்தருளியதால், சிவபெருமானைச் சித்தர் வடிவில் தரிசிக்க வேண்டி உலகத்தில் உள்ள அனைத்துச் சித்தர்களும் திருப்பூவணத்திற்கு எழுந்தருளியுள்ளனர் என்பது ஐதீகம்.

அரசர்கள் – சுச்சோதி ராசன், நளமகா ராசன், திரணாசனன், குலசேகர பாண்டியன், மூவேந்தர்கள்.

முனிவர்கள் – மாத்தியாந்தினி, தியானகாட்டர், வாலகில்லி, அகத்தியர், பரஞ்சோதி,

சமயக் குரவர்கள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், குமரகுருபரர், கருவூர்த் தேவர், அருணகிரிநாதர்.

மனிதர்கள் - துன்மனன், தருமஞ்ஞன், உற்பலாங்கி, பொன்னனையாள்,

தாவரம் - தாழம்பூ

10. கோயில் நிருவாகம் - மதுரையின் கிழக்கு எல்லையான திருப்பூவணத்தில் கோட்டை அமைத்து, கிழக்கு வாயில் வைத்து பாண்டிய மன்னர்கள் ஆட்சிசெய்தனர். பின்னர் முகலாயர், நாயக்கர்கள் ஆட்சியிலும் மதுரையை ஆண்ட மன்னர்களின் நிர்வாகத்தில் திருக்கோயில் இருந்தது. கி.பி.1695ம் ஆண்டு மைசூர் மன்னன் மதுரைமீது போர் தொடுத்தபோது திருமலைநாயக்கருக்கு உதவியாக இராமநாதபுர மன்னரான இரகுநாத சேதுபதியும் போரிட்டார். வெற்றி கிடைத்தது. இவ்வெற்றியைப் பாராட்டும் முகமாகத் திருப்பூவணம், திருச்சுழி, பள்ளிமடம் ஆகிய பகுதிகள் மதுரை திருமலைநாயக்கரால் இராமநாதபுர மன்னருக்கு வழங்கப்பட்டன. பின்னர், கி.பி.1710ல் இராமநாதபுர மன்னர் கிழவன் சேதுபதி இறந்தபின்னர் விஜயரகுநாத சேதுபதி எட்டாவது மன்னரானார். அவர் தனது மகள் அகிலாண்டேசுவரி நாச்சியாரைச் சசிவர்ணத் தேவருக்கு மணமுடித்துவைத்து 1000பேர் கொண்ட படையையும், பிரான்மலை, திருப்பத்தூர், சோழபுரம்

மற்றும் திருப்பூவணம் கோட்டைகளைப் பாதுகாத்து நிர்வகிக்கும் உரிமையையும் வழங்கினார். கி.பி. 1730ல் இராமநாதபுர மன்னராகக் கட்டையத் தேவர் ஆட்சிக்கு வந்த போது, இராமநாதபுரச் சீமையிலிருந்து சிவகங்கைச்சீமை உருவாக்கப்பட்டது. திருப்பூவணம் சிவகங்கை மன்னர்களின் நேரடியாட்சியின் கீழ் வந்தது [14]. சிவகங்கை மன்னர்கள் திருப்பூவணம் கோவிலின் 'பரம்பரைத் தருமகர்த்தா' ஆவார்கள். சுதந்திர இந்தியாவில், மாட்சிமை பொருந்திய துரைசிங்கராசா அவர்களின் புதல்வர் சண்முகராசா அவர்களும், அவருக்குப்பின்னர், கார்த்திகேய வெங்கடாசலபதிராசா அவர்களும் நிருவகித்து வந்தனர். தற்போது சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் மாட்சிமை பொருந்திய ராணி சாகிபா கௌரிவல்லப து.ச.கா. மதுராந்தகி நாச்சியார் அவர்கள் இக்கோயிலைச் சிறப்புடன் நிருவகித்து வருகிறார்கள். தேவஸ்தான மேலாளராக திரு.பா.இளங்கோ அவர்கள் பணியாற்றிவருகின்றார். சிவகங்கை சமஸ்தானத்திற்கு உட்பட்டு, 108 திருக்கோயில்களும் அதன் உபகோயில்களும், 22 கட்டளைகளும், 20 சத்திரங்களும் உள்ளன[15].

10.1 கோயில் பரம்பரை ஸ்தானிகம்

சிவஸ்ரீ சுவாமிநாதபட்டர் - 1 ஆவது ஸ்தானிகம்.

சிவஸ்ரீ செண்பகபட்டர் - 2 ஆவது ஸ்தானிகம்.

சிவஸ்ரீ தெய்வசிகாமணி பட்டர் – 4 ஆவது ஸ்தானிகம்,

---

[14] www. sivaganga.tn.nic.in/history.htm

[15] www. sivaganga.tn.nic.in/history.htm Ist RAJAH SASIVARNA THEVAR (1730 - 1750), 2nd RAJAH - MUTHU VADUGANATHA PERIA OODAYA THEVAR (1750 - 1772), 3rd RANI VELU NACHIAR (1772 - 1780)

The Queen Velu Nachiar granted powers to Marudhu Brothers to administer the country in 1780.During the period from 1783 to 1801. After, so many successions of legal heirs ruled the estate, lastly, Sri D.S. Karthikeya Venkatachalapathy Rajah succeeded to the estate of late Sri. D. Shanmuga Rajah and he was the Hereditary Trustee of Sivaganga. Devasthanam and Chatrams consisting of 108 temples, 22 Kattalais and 20 Chatrams. Sri. D.S. Karthikeya Venkatachalapathy Rajah passed away in 30.8.1986 leaving a daughter named Tmt.. Maduranthagi Nachiyar as his heir. At present, Tmt. Maduranthagi Nachiyar is administering the Sivaganga Estate , Sivaganga Devasthanam and Chatram of Sivaganga Royal Family now.

இவர்கள் பரம்பரை பரம்பரையாகக் கோயிலில் சிறப்புடன் திருப்பணியாற்றி வருகின்றனர்[16] .

11. திருப்பணிகள் கோயிலைப் பாண்டிய மன்னர்கள் சிறப்பாக நிருவகித்து வந்துள்ளனர். பாண்டியர்களது ஆட்சியில் திருப்பூவணன் மின்னாள் கருவறை விமானங்களும், ராசகோபுரமும் கட்டப்பெற்றுள்ளன. பாண்டியர்களது ஆட்சிக்குப் பின்னர் திருமலைநாயக்கர் பெரியராய கோபுரம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டித் தூண்கள் எழுப்பிய நிலையில் திருப்பணிகள் நின்று போயின. நாயக்கர்களது ஆட்சிக்குப் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மாட்சிமை மிகுந்த சிவகங்கை மன்னர்களும், நகரத்தார்களும் மற்றபிற சமூகத்தினரும் தங்களது சொந்த முயற்சியில் பெரிதும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

11.1 நகரத்தார் திருப்பணி தேவகோட்டை உத்தமன் செட்டியாரின் புதல்வர்களான உ.ராம., உ.மு., உ.வீர., குடும்பத்தினர் திருப்பணிகள் செய்துள்ளனர். இவர்கள் திருக்கோயிலின் பிரகாரங்களை அமைத்துள்ளனர். தேவகோட்டை உ.மு. குடும்பத்தார் திருப்பூவணத்தில் திருப்பணிகள் மிகவும் அதிகமான அளவில் செய்துள்ளனர். செய்தும் வருகின்றனர்.

சௌந்தரநாயகி அம்மன் கோயில் முழுவதும் கட்டியுள்ளனர். நடராசர் சந்நிதி விமானம் திருப்பணிகள் செய்துள்ளனர். சுவாமி சந்நிதி முன்மண்டபம் கட்டியுள்ளனர். சுவாமி மற்றும் அம்பாளுக்கான பலவிதமான நகைகள் அங்கிகள் செய்து கொடுத்துள்ளனர். மரத்தினால் ஆன இரண்டு பெரிய தேர்களைச் செய்துகொடுத்துள்ளனர்.

விகாரி தை 23ஆம் நாள் (04.02.1900) அன்று கும்பாபிடேகம் செய்யப் பெற்றுள்ளது. 1932 மற்றும் 1961ஆம் ஆண்டுகளில் குடமுழுக்கு விழாவைச் சிறப்புடன் நடத்தியுள்ளனர்.

திருப்பூவணப் புராணத்தைப் புத்தகமாகப் பதிப்பிக்க உதவியுள்ளனர். 1896ஆம் ஆண்டு திருப்பூவணத் தலபுராணத்தைப் புத்தகமாக அச்சிட நிதியுதவி அளித்துள்ளனர். உ.ராம., உ.மு., அவர்களால் ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் (4,50,000) செலவில் திருப்பணி

[16] குறிப்பு – மூன்றாவது ஸ்தானிகத்திற்கு உரிய முறைமை நாட்களை இரண்டு ஸ்தானிகர்களும் தங்களுக்குள் பகிர்வு செய்து கொண்டு சிறப்புடன் திருப்பூவணநாதருக்குப் பரம்பரை பரம்பரையாகத் தொண்டு செய்து வருகின்றனர்.

செய்யப்பெற்றுள்ளது. ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் உ.ராம. உ.மு. அவர்களால் மடமும், ரூபாய் ஏழாயிரம் (7,000) செலவில் உ.ராம.உ.மு அவர்களால் திருநந்தவனமும், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் சிதிலமடைந்து இருந்த இரண்டு தேர்களின் பாகங்கள் உ.வீர.சோம. அவர்களால் புதுப்பிக்கப் பெற்றுள்ளன.

உ.மு. வகையறாவினர் நித்திய கட்டளையாகத் திருவனந்தல் பால் பழம் வழங்கி வருகின்றனர். உச்சிக்கால நிவேதியம் வழங்கி வருகின்றனர். கார்த்திகை சோமவாரத்தில் இரண்டுமுறை 108 சங்காபிஷேகம் நடத்தி வருகின்றனர். மேலும் நடராசப் பெருமானுக்கு உரிய ஆறு அபிடேகங்களில் ஐந்து அபிடேகங்களை வருடந்தோறும் செய்து வருகின்றனர். ஆறாவது அபிடேகம் ஊர்ப்பொதுமக்களால் சார்பாக நடத்தப்பெறுகிறது. உ.மு.பழ.இராம.பழ.சோம. குடும்பத்தினர் திருக்கல்யாண தினத்தன்று சீர் கொண்டு வருகின்றனர். விநாயகர் சதுர்த்தி, கார்த்திகை சோமவார முதல் சங்காபிஷேகம் வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.



11.1.1 பூ மடம்

தேவகோட்டையைச் சார்ந்த மாத்தூர் மணலூர் பிரிவு வள்ளிசெட்டி வகையைச் சார்ந்த திரு. வ.ராம.கு.மு.சொ. சின்ன ஏகப்ப செட்டியார் அவர்களின் பாட்டனார் வ.ராம.கு. முத்தையா செட்டியார் அவர்களும் திருப்பூவணம் திருக் கோயிலுக்கு ஏராளமான திருப்பணிகள் செய்திருக் கிறார். 1905 ஆம் ஆண்டு திருக்கோயிலுக்கு முன் உள்ள சன்னதி தெருவில் பூமடம் ஒன்றை நிறுவி அதன் வாயிலாகப் பூ மற்றும் பால் ஆகியவற்றை இத் திருக்கோயிலுக்குத் தானமாக அளித்து வந்திருக்கிறார்கள். இவர்களுடன் இவரது உறவினர் வ.அள.வ. ராமசாமி செட்டியார் அவர்களும் இத்திருப்பணிக்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

இவரது காலத்திற்குப் பிறகு முத்தையா செட்டியார் குமாரர் வ.ராம.கு.மு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் இத் திருப்பணியைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் மறைவிற்குப் பிறகு அவர்கள் குமரரான 'சொ.சின்ன ஏகப்ப செட்டியார்' அவர்கள் தொடர்ந்து இத் திருக்கோயிலுக்குப் பூ மற்றும் பால் ஆகியவற்றைத் தினசரி தானமாகக் கொடுத்து வருகிறார்கள். 1905 ஆண்டிலிருந்து இன்றுவரை 112 வருடங்களாகத் தொடர்ந்து இந்த இறைப்பணி செய்யப்பெற்று வருகிறது.

வேதாதந்த மடம் - ரூபாய் ஐந்தாயிரம் (5,000) செலவில் பூங்குடி கூ.கண.கண்ணப்ப செட்டியரால் வேதபாடசாலையும், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் நகரத்தார்களால் வேதாந்த மடமும் நிறுவினர்.

ஆடித்தபசு திருவிழா - நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த திரு. ச.ராம. சங்கர நாராயணன் செட்டியார் (இருப்பு-திருச்சிராப்பள்ளி) அவரது தம்பி இராம. சுப்பையா செட்டியார் (இருப்பு – மதுரை) மற்றும் SD.கண்ணப்பன் செட்டியார் (இருப்பு- மதுரை) ஆகியோரால் ஆடித்தபசு விழா நடத்தப்பட்டுள்ளது.

தேர்க் கொட்டகை - திருக்கோயில் கௌரவக் கண்காணிப்பாளராக இருந்த திரு. நெற்குப்பை ந.பழ.சோம.பழ. அழகப்பன் (இருப்பு - மதுரை) அவர்கள் ரூ.1,20,000-செலவில் பெரியதேருக்குப் பாதுகாப்புத் தகரம் அடைக்கும் திருப்பணியை 2007ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் உபயமாகச் செய்து கொடுத்துள்ளார்.

11.2 கும்பாபிடேகக் கவித்திரட்டு -

கண்டனூர் நா.பெ.நா.மு.முத்துராமையா அவர்கள் இயற்றியது. செல்லப்ப செட்டியாராவர்கள் விருப்பத்தின்படி மதுரை விவேகபானு அச்சியத்திரசாலையில் 1913ஆம் ஆண்டு அச்சிடப்பெற்றது.

கும்பாபிடேகக் கவித்திரட்டு -

அன்புறும் விகாரி சம்வற்சரம் (கி.பி.1900ஆம் வருடம்), தைமாதம், இருபத்துமூன்றாம் நாள், ஞாயிற்றுக் கிழமை, ரேவதி நட்சத்திரம், மீன லக்னமும் கூடிய சுப தினத்தில், தென்பாண்டி நாட்டில் உயர் தேவகோட்டையில் தீரனாம் அண்ணாமலைச் செல்வனாருடன் வணிகர் உத்தம சிரேஷ்டர்கள் திருப்பூவணம் தன்னிலே, பொன் நிமிர்ந்த அழகிய

மின்னனையார் உடன் பூவணநாதருக்கும் புனிதான பணி அமைத்து, அன்புடன் கும்பாபிடேகமும் புனிதமாக நன்கு செய்து, அன்று பஞ்சமூர்த்தங்களும் நயப்புடன் பவனிவருக நடத்து வைபவம், அதைச் சேடனாலும் கூட நவிலுதற்கு எளியதாமோ.

11.3 பிற திருப்பணிகள்


திருக்கண் தேவர் என்பவர் அழகிய நாயகருக்கு முன் மண்டபமும், சபாபதி மண்டபமும் கட்டியவர். பூவணலிங்கம் பிள்ளை என்பவர் கொடிக்கம்பத்தையும் அதன் அருகிலுள்ள மண்டபத்தையும் பொன்னொளி வீசுமாறு அமைத்தவர். மற்றும் அம்பிகை கோயிலின் முதற் பிராகாரத் திருமதிலும் மண்டபமும் கட்டுவித்தார். ஈசுவர மூர்த்தியா பிள்ளை என்பவர் மணிகர்ணிகை தீர்த்தக் குளத்தை மக்கள் சுற்றி வருவதற்கேற்ப நடைபாதை (ஆள்வாரி – ஆளோடி), படிக்கட்டு முதலியன அமைத்தவர்[17].

திருப்பூவணம் சங்கரலிங்கம் அவர்களது மகன் வழக்கறிஞர் சண்முகநாதன் அவர்கள் சிறிய தேருக்குப் பாதுகாப்புச் செய்யும் திருப்பணிக்கு ரூ.10,000-முன்பணமாக அன்பளிப்பு வழங்கியுள்ளார். திருப்பூவணம் இரங்கநாதன் அவர்கள் மகன் சங்கரன் அவர்கள் சிறிய தேரைப் பாதுகாக்கத் தகரம் உபயமாக வழங்கியுள்ளார்.

2002 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் தொழில் அதிபரும், கற்பகம் கல்வி நிறுவனங்களின் தாளாளருமான திருமிகு.இரா. வசந்தகுமார் B.E. அவர்கள், திருக்கோயிலின் மேல்தளத்தில் இருந்த தட்டோடுகளைப் பெரும் பொருட்செலவில் உபயமாகச் செப்பனிட்டுக் கொடுத்துள்ளார்.

11.4 திருப்பணி விசாரணை

[17] திருத்தலங்கள் வரலாறு – பகுதி 1, பதிப்பாசிரியர் – வித்துவான் சு. பாலசாரநாதன், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை – 600 090



"பூவணத்துசுவாமி திருப்பணி விசாரணை அளகு சொக்கு தம்பிரான்" என்று எழுதப்பெற்றுள்ளது. (இந்தச் சிற்பம் மின்னாள் சந்நிதி பெரிய நந்திக்கு வலதுபுறம் உள்ள தூணில் உள்ளது). 1900ஆம் ஆண்டு குடமுழுக்கு விழாவிற்கு முன், அம்மன் சந்நிதி புதிதாகக் கட்டப்பெற்ற போது திருப்பணிகள் தொடர்பாகச் சொக்கு தம்பிரான் அவர்கள் விசாரணை செய்துள்ளார் என அறிய முடிகிறது.

11.5 தனியார் திருப்பணி

2012ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் நாள் திருப்பூவணம் கோட்டை பஜார் தேருவில் தேர்முட்டி அருகே வசித்து வரும் ஆய்க்குடி ராமுபிள்ளையின் மகள் திருமதி லெட்சுமி அம்மா அவர்கள் திருப்பூவணம் அருள்மிகு மின்னம்மைக்குப் புதிதாக வெள்ளிக் கிரீடமும் கவசங்களும் சுமார் இரண்டு லட்சம் செலவில் புதிதாகச் செய்து உபயமாக வழங்கினார். இவற்றைப் பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் சார்பாக

ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் அவர்களிடம் ஒப்படைத்தார்.




11.6 காசிகாநந்த (வேதாந்த) மடம்

திருப்பூவணத்தில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அரசினர் மருத்துவமனைக்குக் கிழக்கே, பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு எதிரே காசிகாநந்த மடம் உள்ளது. இதனை "வேதாந்த மடம்" என்றும் கூறுவர். சாதுக்கள் வேதாந்தம் பயில வசதியாக இங்கு ஒரு மடம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீலஸ்ரீ காசிகாநந்த ஞானாச்சாரிய சுவாமிகளுக்கு ஏற்பட்டது. இவர் காரைக்குடி அருகில் உள்ள கோவிலூர் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் என்ற திருக்களர் ஆண்டவரின் மாணாக்கர் ஆவார். வீரசேகர சுவாமிகள் முத்தியடைந்த பின்பு இவர், காசி முதலான பல திருத்தலங்களிலும் தங்கி வியாகரணம் படித்துத் தேர்ந்தார். பின்னர், திருப்பூவணத்திற்கு வந்து 1930ஆம் ஆண்டு ரூ. 40,001- பொருட் செலவில் மடத்தை நிறுவி வேதங்களைக் கற்பித்து வந்தார். இவர் சுமார் 22-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவருடைய காலத்திற்குப் பின்னர் மடத்தில் வேத பாடங்கள் கற்பித்தல் நின்றுபோயுள்ளது. தற்போது, இந்த மடம் காரைக்குடி அருகில் உள்ள கோவிலூர் மடத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

கோவிலூர் மடத்தின் பதின்மூன்றாம் பட்டமேற்றுச் சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள் அருளாட்சி செய்து வருகிறார்கள். சுவாமிகளின் சமயப் பணியும், சமுதாயப்பணியும், கல்விப்பணியும், கலைப்பணியும் ஒப்பற்றவை, உயர்வானவை, உன்னதமானவை. இதனால், மடத்தின் புகழ் உலக அரங்கில் தன்னிகரற்று உயர்ந்துள்ளது. சுவாமிகள், அரிய பல முயற்சிகளை மேற்கொண்டு, கல்விநிறுவனங்கள் பலவற்றைத்

தோற்றுவித்துள்ளார். மேலும், அவற்றை ஒருங்கிணைத்து நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக உயர்த்திட முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். 'நாச்சியப்ப சுவாமிகளின்' அனைத்து எண்ணங்களையும் 'மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்' செயலாக்கம் செய்து வருகின்றார்கள்.

11.7 ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை

திருப்பூவணத்தில் ஸ்ரீபொன்னனையாள் நடத்திய அன்னதானத்தைத் தொடர்ந்து நடத்திடவும், 36ஆவது திருவிளையாடல் திருவிழாவை நடத்திடவும், மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கில் அமைந்துள்ள ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகரசுவாமிகள் "திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை" என்ற பெயரில் அறக்கட்டளையை ஏற்படுத்தி உள்ளார்கள்.





2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ***15***ஆம் நாள் நடைபெற்ற
36ஆவது திருவிளையாடல் சித்தர்விழா
நான்காம் ஆண்டு அன்னதானம்

இந்த அறக்கட்டளை முறைப்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் தேதி பதியப்பெற்றுள்ளது. பதிவு எண் 51.

அறக்கட்டளையின் ஸ்தாபகர் அறங்காவலராகச் ஸ்ரீலஸ்ரீ ஞானசேகரசுவாமிகள் உள்ளார். அறக்கட்டளையின் தலைவராகத் தேவகோட்டை ஆங்கிலப் பேராசிரியர் இராம.திண்ணப்பன் செட்டியார் அவர்களும், துணைத் தலைவராகத் தேவகோட்டை (இருப்பு – மதுரை) உ.மு.பழ.ராம.பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும்,

செயலாளராகத் திருப்பூவணம் தெய்வீகப்பேரவை திரு-சு.உமாசேகர் அவர்களும், கூடுதல் செயலாளராகக் காரைக்குடி கோட்டையூர் காசிஸ்ரீ நா.ரா.கி. காளைராசன் அவர்களும், பொருளாளராகக் கோட்டை பஜார் தெருவில் வசித்து வரும் திரு. இரெ.சா.முத்துக்குமாரசுவாமி அவர்களும் பொறுப்பு ஏற்றுப் பணியாற்றி வருகின்றனர்.

11.8 அருள்நெறி தெய்வீகப் பேரவை

1985ஆம் ஆண்டு விஜயதசமி அன்று குன்றக்குடி அடிகளார் அவர்களால், திருப்பூவணத்தில் பேராசிரியர் கா. காளிதாசன் அவர்கள் தலைமையில் தெய்வீகப் பேரவை துவங்கப்பெற்றது. மாலைநேரங்களில் இலவசமாகக் கல்விகற்பித்தல், பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுவழிபாடு மற்றும் பிரதி ஞாயிறுதோறும் உழவாரப்பணி செய்து வருகின்றனர். ஆரம்பத்தில், 18 மாணவர்களுக்கு மாலைநேரத்தில் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பெற்றது. வாழையடி வாழையாக, இங்கு படித்த மாணவர்கள் ஆசிரியர்களாகிப் புதிய மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர். தற்போது சுமார் 300 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். இவர்கள், ஞாயிற்றுக் கிழமைகளில், திருக்கோயிலில் கூட்டுதல், ஒட்டடை அடித்தல், தூசுதட்டுதல், முட்செடிகளை அகற்றுதல், திருவீதிகளைச் சுத்தம் செய்தல், திருவிளக்கு ஏற்றுதல் முதலான கோயில் பணிகளையும் செய்கின்றனர். மேலும், திருவிழாக் காலங்களில் பொதுமக்களுக்கு உதவுகின்றனர். மிகவும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம், நோட்டுப்புத்தகம் மற்றும் பள்ளிச்சீருடை ஆகியவற்றை வழங்குகின்றனர். இங்கு கல்வி பயின்றோர், முதல்மாணவராகவும் தேர்வு பெற்றுள்ளனர். அரசுப் பணிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

தற்போது திரு.சு.உமாசேகர் அவர்கள் இதன் தலைவராகவும், திரு.பூ.புஷ்பவனம் என்ற கோபால் அவர்கள் துணைத்தலைவராகவும், திரு.ந.பாலச்சந்திரன் அவர்கள் செயலாளராகவும், திரு.செ.நாகநாதன் அவர்கள் துணைச்செயலாளராகவும், திரு.இராமகிருஷ்ணன் என்ற ரமேஷ் அவர்கள் பொருளாளராகவும் உள்ளனர். மேலும், 10 செயற்குழு உறுப்பினர்களும், 30 பொதுக்குழு உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் ஒன்றுகூடிச் செயல்படுகின்றனர். சிவகங்கை சமஸ்தானம்-தேவஸ்தானம் இவர்களது பணியைப் பாராட்டிச் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிவருகிறது. பொதுமக்கள் அனைவரும் இவர்களது பணியைப் பாராட்டுகின்றனர். தெய்வீகப் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும் திருப்பணி செய்வதில் ஒரு அப்பர் பெருமானாகத் திகழ்கின்றனர்.

பிரதோச வழிபாட்டுக் குழுவினர் - திருப்பூவணத்தில் பிரதோச நாளன்று வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டி அடியார்கள் பலரும் ஒன்று

சேர்ந்த பிரதோச வழிபாட்டுக் குழு ஒன்றை அமைத்துள்ளனர். இவர்கள் தங்களால் இயன்ற வகையில் பொருள்தானாமோ சிரமதானமோ செய்து விழாக்களைச் சிறப்பான முறையில் நடத்தி வருகின்றனர்.

நவராத்திரி வழிபாட்டுக் குழுவினர் - நவராத்திரி விழா 9 நாட்களும் தேவகோட்டை உ.மு. குடும்பத்தைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் கீழ்க்கண்டவர்களோடு ஒருங்கிணைந்து செய்துவருகிறார். உ.மு.வகையைச் சேர்ந்த திரு மெ.அருணாசலம் செட்டியார், திரு. சுப. அருணாசலம் செட்டியார், திரு. அ.லெ.சித.கருப்பஞ் செட்டியார், திரு. அ.லெ.அண. வள்ளியப்ப செட்டியார், திரு. உ.வீர.சோம.சித.சிதம்பரம் செட்டியார், மதுரை திரு. பழ. சேகர், இந்நூலாசிரியர் காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராஜன், திரு. ஞானசேகரன் ஆகியோர் இணைந்து செய்து வருகின்றனர். நவராத்திரி நாட்களில் சிறப்பான முறையில் கொலுவைப்பதற்கான பணிகளைத் திரு.கோபி அவர்கள் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துகிறார். 36ஆவது திருவிளையாடலைப் போற்றும் வகையில் சித்தர் ரசவாதம் செய்த சிற்பங்களைச் சிறப்பான முறையில் வடிவமைத்து வண்ணம் கொடுத்துக் கொலுவில் வைத்து வழிபாடு செய்கின்றனர்.

அம்பு போடுதல் - திரு அ.லெ.அண.வள்ளியப்பசெட்டியார் அவர்கள் அம்புபோடுதல் திருவிழாவைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

12. மண்டபங்கள்

நடனமாடும் அரங்கு, திறைகள் அளக்கும் மண்டபம், தமிழ்க்கழக மண்டபம், ஆரணங்கள் முழங்கு மண்டபம், முரசு அதிரும் மண்டபம், தான மண்டபம், தந்திரம் பயிலும் சைவ மடம், முனிவர் சதுக்கம், கடைவீதி, யாகமண்டபம், சித்திரமண்டபம் ஆகியன முன்காலத்தில் கோயில் அருகே இருந்தன. இப்போது இம்மண்டபங்கள் ஏதும் இல்லை. பாண்டியர்களின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் சிதிலமடைந்து கிடந்த இந்த மண்டபங்களை அகற்றிப் புனர்நிர்மாணம் செய்துள்ளனர். இம் மண்டபங்களில் சிதையுண்டு இருந்த கல்வெட்டுகள் பலவும் கோயிலின் சுற்றுச் சுவர்களிலும் தரைப்பகுதிகளிலும் சிறுசிறு துண்டுகளாகக் காணக்கிடக்கின்றன.

12.1 பொன்னனையாள் மண்டபம்



திருப்பூவணநாதர் விமானத்தின் மேற்குப் பகுதியில் கலசங்களுக்குக் கீழே பொன்னனையாளும் அவளது இரு தோழியர் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

திருக்கோயிலைச் சுற்றிலும் பழங்காலத்தில் கோட்டை இருந்துள்ளது. கோட்டையின் இடிபாடுகள் கோயிலின் இடது புறத்தில் மண்மேடாக இன்றும் உள்ளது. இந்த மேட்டுப்பகுதி "கோட்டைமேடு" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் பொன்னனையாள் வசித்த வீடு இருந்துள்ளது. இதன் அருகே மதுரை நாயக்கமன்னர் காலத்தில் "பொன்னனையாள் மண்டபம்" என்றும் "பொன்னனையாள் மடம்" என்றும் கட்டிடங்கள் இருந்துள்ளன. இங்கே அன்னதானங்கள் நடைபெற்றுள்ளன. தற்போது இவ்விரு கட்டிடங்களும் இடிந்துபோய்விட்டன. பொன்னனையாள் மண்டபத்தில் சித்தர் திருவுருவம், பொன்னனையாள் திருவுருவம், திருமலைநாயக்கர் மற்றும் அவரது துணைவியார் திருவுருவம், நாயக்கரின் முதலமைச்சரான சொக்கப்பநாயக்கர் மற்றும் அவரது துணைவியார் திருவுருவம் ஆகிய சிற்பங்கள் இருந்துள்ளன. 1961ஆம் ஆண்டு குடமுழுக்குவிழா நடைபெற்ற போது, அந்தச் சிற்பங்களைப் பொன்னனையாள் மண்டபத்திலிருந்து அகற்றித் திருக்கோயிலின் உள்ளே கொடிமரத்தின் அருகே நிறுவியுள்ளனர். தற்போது இச்சிலைகள் அங்குதான் உள்ளன.



பொன்னனையாள் மண்டபம் இருந்த இடத்திற்கு அருகில் திருமலைநாயக்கர் கட்டிய யானைமண்டபம். தற்போது சிதிலமடைந்த நிலையில் உள்ளது. இம்மண்டபம் சுமார் பத்துஅடி நீளமும் பத்து அடி அகலமும் கொண்டது.

13 அருகில் உள்ள திருத்தலங்கள்

மதுரை, மானாமதுரை, திருப்பாச்சேத்தி, இடைக்காட்டூர், திருச்சுழி, திருமோகூர், திருவாதவூர், சிவகங்கை, காளையார்கோயில் முதலான பல திருத்தலங்கள் திருப்பூவணத்திற்கு அருகே உள்ளன.

14. திருப்பூவணம் - தலஇருப்பிடம்

திருப்பூவணம் மதுரையிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் வைகையாற்றின் தென்கரையில் மதுரை-இராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. திருப்பூவணத்திலிருந்து கிழக்கே 22 கி.மீ. தூரத்தில் சிவகங்கையும், தென்கிழக்கே 20 கி.மீ. தூரத்தில் மானாமதுரையும், மேற்கே 25 கி.மீ.

தூரத்தில், திருப்பரங்குன்றமும், வடமேற்கே 18 கி.மீ. தூரத்தில் மதுரையும், தெற்கே 35 கி.மீ. தூரத்தில் திருச்சுழியும், வடக்கே 15 கி.மீ. தூரத்தில் (மாணிக்கவாசகர் பிறந்த) திருவாதவூரும் உள்ளன. (திருவாதவூர் அருகில் 108 வைணவத்திருத்தலங்களில் ஒன்றான திருமோகூர் உள்ளது). இவ்விடங்களிலிருந்து பேருந்துகள் வழியாகத் திருப்பூவணத்தை (திருப்புவனத்தை) எளிதில் அடையலாம்.

14.1 போக்குவரத்து வசதிகள்

மதுரை மாட்டுத்தாவணிப் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் அரைமணி நேரத்தில் திருப்பூவணத்தை அடையலாம். மானாமதுரை, பரமக்குடி, கமுதி, இராமநாதபுரம், இராமேசுவரம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் திருப்பூவணம் வழியாகச் செல்கின்றன. மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து நகரப்பேருந்துகள் அதிகம் உள்ளன. மானாமதுரை, சிவகங்கை, திருவாதவூர் ஆகிய ஊர்களிலிருந்தும் நகரப்பேருந்துகள் உள்ளன. இவ்விடங்களிலிருந்து நகரப்பேருந்தில் திருப்பூவணத்தை அடைந்திடச் சுமார் 1மணி நேரமாகும். "கோட்டை" அல்லது "சந்தை" எனக் கேட்டு இறங்க வேண்டும். இப் பேருந்து நிறுத்தங்களுக்கு மிக அருகில் (சுமார் 400மீ) திருக்கோயில் உள்ளது.

திருப்பூவணத்தின் வடக்கே வைகையாறு ஓடுகிறது. ஆற்றின் வடகரையில் உள்ள மடப்புரம் காளிஅம்மன் கோயில் தற்போது மிகவும்-பிரசித்தி பெற்று விளங்கிவருகிறது. இதனால், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மடப்புரத்திற்குத் தினமும் அதிகமான எண்ணிக்கையில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவற்றில் பயணம் செய்தும் திருப்பூவணத்தை எளிதில் அடையலாம். மடப்புரம் செல்லும் நகரப் பேருந்தில் வருவோர், "திருப்புவனம் சந்தை பேருந்து நிறுத்தம்" எனக்கேட்டு இறங்க வேண்டும். அங்கிருந்து சுமார் 400 மீட்டர் தூரத்தில் திருக்கோயில் உள்ளது.

மடப்புரம் காளிகோயிலுக்குச் செல்வோர் மடப்புரம் காளிகோயில் பேருந்து நிறுத்தத்திற்கு முன்னால் உள்ள, போக்குவரத்துப் பணிமனை நிறுத்தத்தில் இறங்கி, வைகை ஆற்றின் வடகரையில் "ஆடித்தபசு மண்டபத்தில் உள்ள இராட்சதக்கண்ணு பிள்ளையாரையும்", தென்கரையில் கோயில் கொண்டிருக்கும் திருப்பூவணத்து ஈசனையும் வழிபடலாம்.

14.2 இருப்புப் பாதை வழி

மதுரையிலிருந்து இராமேசுவரம் செல்லும் இருப்புப் பாதையில் 20 கி.மீ. தொலைவில் திருப்பூவணம் உள்ளது. எனவே தொடர்வண்டியில் வருவோர் மதுரையிலிருந்து இராமேசுவரம் பயணிகள் வண்டியில் திருப்பூவணத்தை அடையலாம். இராமேசுவரத்திலிருந்து மதுரை செல்வோர், மதுரைக்கு முன்னால் திருப்பூவணத்தில் இறங்கி இறைவனை வழிபட்டுச் செல்லலாம். தொடர்வண்டி நிலையத்திலிருந்து திருக்கோயில் சுமார் 750 மீட்டர் தூரத்தில் உள்ளது.

15.திருமுறைகளில் திருப்பூவணம்

திருமுறைத் திரட்டுக்களான மூவர்-தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா போன்ற பக்தி இலக்கியங்களிலும், திருப்புகழிலும் திருப்பூவணத்து இறைவன் சிறப்பித்துப் பாடப் பெற்றுள்ளார்.

தேவாரத்தில் திருப்பூவணம்

சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்தவர்கள் சமயகுரவர் நால்வராவர். இவர்கள் முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனத் திருக்கோயில்களில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்களது சிறப்புகளையும், இவர்கள் திருப்பூவணநாதரை வணங்கிய வரலாற்றையும், இவர்களது பாடல்களில் காணப்படும் திருப்பூவணத் திருத்தலத்தின் அழகையும், பூவணநாதரின் அருளையும் தொகுத்து இங்கே வழங்கப்பட்டுள்ளது. இந் நால்வருள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவரும் இறைவனை வணங்கிப் பாடிய பாடல்கள் தேவாரத் திரட்டாக உள்ளன. தேவாரத்தில் இடம் பெற்றுள்ள பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள் பதினான்கு ஆகும். தேவாரம் பாடிய சமயகுரவர்களும் வைகை ஆற்றின் வடகரையிலிருந்தே தென்கரையில் உள்ள திருப்பூவண நாதரை வணங்கி வழிபட்டுள்ளனர் என்று "புட்பவனநாதர் வண்ணம்" என்ற நூலில் கந்தசாமிப் புலவர் கூறுகிறார்.

"செப்பு மூவர்சொல் தமிழ்த்துதிக்க விருப்பமொடுவந்துவையை
மணற்சிவ லிங்கமென மனத்தோணி முன்பு வடகரைக்கவர்
நின்று தமிழ்பாடு பொழுதேயிடப மாமுதுகு சாயும்வகையே
செய்துமுன் மூவர் தரிசிக்க மகிழ்நேசர் "
-(புட்பவனநாதர் வண்ணம்)

16 திருஞானசம்பந்தர்

சமயகுரவர்களுள் முதல்வராகிய இவ்வருளாளர் சோழநாட்டில் சீர்காழியில் சிவபாத இருதயருக்கு மகனாக அவதரித்தார். தமது மூன்றாவது வயதில் "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகம் பாடித் தனக்குப் பால் கொடுத்தருளிய அம்மையையும் அப்பனையும் சுட்டிக் காட்டினார். அதுமுதல் பல திருத்தலங்களுக்கும் சென்று பதிகம் பாடிப்பரவிப் பல அருட்செயல்கள் புரிந்து சைவத்தைத் தழைக்கச் செய்தார்.

17 நந்தி மறைக்காது

திருஞானசம்பந்தர் திருப்புத்தூரில் ஈசனை வழிபட்டு, மதுரை செல்லும் வழியில் திருப்பூவணத்திற்குச் செல்லவேண்டி, வைகையாற்றின் வடகரையை வந்தடைந்தார். ஆற்றினைக் கடந்து திருப்பூவணத்திற்குச் செல்ல எத்தனித்த போது ஆற்றின் மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன.

எனவே ஆற்றில் கால்வைக்க அஞ்சி, வைகையின் வடகரையில் ஆடித்தபசு மண்டபம் இருக்கும் இடத்தில் நின்று திருஞானசம்பந்தர் பதிகம் பாடி, வைகை ஆற்றின் தென்கரையில் உள்ள திருப்பூவணநாதரைப் பதிகம் பாடிப் பணிந்து வணங்கினார். திருஞானசம்பந்தருக்குக் காட்சியளிக்க விரும்பிய ஈசன் நந்தியை மறைக்காமல் சாய்ந்து இருக்கும்படிக் கட்டளையிட்டார். நந்தி வலதுபுறமாகச் சற்றுச் சாய்ந்துகொள்ள, திருஞானசம்பந்தர் வைகையின் வடகரையில் இருந்தே திருப்பூவணனைத் தரிசித்து வழிபட்டார். இதனால் திருப்பூவணம் கோயிலில் நந்தி மறைப்பதில்லை. வைகை ஆற்றின் தென்கரையில் இருந்து திருஞானசம்பந்தர் வழிபட்ட இடத்தை ஆடித்தபசு மண்டபம் என்று அழைக்கின்றனர். இப்போதும் இம்மண்டபத்திலிருந்து திருப்பூவணநாதரை வழிபடலாம். **நந்தி மறைக்காது.**



திருஞானசம்பந்தருக்குக் காட்சியருள வேண்டி
வலதுபுறம் முதுகு சாய்ந்திருக்கும் நந்திதேவர்

திருஞானசம்பந்தர் திருப்பூவணம் மீது இருபத்திரண்டு பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய முதல் பதினொரு பாடல்களும் முதல் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளன. இப்பாடல்கள் "தென்றிருப்பூவணமே" என்று முடியுமாறு பாடப் பெற்றுள்ளன. அடுத்த பதினொரு பாடல்களும் மூன்றாம் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளன. இப்பதிகத்தில் உள்ள பாடல்களில் ஐந்து பாடல்கள் "அடிதொழ நன்மை யாகுமே" என்று முடியுமாறு பாடப் பெற்றுள்ளன.

முதல் திருமுறையில் உள்ள முதல் பத்துப் பாடல்களில் "தென்திருப்பூவணமே" என்று முடியும்படிப் பாடப்பட்டுள்ளன. எனவே. இப்பாடல்கள் ஆற்றின் மறுகரையில் இருந்து பாடப் பெற்றிருக்க வேண்டும். மேலும் மூன்றாம் திருமுறையில் உள்ள பாடல்களில் "அடிதொழ நன்மை யாகுமே" என்றும் "அடிதொழப் பீடை இல்லையே" என்றும் பூவண நாதரின் திருவடியைப் பாடியுள்ளதால் இப்பாடல்கள் அனைத்தும் திருப்பூவணம் திருக்கோயிலில் பாடப் பெற்றிருக்கவேண்டும்.

18 ***ஏழு நந்திகள் -*** திருப்பூவணத்தில் சுவாமி சந்நிதிக்கு நேர் எதிரே ஒரே நேர்கோட்டில் ஏழு நந்திகள் உள்ளன. அர்த்தமண்டபத்தில் ஒன்று, மகாமண்டபத்தில் ஒன்று, கொடிமண்டபத்தில் ஒன்று, வைகை ஆற்றின் படித்துறையில் ஒன்று, வைகை ஆற்றின் வடகரையில் நால்வர் ஆலயம் அருகே

ஒன்று, ஆடித்தபசு மண்டபத்தில் இரண்டு என மொத்தம் ஏழு நந்திகள் உள்ளன. இவ்வாறாகச் சுவாமிக்கு நேரே ஏழு நந்திகள் வரிசையாக உள்ள சிறப்பு வேறுபிற தலங்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

19 கங்கையும் காசியும்

சூரிய வம்சத்தில் தோன்றிய மன்னன் சகரன். அவன் அசுவமேத யாகம் செய்தான். இதனால் இந்திரன் தனது பதவி பறிபோய்விடும் எனப் பயந்து அசுவமேதயாகக் குதிரையைத் திருடி, இமாலயத்தில் கடும் தவம் இயற்றி வந்த கபிலர் என்ற மகரிசியின் ஆசிரமத்தில் கட்டி வைத்துவிட்டான். குதிரையைத் தேடிவந்த சகரனின் புதல்வர்கள் முனிவரைத் துன்புறுத்தினர். இதனால் கோபம் கொண்ட முனிவர் இராசகுமாரர்களையும் அவர்களுடன் வந்த அனைவரையும் தனது கோபப்பார்வையார் எரித்துச் சாம்பல் ஆக்கிவிட்டார். தனது பிள்ளைகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இறந்துவிட்டதனால் மனமுடைந்த சகர மன்னன் தனது பேரன் அம்சுமான் என்பவனுக்கு முடிசூட்டிவிட்டு கானகம் சென்று தவம் செய்து முத்தியடைந்தான். அம்சுமானின் அரண்மனைக்கு வந்த மகரிசிகள் அனைவரும் சகரனின் புத்திரர்கள் நற்கதி அடைய வேண்டுமானால், எரிந்துபோன அவர்களின் சாம்பல் மீது தேவர்களின் உலகில் பாய்ந்து செல்லும் கங்கையின் நீரைத் தெளித்தால் மட்டுமே சாபவிமோசனம் பெற்று நற்கதி அடைய முடியும் என்று கருத்துத் தெரிவித்தனர்.

கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர அம்சுமானால் முடியவில்லை. அவனது மகன் அசமஞ்சனாலும் முடியவில்லை. ஆனால் அசமஞ்சனின் மைந்தன் பகீரதன் தனது முன்னோர்களின் ஆன்மாக்கள் முத்தியடையக் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர வேண்டிக் கடுந்தவம் செய்தான். அவனது தவத்தை ஏற்று கங்கா தேவியும் பூமிக்கு வரச் சம்மதித்தாள். சிவபெருமான் தனது திருமுடியில் கங்கையை விழச் செய்து பூமியில் நதியாக ஓடச் செய்தார்.

பூமியில் இறங்கிய கங்கையானது பகீரதனைப் பின்தொடர்ந்து ஓடியது. பகீரதனின் முன்னோர்கள் சாம்பலான இடத்தில் கங்கை பாய்ந்து சென்றதால் பகீரதனின் முன்னோர்கள் முத்தி பெற்றனர். அன்றிலிருந்து கங்கையில் அவரவர் முன்னோர்களின் அஸ்தியைக் கரைத்து முன்னோர்களின் ஆன்மாக்களை முத்தியடையச் செய்து வருகின்றனர்[18].

---

[18] திரு. ஏ.எம். ராஜகோபலன், ஆசிரியர், குமுதம் சோதிடம், 24.10.2003 இதழுடன் இலவச இணைப்பு.

இவ்வாறு முத்தியளிப்பதில் கங்கை, அசி, அருணை ஆகிய மூன்று மகத்தான புண்ணிய நதிகளுக்கு மத்தியில் அமைந்த ஈடிணையற்ற திருத்தலம் வாரணாசி அல்லது காசி எனப் புகழ் பெற்றது. இங்கு இறப்பவர்களுக்குச் சிவபிரான் தாரகமந்திரமாகிய பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்து அருளுவார். ஆதலால் அந்திமக்காலத்தில் (வாழ்க்கையின் இறுதிக் காலத்தில்) காசியில் வசித்து மக்கள் இறக்கலாயினர்.



20. **கங்கையே வைகை**

மீனாட்சி திருக்கல்யாணத்தின்போது விருந்து உண்டு களித்த குண்டோதர பூதத்தின் தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் தேவைப்பட்டது. எனவே சிவபெருமான் குண்டோதரனிடம் "கை-வை" எனச் சொல்லித் தனது சடாமுடியிலிருந்து கங்கையை சிறிது அவிழ்த்து விட்டார். கங்கையானது மதுரையில் வைகை நதியாக ஓட ஆரம்பித்தது.

20.1 காசியும் திருப்பூவணக்காசியும்

கங்கை நதிக்கரையில் காசி எவ்வளவு சிறப்புடையதோ அதைவிடச் சிறப்புடன் வைகை நதிக்கரையில் திருப்பூவணம் விளங்குகிறது. திருப்பூவணநாதர் தனது மார்பில் எலும்பினால் ஆன மாலையைப் பூணூலாக அணிந்துள்ளார். இதனை,



"…. செத்தவர் தம்
எலும்பினாற் செறியச்
செய்த
பூணாணும் அரைநாணும்
பொலிந்து தோன்றும்
பொழில் திகழும்
பூவணத் தெம்
புனிதனார்க்கே"
என்றும்,
பொல்லாத புலால்
எலும்பு பூணாய்த்
தோன்றும்
பொழில் திகழும்
பூவணத்தெம்
புனிதார்க்கே[19]"
என்றும் திருநாவுக்கரசு நாயனார் திருப்பூவணம் திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

வாழ்க மன்னவன்
செங்கோன் மழைமுகில்
வாழ்க நான்மறை வானவர்கள் நானிலம்
வாழ்க வைதிக சைவ மலர்த்திரு
வாழ்க அஞ்செழுத்து உண்மை நன்மந்திரம்
திருச்சிற்றம்பலம்
சுபம்

[19] தேவாரம்- திருப்பூவணம் – திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருத்தாண்டகம், பாடல் எண் 2 மற்றும் 3

திருப்பூவணக் காசி
திருப்பாடல்கள்

தேவரப் பாடல்கள் கிடைக்கப் பெற்ற பாண்டியநாட்டுத் திருத்தலங்களில் மூவர் பாடலும் பெற்ற திருத்தலம் இது ஒன்றேயாகும். இந்தப் பெருமையானது திருப்பூவணத்தின் தனிப் பெருமையாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், கருவூர்த் தேவர், அருணகிரிநாதர், இவர்களின் பாடல் பெற்ற திருத்தலமாகும். மாணிக்கவாசகர், குமரகுருபரர், அபிராமிபட்டர் வைப்புத்தலமாகப் பாடியுள்ளனர்.

மூவர் தேவாரம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வாழ்த்து

திருத்தோணிபுரத்து அமர்ந்த சிவன்[20] அருளால் உமை[21] கலசத் திருமுலைப் பால்,

விருப்போடு அமுதுசெய்து[22] மிகு சைவத்துறை விளங்க, வேதம் ஓங்கக்,

கருக்குழி[23] வீழ்ந்து அலற, அமண்கையர்கள்தாம்[24] கழுவேறக் கருதி, மாறன்[25]

நெருப்புறு வெப்பு[26] அகன்றிட, வெண்ணீறு எடுத்துச் சாத்தினர்[27] தாள் நினைதல் செய்வாம்.

1.1 திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியது

(முதல் திருமுறை) பண் தக்கேசி

திருச்சிற்றம்பலம்

(1)

அறையார் புனலும்[28], மாமலரும்[29], ஆடுஅரவார்[30] சடைமேல்,
குறையார் மதியம்[31] சூடி, மாது ஓர் கூறு உடையான் இடமாம்,

---

[20] திருத்தோணிபுரம் என்ற சீர்காழியில் உள்ள பிரம்மபுரீசுவரர், தோணியப்பர், சட்டைநாதர்
[21] பெரியநாயகி, திருநிலை நாயகி, ஸ்திர சுந்தரி
[22] அமுது செய்து = உண்டு, சாப்பிட்டு, பசியாறி,
[23] கருக்குழி = கருப்பப் பை, பெற்ற வயிறு, (தாய்மார்கள்)
[24] அமண்கையர் = சமணர்
[25] மாறன் = கூன் பாண்டியன், நின்றசீர்நெடுமாறன்
[26] நெருப்புறு வெப்பு = சூலை நோய், வயிற்று வலி,
[27] சாற்றினார் = பூசி விட்டார்,
[28] அறையார் புனலும் = அறைகின்ற, அடித்து மோதுகின்ற, ஓசையுடைய புனலும் (கங்கையும்)
[29] மாமலரும் = கொன்றைமலரும்
[30] ஆடு அரவார் = ஆடுகின்ற பாம்பை அணிந்தவர்
[31] குறையார் மதியம் = வளர்பிறைச் சந்திரன்

முறையால் முடிசேர்[32] தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும்
திறையார்[33] ஒளிசேர் செம்மை ஓங்கும் தென் திருப்பூவணமே. (2)

மருவார் மதில் மூன்று[34] ஒன்ற எய்து[35], மாமலையான் மடந்தை[36]
ஒருபால் பாகமாகச் செய்த உம்பர் பிரான்[37], அவன் ஊர்[38],
கருவார் சாலி ஆலை மல்கிக் கழல்மன்னர் காத்து அளித்த
திருவால் மலிந்த சேடர் வாழும் தென்திருப் பூவணமே. (3)

போர் ஆர் மத மா உரிவை போர்த்துப் பொடி அணி மேனியனாய்க்
காரார் கடலின் நஞ்சம் உண்ட கண்நுதல் விண்ணவன் ஊர்
பாரார் வைகைப் புனல்வாய் பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச்
சீரார் வாரி சேர நின்ற தென்திருப் பூவணமே. (4)

கடியார் அலங்கற் கொன்றை சூடிக் காதில் ஓர் வார் குழையன்
கொடியார் வெள்ளை ஏறு உகந்த கோவணவன் இடமாம்
படியார் கூடி நீடி ஓங்கும் பல் புகழால் பரவச்
செடியார் வைகை சூழ நின்ற தென்திருப் பூவணமே. (5)

கூர்ஆர் வாளி சிலையில் கோத்துக் கொடிமதில் கூட்டு அழித்த
போர்ஆர் வில்லி மெல்லியலாள் ஓர் பால் மகிழ்ந்தான் இடமாம்
ஆரா அன்பில் தென்னர் சேரர் சோழர்கள் போற்று இசைப்பத்
தேர்ஆர் வீதி மாட நீடும் தென் திருப்பூவணமே. (6)

நன்று தீது ஒன்று இ(ல்)லாத நான்மறையோன் கழலே
சென்று பேணி ஏத்த நின்ற தேவர்பிரான் இடமாம்
குன்றில் ஒன்றி ஓங்க மல்கு குளிர் பொழில் சூழ் மலர்மேல்
தென்றல் ஒன்றி முன்றில் ஆரும் தென் திருப்பூவணமே. (7)

பை வாய் அரவம் அரையில் சாத்திப் பார் இடம் போற்று இசைப்ப
மெய் வாய் மேனி நீறுபூசி ஏறு உகந்தான் இடமாம்

---

[32] முறையால் முடிசேர் = முறையாக ஆட்சிக்கு வந்த
[33] திறை = கப்பம், காணிக்கை,
[34] மருவார் மதில் மூன்று = முப்புரம்
[35] ஒன்ற எய்து = மூன்றையும் ஒன்றாக எய்து
[36] மாமலையான் மடந்தை = மலையத்துவச பாண்டியனின் மகளான தடாதகைப் பிராட்டி (உமை)
[37] உம்பர் பிரான் = தேவர்களின் தலைவன்
[38] அவன் ஊர் = அவனுடைய ஊர், திருப்பூவணம்

கைவாழ் வளையார் மைந்தரோடும் கலவியினால் நெருங்கிச்
செய்வார் தொழிலின் பாடல் ஓவாத் தென் திருப்பூவணமே.

(8)

மாட வீதி மன்இலங்கை மன்னனை மாண்பு அழித்துக்
கூட வென்றி வாள் கொடுத்தாள் கொள்கையினார்க்கு இடமாம்
பாடலோடும் ஆடல் ஓங்கிப் பன் மணி பொன் கொழித்து
ஓட நீரால் வைகை சூழும் உயர் திருப்பூவணமே.

(9)

பொய்யா வேத நாவினானும், பூமகள் காதலனும்,
கையால் தொழுது கழல்கள் போற்றக் கனல் எரியானவன் ஊர்
மையார் பொழிலின் வண்டு பாட, வைகை மணி கொழித்துச்
செய்யார் கமலம் தேன் அரும்பும் தென் திருப்பூவணமே.

(10)

அலைஆர் புனலை நீத்த அருந் தேரரும் அன்பு செய்யா
நிலையா வண்ணம் மாயம் வைத்த நின்மலன் தன் இடமாம்
மலைபோல் துன்னி வென்றி ஓங்கும் மாளிகை சூழ்ந்து அயலே
சிலையார் புரிசை பரிசு பண்ணும் தென் திருப்பூவணமே.

(11)

திண்ஆர் புரிசை மாடம் ஓங்கும் தென் திருப்பூவணத்துப்
பெண்ஆர் மேனி எம் இறையைப் பேர்இயல் இன்தமிழால்
நண்ணார் உட்கக் காழி மல்கு ஞானசம்பந்தன் சொன்ன
பண்ஆர் பாடல் பத்தும் வல்லார் பயில்வது வான் இடையே.
திருச்சிற்றம்பலம்

--

21.2 திருஞான சம்பந்தர் பாடியது(மூன்றாம் திருமுறை)

பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

(1)

மாது அமர் மேனியன் ஆகி, வண்டொடு
போது அமர் பொழில் அணி பூவணத்து உறை
வேதனை, விரவலர் அரணம் மூன்று எய்த
நாதனை, அடிதொழ நன்மை யாகுமே.

(2)

வான் அணி மதி புல்கு சென்னி, வண்டொடு
தேன் அணி பொழில் திருப்பூவணத்து உறை,
ஆன நல் அரு மறை அங்கம் ஓதிய
ஞானனை, அடிதொழ நன்மை யாகுமே.

(3)

வெம் துயர் உறு பிணி வினைகள் தீர்வது ஓர்
புந்தியர் தொழுது எழு பூவணத்து உறை
அந்தி வெண்பிறையினோடு ஆறு சூடிய
நந்தியை, அடி தொழ நன்மை யாகுமே.
(4)

வாச நன்மலர் மலி மார்பில் வெண்பொடிப்
பூசனைப், பொழில் திகழ் பூவணத்து உறை
ஈசனை, மலர் புனைந்து ஏத்துவார் வினை
நாசனை, அடி தொழ நன்மை யாகுமே.
(5)

குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை
பொருந்திய பொழில் திருப்பூவணத்து உறை,
அரும் திறல் அவுணர் தம் அரணம் மூன்று எய்த
பெருந்தகை, அடி தொழப் பீடை இல்லையே.
(6)

வெறி கமழ் புன்னை பொன்ஞாழல் விம்மிய
பொறி அரவு அணி பொழில் பூவணத்து உறை
கிறி படும் உடையினன், கேடில் கொள்கையன்,
நறுமலர் அடி தொழ நன்மை யாகுமே.
(7)

பறை மல்கு முழவொடு பாடல் ஆடலன்
பொறை மல்கு பொழில் அணி பூவணத்து உறை
மறை மல்கு பாடலன், மாது ஓர் கூறினன்,
அறை மல்கு கழல் தொழ அல்லல் இல்லையே.
(8)

வரைதனை எடுத்த வல் அரக்கன் நீள் முடி
விரல்தனில் அடர்த்தவன், வெள்ளை நீற்றினன்,
பொரு புனல் புடை அணி பூவணந்தனைப்,
பரவிய அடியவர்க்கு இல்லை பாவமே.
(9)

நீர் மல்கு மலர் உறைவானும், மாலுமாய்ச்,
சீர்மல்கு திருந்த அடி சேரகிற்கு இலர்,
போர் மல்கு மழுவினன் மேய பூவணம்,
ஏர் மல்கு மலர் புனைந்து ஏத்தல் இன்பமே.
(10)

மண்டை கொண்டு உழி தரு மதியில் தேர அருங்
குண்டருங் குணம் பல பேசும் கோலத்தர்,
வண்டு அமர் வளர் பொழில் மல்கு பூவணம்
கண்டவர் அடிதொழுது ஏத்தல் கன்மமே.
(11)

புண்ணியர் தொழுது எழு பூவணத்து உறை
அண்ணலை, அடி தொழுது அந்தண் காழி உள்
நண்ணிய அருமறை ஞானசம்பந்தன்
பண்ணிய தமிழ் சொ(ல்)லப் பறையும் பாவமே.

திருச்சிற்றம்பலம்

--

திருநாவுக்கரசுநாயனார் வாழ்த்து

அருள்பெருகுந்திலகவதி யாரருளாலமண்சமயமகற்றியன்பாற்
கருதரியகற்புணையாற்கடனீந்திக் கருவேலைகடப்பான்போலு
மருவுபுகழ்வாய்மூரில் வைதிகசைவந்தழைப்ப வந்து தோன்றித்
திருவதிகைப் பதிவருஞ் செந்தமிழ் நாவுக்கரையர் பதஞ்சிந்தை

செய்வாம்.

21.3 திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது (திருத்தாண்டகம்)

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி ஊர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேற்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 2

கல்லாலின் நீழற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 3

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்று
மூரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 4

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றுங்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 5

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றுஞ்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 6

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றுந்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 7

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்
திரிபுரத்தை எரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்

பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 8

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
அணிகிளரும் உருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றுஞ்
செக்கர்வான் ஒளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 9

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி அறுத்தருளும் பரிசு தோன்றுங்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தமுங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 10

ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

திருச்சிற்றம்பலம்

--

(*இத் திருப்பதிகம் அகத்திய முனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டிற் சேர்ந்த சிறப்புடையது*)

சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்த்து

காதலுடன் மிகுமின்பக் கடிமணப்பூம்பந்தரின் கீழ்க்கலைவல்லோர்முன்
மாதவன் போல் வந்திவனம் வழித்தொண்டனென்றிசைக்கும் வழக்கினாலே
பாதிமதிநுதற் பரவையிடையிருளிற் பங்கயப் பொற்பாதஞ்சேப்பச்
சோதிதனைத் தூதுகொண்ட சுந்தரன்றாள் சந்ததமுந் தொழுது வாழ்வாம்

பெரியபுராணம் (சுந்தரர் திருப்பூவணம் கண்டது)

நீடுதிருப் பூவணத்துக் கணித்தாக நேர்செல்ல
மாடுவருந் திருத்தொண்டர் மன்னியஅப் பதிகாட்டத்
தேடுமறைக் கரியாரைத் திருவுடையார் என்றெடுத்துப்
பாடிசையிற் பூவணமீ தோஎன்று பணிந்தணைவார்

21.4 சுந்தரர் பாடியது *பண் - இந்தளம்*

திருச்சிற்றம்பலம்

(1)

திருவுடையார், திருமால் அயனாலும்
உருவுடையார், உமையாளை ஓர் பாகம்
பரிவுடையார், அடைவார் வினை தீர்க்கும்
புரிவுடையார், உறை பூவணம் ஈதோ.

(2)

எண்ணி இருந்து கிடந்தும் நடந்தும்
அண்ணல் எனா நினைவார் வினை தீர்ப்பார்,
பண்ணிசையார் மொழியார் பலர் பாடப்
புண்ணியனார் உறை பூவணம் ஈதோ.

(3)

தெள்ளிய பேய் பல பூதம் அவற்றொடு
நள்ளிருள் நட்டம் அது ஆட நவின்றோர்
புள்ளுவராகும் அவர்க்கு அவர் தாமும்
புள்ளுவனார், உறை பூவணம் ஈதோ.

(4)

நிலன்உடை மான் மறி கையது, தெய்வக்
கனல்உடை மா மழு ஏந்தி, ஓர் கையில்
அனல் உடையார், அழகார், தரு சென்னிப்
புனலுடையார், உறை பூவணம் ஈதோ.

(5)

நடை உடை நல் எருது ஏறுவர், நல்லார்,
கடைகடை தோறிடு மின்பலி என்பார்,
துடி இடை நன் மடவாளடு மார்பில்
பொடி அணிவார், உறை பூவணம் ஈதோ.

(6)

மின்னனையாள் திரு மேனி விளங்க ஓர்
தன் அமர் பாகம் அதாகிய சங்கரன்,
முன் நினையார் புரம் மூன்று எரி ஊட்டிய
பொன்னனையான், உறை பூவணம் ஈதோ.

(7)

மிக்கு இறையே அவன் துன் மதியால் இட
நக்கு இறையே விரலால் இற ஊன்றி
நெக்கு இறையே நினைவார் தனி நெஞ்சம்
புக்கு உறைவான், உறை பூவணம் ஈதோ.

(*பாடல் 8-9 கிடைக்கப்பெறவில்லை*)

(10)

சீரின் மிகப் பொலியும் திருப்பூவணம்
ஆர விருப்ப இடமா உறைவான் த(ன்)னை
ஊரன் உரைத்த சொல் மாலைகள் பத்து இவை
பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே.

திருச்சிற்றம்பலம்

--

மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்த்து

மருவார்கடொழுகழற்றென் மதுரைவருதமிழ்வழுதி மன்னர் கோமான்
பெருவாசிகொணர்கெனச் செம்பொன் கொடுத்துவிடுத்திடவச்
செம்பொன்னாலே
பெருவாழ்வை யுறவிரைந்து பெருந்துறையின் மேவியதம்பிரானைக்
கொண்ட
திருவாதவூரடிகளிரு பாதகமலங்கள் சென்னிவைப்பாம்

21.5 திருவாசகத்தில் திருப்பூவணம் -

திருப்பூவணத்திற்கு வடக்கே சுமார் 18 கி.மீ. தூரத்தில் உள்ளது திருவாதவூர். இவ்வூரில் பிறந்தவர் மாணிக்கவாசகர். அதனால் அவருக்குத் திருவாதவூரர் என்னும் பெயர் அமைந்தது. அவருடைய கல்வி, கேள்வி, ஒழுக்கம், அறிவு, ஆற்றல் ஆகிய சிறப்புகளைப் பற்றிக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவரைத் தனது தலைமை மந்திரியாக நியமனம் செய்தான். அவரது ஆட்சித் திறமையைக் கண்டு "தென்னவன் பிரமராயன்" என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கினான். மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நேரில் எழுந்தருளி நரிகளைப் பரிகளாக்கியும், பின்னர் பரிகளை நரிகளாக்கியும் திருவிளையாடற் புரிந்தருளினார்.

(1) ***மாணிக்கவாசகப் பெருமான் கீர்த்தித் திருவகவலில்,***

"*உத்தரகோசமங்கையுள் இருந்து*
வித்தக வேடம் காட்டிய இயல்பும்
பூவணம் - *அதனில் பொலிந்து இருந்து அருளி*
தூ வண மேனி காட்டிய தொன்மையும்

வாதவூரினில் வந்து இனிது அருளி

பாத சிலம்பு ஒலி காட்டிய பண்பும்" - திருவாசகம் 50 என்று திருப்பூவணநாதரின் தொன்மைகளையும் அருளும் தன்மையையும் பாடியுள்ளார்.

(2) **போற்றித் திருவகவலில்,**

" கலை ஆர் அரிகேசரியாய் போற்றி
திருக்கழுக்குன்றில் செல்வா போற்றி
பொருப்பு அமர் பூவணத்து அரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி - திருவாசகம் 192

" என்று திருப்பூவணநாதரைப் போற்றி வணங்கியுள்ளார்.

(3) **திருக்கோவையார்** என வழங்கும் திருச்சிற்றம்பலக் கோவையாரில் இரண்டு பாடல்களில் திருப்பூவணம் பாடப்பெற்றுள்ளது.

பாடல் வரிசை எண் 305.

மணம் சிறப்புரைத்தல் - 7. கற்புப் பயப்புரைத்தல்

"சிற்பம் திகழ்தரு திண்மதில் தில்லைச்சிற் றம்பலத்துப்
பொற்பந்தி யன்ன சடையவன் **பூவணம்** அன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனும் கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவன் ஈர்ங்களிறே"

தெளிவுரை - நுண்தொழில் விளங்குகிற திண்ணிய மதில் சூழ்ந்த பெரும்பற்றப்புலியூர்ச் சிற்றம்பலத்து உளனாகிய பொன் தகட்டு நிறையை ஒத்தத் திருச்சடையை உடையவனுடைய திருப்பூவணத்தை ஒத்த பொன்னினுடைய கற்பு அந்திக் காலத்து வடபால் தோன்றும் அருந்ததி கற்பையும் செயிக்கும்.

(4) பாடல் வரிசை எண் 338.

பொருள் வயின் பிரிவு - 7. பிரிந்தமை கூறல்

தென்மாத் திசைவசை தீர்தரத் தில்லைச்சிற் றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரி யாடும் இறைதிகழும்
பொன்மாப் புரிசைப் பொழில்**திருப் பூவணம்** அன்னபொன்னே
வன்மாக் களிற்றொடு சென்றனர் இன்றுநம் மன்னவரே.

தெளிவுரை - மிக்க தென்திசையிலுள்ள குற்றம் நீங்கப் பெரும்பற்றப் புலியூரில் திருச்சிற்றம்பலத்தில் தூயதல்லாத என்னுடைய நாய்த்தலையிலே திருவடிகளை வைத்தும் எல்லார்க்கும் தண்ணளி செய்கிற சீகரத்திலே நெருப்பை வைத்தும் ஆடினான். பொன்னாற் செய்த பெரிய மதிலாற் சூழப்பட்ட பொழிலாற் சிறந்த திருப்பூவணத்தை ஒத்த பொன்னே! வலியும் பெருமயும் உடைய யானையுடனே இன்று நம் மன்னவர் போனார். என்ன, போர்க்குச் சிறந்தது யானையாதலால் கடுக வினை முடித்து மீள்வர் என்பது கருத்து.

21.6 கருவூர்த் தேவர் பாடியது (ஒன்பதாம் திருமுறை)

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

திருவருள் புரிந்தா ளாண்டு கொண் டிங்ஙன்
சிறியனுக் கினயது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தருநின்
பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் - 144)

பாம்பணைத் துயின்றோ னயன்முதற் றேவர்
பன்னெடுங் காலநிற் காண்பா
னேம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வானளவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் - 145)

கரைகட லொலியிற் றமருகத் தரையிற்
கையினிற் கட்டிய கயிற்றா
லிருதலை யொருநா வியங்கவந் தொருநா
ளிருந்திடா யெங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்க மாவணவீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் - 146)

கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கினேற் கங்ங
னுண்ணியை யெனினு நம்ப நின்பெருமை
நுண்ணிமை யிறந்தமை யறிவன்
மண்ணியன் மரபிற் றங்கிருண் மொழுப்பின்

வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளி ராவண வீதிப்
பூவணங் கோயில் கொண் டாயே. (பாடல் - 147)

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்து
னடியிணை யிரண்டு மடையுமா றடைந்தே
னருள்செய்வா யருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகம்
புடைகிடந் திலங்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் - 148)

செம்மனக் கிழவோ ரன்பு தாஎன்றுன்
சேவடி பார்த்திருந் தலச
வெம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானா
ரென்னுடை யடிமைதானி யாதே
யம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
வரிவைய ரவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலு மாவண வீதிப்
பூவணங் கோயில் கொண் டாயே. (பாடல் - 149)

சொன்னவின் முறைநான் காரண மு ணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று
கன்னவின் மனத்தென் கண்வலைப் படுமிக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் - 150)

பூவணங் கோயில் கொண்டெனை யாண்ட
புனிதனை வனிதை பாகனை வெண்
கோவணங் கொண்டு வெண்டலை யேந்தும்
குழகனை யழகெலா நிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியு

திகழ்கரு வூரனே னுரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன துருவமா குவரே. (பாடல் - 151)
திருச்சிற்றம்பலம்

--

21.7 திருப்பூவணத் திருத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப் பாடல்கள்

பூவண மேவும் பூவண நாதர்

பூவண நாயகி புந்திகூர் வைகை (சிவ.)

பூவணமும் புறம்பயமும் பொருந்தினானை – ஆலம் பொழில் . திரு நா.

பூவணத்தவன் புண்ணியன் - குடமூக்கு – திருநா.

பூவணமோ புறம்பயமோ வன்றாயிற்றால் - ஆரூர். திருநா.

புகலூரும் பூவணமும் பொருந்தினான்காண் - ஆருர். திருநா.

பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை – வெண்ணியூர். திருநா.

புகலூரும் பூவணமும் பொருந்தினாரும் - வெண்ணியூர். திருநா.

பொதியிலானே பூவணத்தாய் - வலிவலம், திருஞா,

திருச்செம்பொன்பள்ளி திருப்பூவணம் - அதிகை. திருநா

தென்புறம் பயம் பூவணம் பூழியூரும் - பொது, திருஞா

புத்தூருறையும் புனிதனைப் பூவணத் தெம் போரேற்றை – பொது. திருநா

பூவணக் கிழவனாரை – பொது, திருநா

புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர் - பொது. திருநா

--

தனித் தேவாரப் பாடல்களில் திருப்பூவணம்

பொதியிலானே பூவணத்தாய் பொன்றிகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர் சித்தம் பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியரென் றிவர்கள்
மதியலாதா ரென் செய்வாரோ வலிவலமே யவனே

- வலிவலம். திருஞானசம்பந்தர்

குலாவுதிங்கட்சடையான் குளிரும் பரிதிநியமம்
போற்றூரடி யார்வழி பாடொழியாத் தென்
புறம்பயம் பூவணம் பூழியூரும்
காற்றூர்வரை யன்றெடுத் தான்முடிதோ
ணெரித்தானுறை கோயிலென் றென்றுநீகருதே

- பொது. திருஞானசம்பந்தர்

கோவணமுடுத்தவாறுங் கோளர வசைத்தவாறும்
தீவணச் சாம்பர்பூசித் திருவுரு விருந்தவாறும்
பூவணக் கிழவனாரைப் புலியுரி யரையனாரை
ஏவணச் சிலையினாரை யாவரே யெழுதுவாரே

– பொது. திருநாவுக்கரசர்

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட முக்கிலே

தேனார் புனற்கெடில வீரட்டமும்
திருச்செம்பொன் பள்ளி திருப்பூவணம்
வானோர் வணங்கும் மணஞ்சேரியும்
மதிலுஞ்சை மாகாளம் வாரணாசி
ஏனோர்க ளேத்தும் வெகு ளீச்சரம்
இலங்கார் பருப்பதத்தோ டேணார் சோலைக்
கானார் மயிலார் கருமாரியும்
கறைமிடற்றார் தம்முடைய காப்புக்களே

கோவணமோ தோலோ உடையாவது
கொல்லேறோ வேழமோ ஊர்வதுதான்
பூவணமோ புறம்பயமோ அன்றா யிற்றான்
பொருந்தாதார் வாழ்க்கை திருந்தாமையே
தீவணத்த செஞ்சடைமேல் திங்கள் சூடித்
திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்
ஆவணமோ ஒற்றியோ அம்மா னார்தாம்
அறியேன்மற் றூராமா றாரூர் தானே

பொன்நலத்த நறுங் கொன்றைச் சடையி னான்காண்
புகலூரும் பூவணமும் பொருந்தி னான்காண்
மின்நலத்த நுண்ணிடையாள் பாகத் தான்காண்
வேதியன்காண் வெண்புரிநூல்மார்பி னான்காண்
கொன்னலத்த மூவிலைவேல் ஏந்தி னான்காண்
கோலமா நீறணிந்த மேனி யான்காண்
செந்நலத்த வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே

பொருங்கைமத கரியுரிவைப் போர்வை யானைப்
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தி னானைக்
கரும்புதரு கட்டியையின் னமிர்தைத் தேனைக்
காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
இருங்கனக மதிலாரூ மூலட் டானத்
தெழுந்தருளி யிருந்தானை யிமையோ ரேத்தும்
அருந்தவனை அரநெறியி லப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்தவாறே

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூ ருள்ளார்
பூவணத்தார் புலிவலத்தார் வலியின் மிக்க
தன்கூர்மை கருதிவரை யெடுக்க லுற்றான்
தலைகளொடு மலைகளன்ன தாளுந் தோளும்
பொன்கூருங் கழலடியோர் விரலா லூன்றிப்
பொருப்பதன்கீழ் நெரித்தருள் செய் புவனநாதர்
மின்கூருஞ் சடைமுடியார் விடையின் பாகர்
வீழி மிழலையே மேவினாரே

பொன்னிலங்கு கொன்றையந்தார் மாலை சூடிப்
புகலூரும் பூவணமும் பொருந்தி னாருங்
கொன்னிலங்கு மூவிலைவே லேந்தி னாருங்
குளிராந்த செஞ்சடை யெங் குழக னாருந்
தென்னிலங்கை மன்னவர்கோன் சிரங்கள் பத்துத்
திருவிரலா லடத்தவனுக் கருள்செய் தாரும்
மின்னலங்கு நுண்ணிடையாள் பாகத் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தானத்தும்
நிலவு பெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே

ஐந்தலைய நாகவணைக் கிடந்த மாலோ
டயன்தேடி நாடரிய அம்மான் தன்னைப்
பந்தணவு மெல்விரலாள் பாகத் தானைப்
பராய்த்துறையும் வெண் காடும்பயின்றான் தன்னைப்
பொந்துடைய வெண்டலையிற் பலிகொள் வானைப்
பூவணமும் புறம்பயமும் பொருந்தி னானைச்
சிந்தியவெந் தீவினைகள் தீர்ப்பான தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே

--

மெய்கண்டதேவர் வாழ்த்து

பொய்கண்டவெவையுமெனப் பொல்லாத கணபதிதான் புகன்று பின்னர்
மைகண்டத்தடக்குமரன் வழங்குசிவஞானநூல்வகுத்துக் காட்டக்
கைகண்டபின்னருளே கண்ணாகக் கண்ட பெண்ணைப் புனல்சூழ் வெண்ணை
மெய்கண்ட தேவனடிகை கொண்டு கூப்பிமுடிமீது சேர்ப்பாம்.

திருத்தொண்டர் வாழ்த்து

பார்மேவுசைவதப் பாலோராய்ப்பரசமய நிராகரித்துப்

21.8 அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ்

திருப்புகழ் பாடல் எண். 550

தனத்தான தத்தத் தனதானா
தனத்தான தத்தத் தனதானா

அறப்பாவை அத்தற் கருள்பாலா
அளித்தாது வெட்சித் திருமார்பா
குறப்பாவை அற்பிற் புணர்வோனே
குலத்தேவ வர்க்கப் பரிபாலா
மறப்பாத கத்துற் றுழல்வேனோ
மலர்த்தாள்வ ழுத்தக் க்ருபையீவாய்
சிறப்பான முத்திக் கொருவாழ்வே
திருப்பூவ ணத்திற் பெருமாளே

திருப்புகழ் பாடல் எண். 551

தானனதான தானனதான தானனதான தனதான

வானவராதி மேவயோர்சிறை மாவலியேசெய் திடுசூரன்
மார்பிருகூற தாய்விடவாரி வாய்விடவேலை விடுதீரா

கானவர்பாவை காதலனான காசணிபார தனமார்பா
காலனைமோது காலகபால காளகளேசர் தருபாலா
தேனமர்நீப மாலைவிடாத சேவகஞான முதல்வோனே
தீயகுணாதி பாவிநினாது சேவடிகாண அருள்வாயே
போனகசாலை யாதுலர்வாழ வீதிகடோறும் நனிமேவு
பூவணமான மாநகர்வாழு நாதகுகேச பெருமாளே

(காளகளேசர் = விசத்தைக் கண்டத்திலுடையவர்
போனகம் = அன்னம்)

திருப்புகழ் பாடல் எண். 552

தந்தத்தத் தானன தானன
தந்தத்தத் தானன தானன
தந்தத்தத் தானன தானன தனதானா

பந்தப்பொற் பாரப யோதர
முந்தச்சிற் றாடைசெய் மேகலை
பண்புற்றுத் தாளொடு வீசிய துகிலோடே

பண்டைச்சிற் சேறியில் வீதியில்
கண்டிச்சித் தாரொடு மேவிடு
பங்குக்கைக் காசுகொள் வேசையர் பனிநீர்தோய்

கொந்துச்சிப் பூவணி தோகையர்
கந்தக்கைத் தாமரை யாலடி
கும்பிட்டுப் பாடிசை வீணையர் அநுராகங்

கொண்டுற்றுப் பாயலின் மூழ்கிய

சண்டிச்சிச் சீயென வாழ்துயர்
குன்றப்பொற் பாதக்ரு பாநிதி அருள்வாயே

அந்தத்துக் காதியு மாகியு
மந்திக்குட் டானவ னானவ

னண்டத்தப் பாலுற மாமணி ஒளிவீசும்

அங்கத்தைப் பாவைசெய் தேயுயர்

சங்கத்திற் றேர்தமி ழோதிட

அண்டிக்கிட் டார்கழு வேறினர் ஒருகோடி

சந்தத்திக் காளுநி சாசரர்
வெந்துட்கத் தூளிப டாமெழ

சண்டைச்சொற் றார்பட வேவயில் விடுவோனே

தங்கச்சக்	ராயுதர்	வானவர்	
வந்திக்கப்	பேரரு	ளேதிகழ்	
தம்பப்பொற்	பூவண	மேவிய	பெருமாளே

பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம்

21.9 **இரசவாதஞ் செய்த படலம்** (36ஆவது படலம்)

பாடல் வரிசை எண் 1856 முதல் 1885 முடிய

21.10 திருவாலவாய்க் காண்டம் (49ஆவது படலம்)

(வங்கிய சேகர மன்னனுக்கு மதுரையின் எல்லைகளைக் காட்டுதல்)

பாடல் வரிசை எண் 2338 முதல் *2349 முடிய*

21.11 திருவிளையாடற் புராணம் - கழுவேற்றிய திருவிளையாடல்

வேசமுற விருந்த கழு திரைமுடிந்த வடமின்றும்
பூசுரர்கள் பணிந்தேத்தும் பூவணநன்னகர் மருங்கிற்
காசின் மேல் விளங்கியது கழுவர் படைவீடெனவே

- செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி.

திருவாலவாயுடையார் - பாடல் எண்.50

21.12 மீனாட்சியம்மை குறம்

கூடல்புன வாயில்கொடுங் குன்றுபரங் குன்று
குற்றாலம் ஆப்பனூர் பூவணநெல் வேலி
ஏடகமா டானைதிருக் கானப்பேர் சுழியல்
இராமேசந் திருப்புத்தூ ரிவைமுதலாந் தலங்கள்
நாடியெங்க ளங்கயற்கண் ணாண்டதமிழ்ப் பாண்டி
நன்னாடும் பிறநாடும் என்னாடதாகக்
காடுமலையுந் திரிந்து குறி சொல்லிக் காலங்
கழித்தேனென் குறவனுக்குங் கஞ்சிவாரம்மே

- (குமரகுருபரசுவாமிகள் பாடியது)

குமரகுருபர சுவாமிகள், மதுரை திருமலைநாயக்கரின் அரசவையில் "மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்" பாடியருளியவர். மேலும், "கந்தர் கலிவெண்பா", "மதுரைக் கலம்பகம்" ஆகிய நூல்களையும் இயற்றிய மகான்.

இவர் தனது அடியார்கள் கூட்டத்துடன் திருப்பூவணம் வந்து வழிபாடு செய்துள்ளார்[39].

21.13 அபிராமி அந்தாதி - 'அபிராமி பட்டர்' அருளிச் செய்த அபிராமி அந்தாதியில் 91 ஆவது பாடலில், திருப்பூவணம் அருள்மிகு மின்னனையாளையும், பொன்னனையாளையும் பாடியுள்ளார்.

*"மெல்லிய நுண் இடை **மின்னனையாளை**[40], விரிசடையோன்*
*புல்லிய மென்முலை **பொன்னனையாளைப்**[41] புகழ்ந்துமறை*
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்[42]
பல்லியம்[43] ஆர்த்து எழ, வெண்பகடு ஊரும் பதம் தருமே[44] ".

21.14 பதினோராந் திருமுறை (நம்பியாண்டார் நம்பி தொகுப்பு)

8. பரணதேவ நாயனார் பாசுரங்கள்

8.1 பரணதேவ நாயனார் அருளிச் செய்த சிவபெருமான் திருவந்தாதி (பாடல் வரிசை எண் 672 - 772) பாடல் எண் 716

ஆர்துணையா ஆங்கிருப்ப தம்பலவா அஞ்சலுமை
ஆர்துணையா ஆனை உரிமூடி - ஆர்துணையாம்
பூவணத்தாய் பூதப் படையாளி பொங்கொளியாய்
பூவணத்தாய் என்னில் புகல் (பாடல் எண் 45)

வேசமுற விருந்த கழு திரைமுடிந்த வடமின்றும்
பூசுரர்கள் பணிந்தேத்தும் பூவணநன்னகர் மருங்கிற்
காசின் மேல் விளங்கியது கழுவர் படைவீடெனவே

- செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். கழுவேறிய திருவிளையாடல் - பா,50

---

[39] http://www.geocities.com/shivaperuman/lifeandworkkumaraguru.html

[40] மின்னனையாள் = திருப்பூவணத்தில் அம்பாளின் திருநாமம்.


[41] பொன்னனையாள் = திருப்பூவணத்தில் நடனமாது. இவர் நடத்திய அன்னதானத்தில் அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சித்தராகத் தோன்றி இரசவாதம் செய்து 36ஆவது திருவிளையாடலை நடத்தி அருளிச் செய்தார்.

[42] "பூவணம் கண்டவர் அடிதொழுது ஏத்தல் கன்மமே" என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு.

[43] பல்லியம் =பல்வகை வாத்தியங்கள் சேர்ந்து ஒலிக்கும் இசை.

[44] வெள்ளையானை ஐராவதத்தின் மேல் ஏறி வரும் இந்திர பதவியைத் தரும்.

21.15 திருப்பூவணத் தல மகாத்மியம் -


உ

சிவமயம்.

திருப்பூவணத்தல மகாத்மியம்.

இயற்றியவர்;

K. உமையொருபாகம் பிள்ளை அவர்கள்

முன்னாள் ஆசிரிய மானேஜர்

செங்கங்குளம் (சாத்தூர் தாலூகா)

வெளியிட்டவர்:

G. கிருஷ்ணய்யர் அவர்கள்

உரிமையாளர் "ஜோதி கிருஷ்ணு கபே"

திருப்புவணம்.

சாத்தூர் தாலூகா கொங்கங்குளம் K. உமையொருபாகம் பிள்ளை அவர்கள் (முன்னாள் ஆசிரிய மானேஜர்) அவர்கள் திருப்பூவணத் தல மகாத்மியம் என்ற பெயரில் புராணக்கதைகளை 15 பாடல்களில் பாடியுள்ளார். இதனைத் திருப்பூவணம் ஜோதிகிருஷ்ணா கபே உரிமையாளர் ஜி.கிருஷ்ணய்யர் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

விநாயகர் துதி

உள்ளமெனுங்கூடத்தி லூக்கமெனுந்தருநிறுவி உறுதியாகத்
தள்ளறியஅன்பென்னுந் தொடர்பூட்டி இடர்படுத்தித்தருகட்பாசக்
கள்ளவினைப்பசுபோதக்கவள மிடக்களித்துண்டு கருணைஎன்னும்
வெள்ளமுதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

(பாரதம்)

முருகன்துதி

ஆடும்பரிவேலணி சேவலெனப்
பாடும்பணியேபணியாயருள்வாய்
தேடுங்கயமாமுகனைச் செருவிற்

சாடுந்தனியானை சகோதரனே (அருணகிரி)

சரஸ்வதி துதி

வெள்ளைக்கலையுடுத்தி வெள்ளைப்பணிபூண்டு

வெள்ளைக்கமலத்தே வீற்றிருப்பாள் – வெள்ளை

அரியாசனத்தில் அரசரோடென்னைச்

சரியாசனத்தில் வைத்ததாய்.

திருப்பூவணத் தல மான்மியம்.

பல்லவி.

பூவனேஸ்வரா ....திருப்......(பூ)

அநுபல்லவி

நின்., பொன்னடிமலர் போற்றினேன்றிருப் (பூ)

சரணம்

பாரிசாதமர நீழலிலெழுந்த

பரம்பொருளே? எனப் பகலவன் பணிந்தான்

தாரணிமாலுக்கோர் சக்கரம் அணிந்தாய்

தருமஞ்சன்., தாதாஸ்தியே

மருவுந்தண் மலராகிக்யி (பூ)

உன்னையே மறந் தம்மையை வழிபட்ட

உயர்திரனாசனன் அரக்கனாய்ப் பிறந்திட

உண்மையை நாரதருணர்ந்துரை செய்திட

ஓர்ந்தயனின் றீர்த்தமாடி

சார்ந்தபழி தீர்ந்தான் பாடிப் (பூ)

உற்பலாங்கி யென்பாளை மணந்திட

ஓர்ந்த இருபதாடவரும் மடிந்திட

விற்பனைமின்னம்மையே, கதியென்றிட

வேதன் விதியினை மாற்றியே

மாதின் மணம் நிறைவேற்றினை (பூ)

ஊர்வசியையுற்று நோக்கிய நான்முகன்

உறுபினிதீரநின், ஆலடிமேவியுன்

காருறு ஆலயங்கவின் றீர்த்தண்டமும்

கட்டித்தவ, முற்றே, வரம்

பெற்றுப் பயனுற்றான் றிருப் (பூ)

வாலகில்லிய முனிவரர்தனை மதியாத

வன்பழி தீரமாமலரம்மை மாலுடன்

பூவணத்துனைப் போற்றிப் புனித நீராடவே
பொன்மொழிலக்குமி தீர்த்தமே
அன்னைமுனாக்கினளார்க்குமே (பூ)

தக்கன்மகளுமை, தவஞ்செய மணந்து
தம்பதியர்கைலை,, சென்றிடத்சினந்து
வெட்கியே தக்கன்செய், வேள்வியையறிந்து
வீரபுத்திரனா, லவன்சிரம்
வீழ்த்தி வேள்வியுமேயொழித்தனை (பூ)

தமக்கெதிராய்த் தக்கன்றான் செயும் வேள்வியை
தடைசெயச் செல்லுமுன், விடைபெறாவம்பிகை
யுனைப் பரிவாய்பாரி, சாதமரத்தின்கீழ்
முனைத்தாய் பெருநிதியே, பிழை
பொறுத்தாளெனவே சார்ந்தனள் (பூ)

சுச்தோதி தன் தந்தை, தேவவர்மாவிற்கும்
சோதியிற்கலந்த்தன், முன்னோனைவர்க்கும்
நற்கதியருள்க, வென்றோர்லிங்கம் நாட்டியே
துதிமாலைகள் பல சாற்றியே
கதிதாவென வுனைப் போற்றினான் (பூ)

இந்திரதீர்த்தம், மணிகுண்டதீர்த்தம்
எழிலுறுவைகையில் வசிட்டரின் றீர்த்தம்
இலக்குமி தீர்த்தமும் பிர்ம தீர்த்தம்
எரிசூரிய, சந்திர தீர்த்தமே
அறியாதுறு, பழியறத் தீர்க்குமே (பூ)

இல்லறந்துறந்து எதேச்சையாயலைந்து
நல்லறமனைவி, மக்களோடிணைந்து
வள்ளலெனும் நளன் உன்னையேயடைந்து
வைகாசித்தேர்த்திருவிழா
வை,நேசித்தே தொடங்கினான் (பூ)

மன்றுளே நர்த்தனங் கண்டெதிர்த்தாடிய
மாபழியறக் காளிமலர்லிங்கம் நாட்டினாள்,
பொன்றாவரமுற்ற, புனிதனாம் மார்க்கண்டன்
பூம்பால் பழம்பஞ்சாமிர்தத்
தேன்மாரி பெய்தே போற்றினான் (பூ)

அப்பர் சுந்தரர் சம்பந்தர் நாயன்மார்
அருட்பரமானந்தத் தேவார மோதினார்
செப்பருங் கருவூரர் திருவிசைப்பாவினால்
சிந்தித்துனையே பாடினார்

பந்தப்பிணியே சாடினார் (பூ)

தென்னாட்டின் முடிவேந்தர் சேரபாண்டியசோழர்
தன்னோடாரூரர் இத்தல தரிசனங்கண்டு

பொன்பொழில் நிறை திருப்பூவணமீதோ, வென்

றேற்றித்துதி சாற்றி மலர்

தூற்றிப் பணிந்தே பாடினார் (பூ)

உன்னடியார்கட் குணவிட்ட வேசியாம்
மின்னனையாளுனைப் பொன்னுரு வாக்கிட

எண்ணமிட்டேங்கவே, எழிற்சித்தராய் வந்து

(ரசவாதப்) பொன்னீந்துன் கன்னத்தொரு

சின்னஞ் செய்திட வோர்ந்தனை (பூ)

அண்டமுண்டோனும் அயனுங் காணறியா
ஆதியே வுன்னடியாரிடர்களை வாய்
தொண்டனுமை யொருபாக முன்னருளால்
துதிபூவணத் தலமான்மியம்

மதி கூடியவரை யோதினேன் (பூ)

பூவணநாதர் சகாயம்
மங்களம்

சீதாலெட்சுமி அச்சகம், திருப்பூவணம்

21.16 திருப்பூவணநாதர் உலா - உலா என்பது தமிழில் உள்ள பலவகைப் பிரபந்தங்களுள் ஒருவகை நூல். பேதை முதல் பேரிளம் பெண் ஈறாகிய ஏழுபருவ மாதர்களும் தலைவனைக் கண்டு, காதல் கூறிடும்படியாக, வீதியில் தலைவன் பவனி வந்ததைக் கலிவெண்பாவால் பாடுவதாகும். இங்கே பாட்டுடைத் தலைவன் திருப்பூவண உற்சவராகிய "அழகிய நாயகன்" ஆவார். திருப்பூவணத்தில் தேர்த்திருவிழா அன்று, உற்சவர் கோயிலில் இருந்து புறப்பட்டு தேரில் ஏறி வலம் வந்து, கோயிலை அடைந்து பள்ளியறைக்கு எழுந்தருளும் வரை நடைபெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்நூல் உள்ளது. இத் திருத் தலவுலா "திருப்பூவை யுலா" எனவும் வழங்கும். திருப்பூவணநாதருலாவையும் கந்தசாமிப் புலவரே பாடியுள்ளார்.

சுபம்

வைகை ஆற்றின் வடகரையில் திருஞானசம்பந்தர் நின்று பாடிய இடத்தில்



உள்ள நந்தி

21.17 **திருநந்திதேவர் வாழ்த்து**

திகழ் மகுட சேகரமும், சிறுபிறையும் நுதல்
கண்ணும், செங்கைநான்கும்,
அகிழ்சுரிகைப் பிரம்பினுடன் மான்மழுவும்
படைத்த அந்தி வண்ண, நண்ணி,
இகபர நல்கும் எம் பெருமான் இணையடி
வீழ்ந்த அயன் முதலோர் எந்த ஞான்றும்
புகழ் கயிலைமலைக் காவல்பூண்ட
திருநந்தி பதம், புந்தி கொள்வாம்.

21.18 - பின்னிணைப்பு

நூலாசிரியர் குறிப்பு

அருள்மிகு பூரணை புஷ்கலை உடனாய புலிக்கரை ஐயனார் துணை



காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,

28A, குருநாதர்கோயில் தெரு,

கோட்டையூர் - 630 106

தொடர்பு எண் - 94435 01912, 824 826 6418,

மின்னஞ்சல் - kalairajan26@gmail.com

கல்வித் தகுதி

B.Sc. (Mathematics), M.A., (Tamil), M.Phil., (Tamil), Ph.D., (Tamil), திருப்பூவணப் புராணம் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.

அலுவலகப் பணி - துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி – 630 003

காசி பாதயாத்திரை - வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரைகள்.

(1) இராமேச்சுரம் காசி பாதயாத்திரை 110 நாட்கள் நடைப் பயணம்.

காசிஸ்ரீ பட்டம் - யாத்திரையின் நிறைவாக புரட்டாசி 3 (19.09.2014) வெள்ளிக் கிழமையன்று காசிதேவஸ்தான அலுவலகத்தில், காசி தேவஸ்தான அலுவலகத்தின் நிர்வாக முதன்மைச் செயல்அலுவலர் அவர்களால் ***“காசி ஸ்ரீ” பட்டம்*** வழங்கப் பெற்றுள்ளார். (2) நாக்பூர் - காசி பாதயாத்திரை. 38 நாட்கள் நடைப் பயணம்.

அறுபடைவீடு பாதயாத்திரை - வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரை. பிள்ளையார்பட்டியிலிருந்து புறப்பட்டு, பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருச்செந்தூர்

இரண்டுமுறை அறுபடைவீடு பாதயாத்திரை – 1) 53 நாட்கள் (07.04.2016 முதல் 30.05.2016 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்,
2) 60 நாட்கள் (08.06.2017 முதல் 06.08.2017 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்.

மதுரை மானாமதுரை ஆன்மிகப் பாத யாத்திரைகள் -

மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் தலைமையில்,
மதுரையிலிருந்து வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை

இரண்டு முறை (2014, மாசி பூரணை) . (2015, மாசி பூரணை).

ஆன்மிகப் பணிகள் - 1) திருப்பூவணம் கோயிலில் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் கூடுதல் செயலாளர், 2) திருப்பூவணம் ஆடித்தபசு மண்டபம் திருப்பணி ஒருங்கிணைப்பாளர், 3) சக்குடி கோயில் புனர்நிர்மாணம் துவக்கிடத் தூண்டுதலான பணிகள் செய்தமை .4) ஆராய்ச்சி அமைப்பாளர், திருவிளையாடற் புராண ஆராய்ச்சி மையம், மதுரை

எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்



1) திருப்பூவணக் காசி - திருப்பூவணம் திருக்கோயில் அமைப்பும் சிறப்பும் மற்றும் திருக்கோயில் தொடர்பான பாடல்கள், திருப்பூவணமானது எவ்வாறு காசியிலும் சிறந்தது என்பதற்கான விளக்கங்கள் உள்ளன. இந்நூல் திருப்பதி

தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 24-09-2007 அன்று திருப்பூவணம் கோயிலில் தவத்திரு குன்றக்குடிப் பொன்னம்பல அடிகளார் அவர்களால், மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள் முன்னிலையில் வெளியிடப்பெற்றது.

2) திருப்பூவணப் புராணம் - 1620 ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்துப் பாடப் பெற்ற திருப்பூவணப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் நாள் (15.03.2009) அன்று திருப்பூவணம் கோயிலில் மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்களால் வெளியிடப் பெற்றது). ஐயா பட்டமுத்து அவர்கள் முதல்பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்.



இந்நூலாசிரியரின் இணைய நண்பர் திரு.சீறினிவாசன் அவர்களது பெருமுயற்சியால் https://tamil.pratilipi.com/story/திருப்பூவணப்-புராணம்-lphz8cjwodvi என்ற இணையதளத்தில் திருப்பூவணப் புராணம் (thirupoovana-puraanam) வெளியிடப்பெற்றுள்ளது.

3) பொழில் திகழும் பூவணம்- திருப்பூவணம் தொடர்பான அனைத்து விபரங்களையும் தொகுத்து திருப்பூவணம் கோட்டை வழக்கறிஞரும், பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் மேனாள் செயலாளருமான

திரு.சண்முகநாதன் அவர்களது பொருளுதவியுடன் இந்நூல் சிறு கையேடாக வெளியிடப் பெற்றுள்ளது.

4) காளையார்கோயில் தலபுராணம் (கதைச்சுருக்கம்).



முனைவர் நா.வள்ளி அவர்களும், இவரது முனைவர் பட்ட ஆய்வாளரான முனைவர் கி.காளைராசன் அவர்களும் காளையார்கோயில் புராணத்திற்கு உரைச்சுருக்கம் எழுதி காளையார்கோயில் தலபுராணம் என்ற பெயரில் நூலாக்கம் செய்து, பங்குனி 13 (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பெற்றது. தேவகோட்டை ஜமீன்தார் அள.அரு.சோம.நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்கள் மற்றும் ஸ்ரீகாசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் முன்னிலை வகித்தனர். தேவகோட்டை இலக்கியமேகம் ஸ்ரீனிவாசன் அவர்கள் நூலை அறிமுகம் செய்தார். ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளைத் தலைவர் தேவகோட்டை பேராசிரியர் இராம. திண்ணப்பன் அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். காளையார்கோயில் பரம்பரை ஸ்தானிகம் திரு. காளீசுவர குருக்கள் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து தேவகோட்டை உ.மு.பழ.ராம.பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், காசீஸ்ரீ சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களும், சென்னை உமாபதிப்பகம் திரு.இராம. லெட்சுமணன் செட்டியார் அவர்களும் மற்றும் திருக்கானப்பேர் அன்பர் குழுவின் தலைவர் பாஸ்கரன் அவர்களும், செயல்தலைவர் வெல்டிங் ஏ.கண்ணன் அவர்களும், சிவனடியார் கா. தவமணி அவர்களும், சிவகங்கை

ஈசாயோகா மையம் திரு.மாயன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். திருக்கானப்பேர் சூர்யா கண்ஸ்ட்ரக்சன்ஸ் டி.என். கருணாநிதி அவர்கள் நன்றி கூறினார்.




திருப்பூவணப் புராணம் ஒலிப்பதிவு குறுந்தகடு வெளியிடுதல்
படத்தில் - வேதியாரேந்தல் விலக்கு அருள்மிகு ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் வெளியிட
காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் நா.வள்ளி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

ஒலிக் குறுந்தகடுகள் வெளியீடு . திருப்பூவணம் தேவாரப்பாடல்கள் அடங்கிய ஒலிக்குறுந்தகடும், திருப்பூவணப் புராணக் கதைகள் அடங்கிய குறுந்தகடும் என இரண்டு குறுந்தகடுகள் இந்நூலாசிரியரால் வெளியிடப் பெற்றுள்ளன.

5) எழுத்தில், பிழைத்திருத்தத்தில், அச்சில் உள்ள நூல்கள்

1) திருப்பூவண நாதருலா (மூலமும் உரையும்), 2) திருஆப்புடையார் புராணம், 3) காளையார்கோயில் புராணம் (மூலமும் உரையும்), 4) காளையார்கோயில் கல்வெட்டுகள், 5) திருவாடானைப் புராணம், 6) சூரைமாநகர் புராணம் (மூலமும் உரையும்), 7) காஞ்சிவனக் கருப்பர் கதை (ஓலைச்சுவடியில் உள்ளபடி), 8) மருதூர் அந்தாதி (ஓலைச் சுவடியில்

உள்ளபடி). 9) ***உலகம் உருவானது எப்படி? கடல்கொண்ட குமரி - கங்கன் கங்கை கடல்வெள்ளம்,*** புவியியல் புத்தகம்.



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் திரு. இளங்கோ முன்னிலையில், பேராசிரியர் இராம.திண்ணப்பன் செட்டியார் அவர்களிடமிருந்து, திருப்பூவணம் பதிகங்களை ஓதுவார் திரு. முத்துக்குமார் அவர்களது குழுவினருடன் சேர்ந்து பாடிய ஒலிப்பதிவு குறுந்தகட்டைத் திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. செந்தில் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

கட்டுரைகள் - முனைவர் கி. காளைராசன் அவர்களது படைப்புகளை ஆன்மிகம், ஆன்மிக அறிவியல் மற்றும் திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவருடைய கட்டுரைகள் தினபூமி, தினமலர், மஞ்சரி, தமிழ் மாருதம், செந்தமிழ்ச் செல்வி, ஓம்சக்தி, மெய்கண்டார், கண்ணியம் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. சமீபத்தில் வெளியான கட்டுரை - "கீழடியில் கிடைத்தனவும், கிடைக்காதனவும்" (தினமலர் 18.08.2020)

ஆன்மிக அறிவியல் கட்டுரைகள் - 1) சிவனும் பெருமாளும் ACயும் DCயும் (இறைவடிவங்களும் மின்சாரத்தின் வடிவங்களும் ஒன்றாய் உள்ளன என்று விளக்கும் கட்டுரை).

2) ஆடல்வல்லானே அறிவியல் இறைவன் (தனி ஊசல் விதிகளுக்கு ஏற்ப ஆடல்வல்லானின் (நடராசரின்) ஆட்டம் உள்ளது என்ற விளக்கக் கட்டுரை)..

3) விஞ்ஞானத் தொலைகாட்சிப்பெட்டியும் மெய்ஞ்ஞானக் கோயில்களும் - தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள காட்சிக் குழாயின் (Picture Tube) வடிவமும் செயலும் நடராசரின் வடிவத்துடனும் செயலுடனும் ஒத்து இருப்பதை விளக்கும் கட்டுரை.

4) மதுரைக்கு வந்த சுனாமி - பிரளயகாலத்தில் சுனாமி ஏற்பட்டு நான்கு முறை மதுரைக்கு வந்துள்ளது என்பதைத் திருவிளையாடற் புராணம் கொண்டு விளக்கும் கட்டுரை.

நன்றி - இந்தப் புத்தகத்தில் எழுத்துப் பிழைகளையும், தட்டச்சுப் பிழைகளையும் திருத்திக் கொடுத்து உதவிய அழகப்பா பல்கலைக்கழக உதவியாளர் திருமதி இரா. பிரபாவதி சிவராமபாரதி அவர்களுக்கு என் நன்றி. நல்லாசிகள்.

அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள் - இந்நூலில் பிழைகள் ஏதுமிருந்தால் அவற்றை அன்புள்ளம் கொண்டு எனக்குச் சுட்டிக் காட்டிடுமாறும், கூடுதலான தகவல்கள் ஏதும் இருந்தால் அவற்றையும் கூறி உதவிடுமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்நூலை அகம் மகிழ்ந்து வாசிப்பவர்களும், அதைக் கேட்பவர்களும், சிந்தையில் கொள்பவர்களும் திருப்பூவணநாதரின் திருவருளால் உயர்வான வாழ்வு பெற்று, வளமாக நலமுடன் நீடு வாழ்ந்திட வேண்டுமென அருள்மிகு திருப்பூவணன் மின்னாள் திருவடித் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறேன்.

அன்புடன்
காசிஶ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்,
94435 01912, 824 826 6418

அன்னதானம் செய்வோம்
கண்தானம் செய்வோம்
இவ்விரண்டு தானங்களையும் சிவபெருமான் ஏற்றுக் கொள்கிறார்.

★ திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற நடனமாது அன்னதானம் செய்து வந்தாள். மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சித்தர் வடிவில் அன்னதானத்தில் தோன்றி, ***36 ஆவது திருவிளையாடலான இரசவாதம் செய்த திருவிளையாடலை*** நிகழ்த்தி அருளினார். சிவபெருமான் சித்தர் வடிவில் திருப்பூவணம் வந்து அன்னதானத்தில் கலந்து கொண்டதால், இங்கு நடைபெறும் அன்னதானத்தில் சிவபெருமானுடன் சித்தர்பெருமக்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர் என்பது ஐதீகம். இத்தகைய புகழ்பெற்ற திருப்பூவணக்காசியில் முன்னோர்கள் முத்தியடையவும், குலம் செழிக்கவும் அன்னதானம் இடுவது சிறப்புடையது.



சித்தர் வடிவில்

மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் இரசவாதம் செய்தருளியது



"கண்ணை இமை காப்பது போல" நம்மைக் காக்கும் சிவபெருமானுக்கு நாம் செய்யும் மற்றுமொரு அர்ப்பணிப்பு கண்தானம் ஆகும். நம் இறப்பிற்குப் பின் மற்றொருவர் வாழ்வில் ஒளிகாட்டக் கண்தானம் செய்வோம். இறைவனின் கருணையைப் பெறுவோம்.

திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை.
(80 G வரிவிலக்குப் பெற்றது)

Approval No: AAETT2824KF20227 Reg. No : AAETT2824KE20211

THIRUPOOVANAM SRI PONNANAIYAL ANNADHANA TRUST.
STATE BANK OF INDIA, A/C No. 307 101 34977,
IFSC : SBIN 0011 064,

THIRUPPUVANAM - PIN - 630 611, Sivagangai District.



நிறுவுனர் தலைவர் -
ஸ்ரீலஸ்ரீ மாதாஜி அவர்கள்,
அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி திருக்கோயில், வேதியாரேந்தல் விலக்கு, மானாமதுரை.

தலைவர் -
ஆங்கிலப் பேராசிரியர்
திரு இராம. திண்ணப்பன் செட்டியார், தேவகோட்டை.

துணைத்தலைவர் -
திரு பழ. சோமசுந்தரம் செட்டியார், தேவகோட்டை, (இருப்பு-மதுரை) -93606 53798

செயலாளர் - காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன், கோட்டையூர் - 94435 01912

கூடுதல் செயலாளர் - திரு. உமாசேகர், தெய்வீகப் பேரவை, திருப்பூவணம் - 94435 68005

துணைச் செயலாளர் – *திரு மு, ரவி, வெள்ளாளர் தெரு,நெல்முடிகரை, திருப்பூவணம் 9659395650*

பொருளாளர் - திரு சுவா. முத்துக் குமாரசாமி, பஜார் தெரு, கோட்டை, திருப்பூவணம் - 97913 72414